

The National High School (GIRLS) MAGAZINE

TRIPLICANE, MADRAS.

1953 — 1954

Vol. 4 No. 1

10 DEC 1956
MADRAS

SRI ANDAL

Our Inspiring Deity

சென்னை திருவல்லிக்கேணி

தேசீய உயர்தரப் பெண்கள் பாடசாலை பத்திரிகை.

மலர் 4	டிசம்பர் 1953	இதழ் 1

கடவுள் வணக்கம்

[கீதம்]

கிருபை கூர்ந்து எமைக் காக்குந் தயாளா !
கீதையை அருளிய பார்த்த சாரதே ! (கிருபை)

திருவல்லிக்கேணி வாழ் மணி வண்ணா !
நித்ய கல்யாணா ! நீயே கதி கண்ணா !

அவலைக் கொடுத்தோன் காட்டினன் வழியே ;
அருள் அன்பினை யாம் ஈந்தனம் ஹரியே ! (கிருபை)

SCHOOL MOTTO :

LOVE, SERVICE, SACRIFICE

PRAYER

THIS is my Prayer to Thee, my Lord—
Strike, strike at the root of penury in my heart.
Give me the strength lightly to bear my joys and sorrows.
Give me the strength to make my life fruitful in service
Give me the strength never to disown the poor or
bend my knees before insolent might.
Give me the strength to raise my mind high above daily trifles.
And give me the strength to surrender my strength to
Thy Will with Love.

Gitanjali.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். *அரணை மறவேல்.*

திருமாலுக் கடிமை செய். *ஆலயம் தொழுவது சாலவும் நன்று.*

குருவார விளம்பரம்

: x :

ஹிந்துக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும்
நாம் இனி கவனக்குறைவாக இருக்கக்கூடாத மூன்று விஷயங்கள்

(ஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அனுமதி பெற்ற முறை)

குடும்ப நிர்வாகமும் சீரான வாழ்க்கையும் தெய்வீக அருளும் வரவர குலைந்து வருவதைத் தடுக்கவேண்டும்.

காப்பியையும், சினிமாவையும், கற்புக்கு ஏற்படும் ஆபத்துக்களையும் கவனத்துடன் சிறிது சிறிதாகவாவது குறைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்.

1. சமீப அனுபவத்தில் அரிசி, கோதுமை, நொய்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மோர்க் கஞ்சியைக் கையாண்டால் காப்பிப் பித்து குறைந்துவிடுகிறது.

2. ஆடவர்கள் பள்ளிகளில் படிக்கும் காலம்வரைக்கும், பெண்கள் எப்பொழுதுமே, சினிமா காட்சிகளுக்கும் போகாமல் இருப்பது நலம். (ஆனால் கல்வி அபிவிருத்திக்காகக் காட்டப்படும் படங்களைப் பார்ப்பதில் தோஷமில்லை.)

3. ஆடைகள் கூடியவரை ஆடம்பரமில்லாத ரகங்கள் வாங்கப்படவேண்டும். இவ் விஷயத்தில் பணக்காரர்கள் வழிகாட்டவேண்டும்.

வீட்டுப் படிப்பில் முக்கியமாக தாய்ப்பாஷையில் உள்ள பாரதப் பதிப்பில் பீஷ்மருடைய உபதேசங்களடங்கிய அனுசாஸன பர்வம் அவசியம் சேரவேண்டும்.

நாடும் குடித்தனமும் உண்மையில் சீராக, ஹிந்துக்கள் ஒவ்வொருடைய தனித்தனியான ஒத்துழைப்பும் வேண்டும்.

இவ்விஷயங்களில் அபிப்பிராயங்கள் உள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு தயவுசெய்து எழுதவும்.

திருடாதே, ஆற்றங்கரை, குளக்கரை, கோவில், இவ்விடங்களிலும் அவைகளின் சமீபத்திலும் அசுத்தம் செய்யாதே.

ஸ்ரீ. ம. தர்ம தொண்டு சபை.

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள், சென்னை.

S. A. CITY SPORTS

2/144, Mount Road, Cathedral P. O.

MADRAS - 6.

—: X :—

Manufactures High Class Sports Goods, Nets, Carrom and Begatelle Boards, Badminton Balls, Indoor and Table Games.

★

★

Suppliers to Govt Institutions, Clubs and Dealers throughout India and abroad both in wholesale and retail.

Branches :

GUNTUR, Andhra.

HYDERABAD Dn.

The National High School (Girls) Magazine

Editor :

Miss. S. SAROJINI

Editorial Committee :

Mrs. N. SARASWATHI	Mr. S. BALASARANATHAN
Miss. K. S. SUNDARI	Mr. V. SASTRI
Mr. H. VAIDYANATHAN	Mr. M. K. SESHADRI

The Columns of the Magazine invite articles from Old Students.

CONTENTS

	PAGE		பக்கம்
Ourselves	1	அவள் யார் ?	24
Editorial Notes	2	சங்கீதமும் அதன் பெருமையும் ...	24
Our Revered President Dr. T. S. Tirumurthi ...	3	நகைச்சுவை துளிகள்	26
My Ooty Trip	5	விடுகதை	27
Riddles	5	எண்களின் வேடிக்கை	27
Home Science	7	எற்றசொல்லால் இசைக்க ...	27
From Our Children's Pen	7	அழகும் அலங்காரமும்	28
Do You Know ?	8	செஞ்சிக் கோட்டை	28
Our Staff Excursion	9	கண்டுபிடியுங்கள்	30
Can you find out !	10	குரு பக்தி	30
Rabindranath Tagore	11	உபநிஷதமும் பெண்களும் ...	31
Mahabalipuram	11	யாருக்கு உபயோகம் ?	32
Quiz	12	தஞ்சை மாநகர்	33
Selected Sayings	13	சிந்தைத் துதி	35
எம் புதிய தலைவர்	14	உத்தமர்	36
சமூகமும் பண்பும்	15	ரயில் விபத்து	37
யார் வல்லவர் ?	16	राजा श्रीहर्षः	40
எங்கள் பள்ளி அரசாங்கம்	18	॥ भीष्मकथा ॥	40
புது பொம்மை	20	भगवान् वाल्मीकिः	41
சங்ககாலமும் சோழநாடும்	21	हमारी राष्ट्र-भाषा	42

OURSELVES

We are glad to present the fourth volume of our School Magazine to the publication of which, our young pupils as well as the members of the Staff have contributed generously.

Our activities for the year 1953 began with the auspicious blessings of Dr. S. Radhakrishnan, Vice-President, Indian Republic, whom we had the honour of entertaining on the last working day of our school for the year 1952 ; The year 1953 is equally eventful like the previous years. We were fortunate to have had in our midst Sri. Jaya-Prakash Narain, Leader of the Socialist Party who addressed us on the "Ethics of Bhoodan Yagna". Sri. S. S. Vasan of Gemini, a member of our Governing Body, Sri. C. Subramaniam, Minister for Finance and Education, and several others graced us by their presence on various occasions.

That our former Headmistress, Mrs. K. K. Rukmani has left the School on personal grounds, is indeed a great loss to the Institution. She is replaced by Mrs. N. Saraswathy, who recently got married to the joy of all of us. Our hearty congratulations and sincere wishes to her for a happy married life, and a successful term of office as Headmistress.

It is with the greatest sorrow that we record our bereavement on the death of our revered President Dr. T. S. Tirumurthi, whose loss is irreparable. He had endeared himself to the hearts of all of us and we shall always treasure his memory with sincere affection. May his soul rest in peace.

Our hearty felicitations to our new President Sriman. C. R. Srinivasan, Editor, "Swadesamitran" who was unanimously co-opted by the Management. May we fervently hope and pray that our School will prosper more and more under his Presidentship.

EDITOR.

EDITORIAL NOTES

Among the notable events of the year we venture to mention only a few here, for want of space.

Before the School closed for the Christmas Vacation, Dr. S. Radhakrishnan paid a visit to our School. He gave his best wishes for a happy, useful and prosperous New Year 1953. His desire was that the present education should not render us unfit for the domestic and family life which we should lead later on and should adhere to the great culture, traditions and heritage of Indian woman-hood.

'Andal' drama was staged by our pupils under the distinguished presidentship of Sri K. Venkataswamy Naidu, the Hon'ble Minister for Religious Endowments.

On the Republic Day, children assembled at 8 a.m. The National Flag was hoisted and sweets were distributed to the children at the end of the function.

The children showed much enthusiasm in celebrating the Fifth Annual Sports Day on 7th February. Miss E. David, the then Inspectress of Girls' Schools, III Circle, presided over the function and distributed the prizes.

Sri Rama Navami was celebrated on 23rd March with the Hon'ble Justice Sri A. S. P. Iyer in the chair.

The School Anniversary was celebrated on 8th April. Mr. C. M. Kothari presided over the function. Mrs. Rama Kothari distributed the prizes.

The School Exhibition was held on April 10th. Dr. Sir A. Lakshmanaswamy Mudaliar, Vice-Chancellor, University of Madras declared open the Exhibition. He visited the various sections and appreciated the work got up by the children. The Science section was much appreciated by the visitors. He later unveiled the Portrait of our late President, Dr. T. S. Tirumurthy and paid tributes to the services rendered by him to Medical profession in general and to education and other social activities in particular.

We celebrated the Vana Mahotsavam on the 7th July when Sri S. Parthasarathy Iyengar, Commissioner of Police planted a few saplings.

The Independence Day was celebrated with a novel addition. Children numbering about 500, who were given special training in rythmic drill, formed the India "Pageant Parade" accompanied to the tune of music. Pupils in small circles represented the various provinces. A little girl, dressed up to represent TENSING, "Mount Everest Hero" was placed on a camaflouge Everest which was a special feature this year. Sri S. S. Vasan hoisted the Flag and blessed the children. The Pageant was very much appreciated by all present, and the same had been photographed and published in the leading newspapers of the city. A kaleidoscopic view of the same was taken by the Film Division of the broadcasting section of the Government of India.

Our Staff attended the marriage of our Headmistress at Srirangam on 23rd August 1953 and presented her with a pair of gold bangles. We stayed there for two days and partook in the fun and frolic of the marriage. On our way back we visited several places like the Trichy Rock Fort, Tanjore, Thiruvadi, Swami Malai, Kumbakonam and Chidambaram. At Chidambaram,

the Vice-Chancellor, Dr. C. P. Ramaswamy Iyer was pleased to receive us at his residence. In short it was a pleasant and memorable trip for us and long live the newly married couple whose marriage was the immediate incentive to our excursion. We extend our hearty congratulations to Mrs. P. Saraswathy, Mrs. R. Sivagami, and Mrs. Manimekalai who were also married recently.

On 1st September, we had the honour to entertain Sri Jaya Prakash Narain, the Exponent of Bhoodan Yagna. He was pleased to witness our "India Pageant Parade" and spoke a few words on the 'Ethics of Bhoodan Yagna".

The Founder's Day was celebrated in a grand manner with Sri S. Govindarajulu Naidu, Director of Public Instruction, Andhra State, in the chair. Sri C. Subramaniam, Minister for Finance and Education delivered the Commemoration address. Sweets were later distributed to the children.

Sri C. R. Srinivasan, Editor 'Swadesamitran", was unanimously elected President by the Management. Our hearty felicitations to him. It is our earnest prayer that the school will further prosper under his able guidance and influence.

Our sincere thanks are due to Mrs. C. R. Srinivasan for her generous contribution to the columns of our Magazine.

EDITOR.

OUR REVERED PRESIDENT DR. T. S. TIRUMURTHI

The news of the sudden demise of our President Dr. T. S. Tirumurthi came to us as a rude shock on the eve of our return from the Excursion. Just before we departed for Srirangam, he had come to see us off and gave his blessings for a safe and happy journey. He hoped to meet us on the day of our return. But God willed otherwise. While travelling by train from Bangalore to Mysore he had a sudden heart attack and collapsed. Fortunately his wife was with him at the time of the great calamity. It is an irreparable loss to our school in particular and to the country at large.

He was the dreamer and builder of our school and can rightly be called the father of the Institution. His simple, unassuming, helping, and affectionate nature amongst his many sided good qualities will always be treasured in our hearts. He has much endeared himself to the hearts of all of us, the Staff, the Management and the children that the more we think of him, the more we feel the void created by his sudden demise. May God rest his soul which had hitherto been restless owing to his incessant activities in the social, educational and cultural fields.

A condolence meeting of the National High School for Girls and Boys under the Presidentship of our Secretary was held on 27-8-53 at 10-30 a.m. and a condolence resolution was passed. Both the schools remained closed that day as a mark of respect to the memory of our President, Late Dr. T. S. Tirumurthi. We paid our last homage to him by placing wreaths on the body before cremation on behalf of the teachers of the National High School for Boys and Girls.

A Public Meeting was held on the 8th September at our School premises which was largely attended by the Girls and Boys of our schools and other prominent citizens of the city. Dr. A. Lakshmanaswami Mudaliar, Vice-Choncellor, University of Madras presided. Tributes were paid by several speakers to the keen interest taken by the late Dr. T. S. Tirumurthi in social, cultural, educational and other activities, and to the many qualities that endeared him to all.

At the outset our Secretary read messages received from the following persons:

Sri C. Rajagopalachariar, Chief Minister, Madras; Sir C. P. Ramaswamy Iyer; Sri K. Venkatswamy Naidu, Minister, Religious Endowments; Dr. U. Krishna Rao, Minister for Labour; Sri T. Chengalvaroyan, Mayor of Madras; Sri P. S. Venkatachalam, Sheriff of Madras; Sri N. S. Arunachalam, Collector of Madras; Mr. Lobo Prabhu, Secretary to Government; Mrs. Clubwala; Prof. K. Swaminathan; Dr. Rama Subramaniam; Sri N. A. Naganathan; Dr. Muthulakshmi Reddi; Sri K. S. Narayana Iyengar; Sri S. Lalchand Dadha; Sri V. L. Ethiraj; Srimathi Rukmani Devi.

Sri A. Lakshmanaswami Mudaliar observed that men of his calibre, of his wisdom and of his humanitarian aspects are not many in this world. He had known the deceased for over half a century, both during the college days and also later in life. Dr. T. S. Tirumurthi was remarkable for many great achievements. He was in the fore-front in all matters connected with social and economic aspects. He concluded with a hope that his example would serve for many of his fellow countrymen as an inspiration, especially on retirement, when without seeking re-employment, he devoted his entire time to public causes.

Dr. P. V. Cherian referred to his association with late Dr. T. S. Tirumurthi at the Madras Medical College and said that he was one of the first Indians to rise to the level of a Professor of the Medical College. His life had been a full one, useful to everybody, he added.

Sri. C. R. Pattabiraman on behalf of the Management and Staffs of the National High School for Boys and Girls moved a condolence resolution placing on record our deep and mournful sense of the great loss sustained by the country as a whole and by our schools in particular by the passing away of Dr. T. S. Tirumurthi who in addition to his being the dreamer and builder of the National High School for Girls, was eminent in many spheres of professional and cultural activities and was a great doctor and a person devoted to educational and cultural progress and was a devoted social worker and servant of India and was universally respected and beloved for his character and his peerless amiability and courtesy and his Vibrant enthusiasm for all good causes.

Messers. S. Varadachariar, K. S. Ramaswami Sastrigal, K. Balasubramania Iyer, K. V. Jagannathan, M. Subbaraya Iyer, S. Natarajan, T. K. Shanmugam, Sundara Rao, Dr. K. Sanjeevi, Mr. Muthulakshmi Reddi and Mrs. Mona Hensman associated themselves in paying tributes to the memory and services rendered by the late Dr. T. S. Tirumurthi.

S. S.

Dr. T. S. TIRUMURTHI,
(Our first President)

Founder's day Celebrations—Our D. P. I., Finance & Education Minister and our former D. P. I. with our Secretary.

Welcome to Our New President.

MY OOTY TRIP

My trip to Ooooty was very enjoyable. I left for Ooty by the Nilgiri Express. The next day at about nine in the morning the train reached Mettupalayam. From the platform I had a view of the high Nilgiri mountains. They formed a very high wall, and clouds seemed to be resting peacefully on the mountain tops. I had not much time to admire the mountains, for I had to hurry up to catch another train.

At about ten o'clock in the morning the train started its journey up-hill. We first passed through a plantation of tall and slender palm trees. Then we passed through many tunnels, which were so dark that I could scarcely see anything. There were huge trees on the mountain sides. Soon we had to pass by a stream which was surrounded by beautiful trees with flowers and ever green leaves. The bees were busily collecting honey from the flowers, and, there were butter flies with multi coloured wings hovering about in the sun light. It was a beautiful sight beyond description and will ever remain in my memory.

After passing through Coonoor the train puffed along, fine hill-sides, and made for Ooty. Then we reached Ooty, the "Queen of Hill Stations". It was very cold there. Because the height of the place is above sea level, I was not able to breathe freely. The atmosphere too has less oxygen there, than at Madras.

I took my abode in a fine little cottage in Fern Hill. It is a very quiet and neat place and is about a mile away from Ooty. My place was surrounded on all sides by fern trees. In fact, the whole hill is full of ferns, hence it is called by the name 'Fern Hill.' The beauty of Ooty is diappearing gradually because the old Eucalyptus forests are being cut down now, and potato gardens are cultivated instead. So Ooty proper is now as dull as the head of a bald man. The Ooty gardens are lovely, the flowers and the grass are grown in beautiful designs.

Ooty was very pleasant till the South-west Monsoon broke out in June. The Monsoon began and at first I loved the way it brought fine clouds. Clouds passed all around my cottage. A thick blanket of clouds enveloped the town, that I felt like being in a cloud-land. But the Monsoon soon gathered strength, and then, it was like the Devil let loose. The wind blew fiercely, trees fell all around, electric lights went out, and the cold became biting and unbearable.

When my school reopened after the summer vacation I was happy to be back in Madras—yet, I must confess that Ooty comes back to me often in my dreams.

V. N. NIRMALA,
IV Form, 'E'.

RIDDLES

1. A is the brother of B. But B is not the brother of A. Who is B?
   Ans : B is the Sister of A.

2. Which is the thing that has many holes and yet holds water?
   Ans : Sponge.

3. What is the longest word in the English dictionary?
   Ans: Smiles—(There is a mile between the initial S and the final S).

4. Which carries you from one place to another without moving?
   Ans: Road.

5. Think of a number. Double it. Add 20 to the result. Divide the sum by 2. Give me the answer.
   Ans: By subtracting 10 from your answer I can tell the very same number you think of.

6. By which letter can you see every thing?
   Ans: I (eye).

7. How long can one live?
   Ans: It depends on the liver.

8. What is the difference between a soldier and an actor?
   The soldier faces the powder.
   An actor powders the face.

9. Read the words and sentences below, letter by letter, from the right: there is no change at all.
   1. MADAM, I'M ADAM.
   2. ABLE WAS I ERE I SAW ELBA.

Collected by: A. NIRMALA,
VI Form, 'B'.

THE PET DEER

★ ★

R. S. JOTHI BAI,
V Form, 'E'.

HOME SCIENCE

People generally think that Home Science exclusively deals about cooking and washing, which is quite wrong. It has various aims and includes in its scope those parts of science with which we come in contact in our every-day home life. The very name 'Home Science' suggests that it is the study of a woman in the environment of the ordinary business which is confined to the house that is entrusted to her care. It teaches a woman how to perform each act in a scientific way.

It teaches the scientific preparation of food, the nutritive value of each variety of food, and determines the quantity and quality of food to be taken according to the age and requirements of an individual. This goes a long way in the up keep of health as every one of the family can have a well balanced diet. Thus we can create a healthy house-hold and avoid much waste and loss.

The financial side of this science cannot be over looked. The home-budget helps us to run a good, happy, economic home with all the members of the family doing their bit of work.

Apart from cooking, washing, removal of stains and so on, in the first place, Home-Science teaches how to be an efficient mistress of the home, a dutiful wife and mother, and a true citizen. It teaches how to keep a healthy home, how to prevent and treat some of the common diseases and accidents–social responsibilities–how to bring up children on hygienic principles, and take care of them and the sick—How to choose clothes according to age, occasion, durability and the finance available, how to maintain their condition. It also inculcates tastes for hobbies such as gardening, poultry-keeping, bee-keeping and handicrafts and this will bring a substantial income too.

Thus Home-Science is essential for every woman; It makes her an efficient, economic, and cheerful house-wife.

Our Finance — Cum — Education Minister Sri. C. Subramaniam says "Home Science" should be named "Home Service". How appropriate and thought provoking!!!

'Old Student'

From Our Children's Pen

THE MONKEYS AND THE CAP SELLER

Once there was a cap seller who went from place to place selling his caps. One day he kept his bag of caps under a tree and went to sleep. There were many monkeys on that tree. Seeing a cap on the man's head, each monkey took a cap from the bag and placed it on its head.

After sometime, the cap seller woke. He did not see his caps in the bag. When he looked up, he saw the monkeys wearing the caps. Enraged at this, he threw the cap on the ground. The monkeys also did the same. The cap seller collected all the caps in his bag and went on his way.

SIVAKAMASUNDARI,
III Form, 'E'.

THE CLEVER CROW

Once a crow was very thirsty. It flew here and there in search of water. At last it saw a jar with some water at the bottom. The crow could not reach it.

He found many stones nearby. The crow was clever. It picked up the stones and put them one by one into the jar. Soon the water came up; the crow drank the water to his heart's content and flew away.

R. KALYANI,
I Form, 'F'.

KAMALA'S DOG

Kamala had a dog named Poppy. It was very beautiful and she loved it very much. The dog was also faithful to her. But her father did not like Poppy. He beat the dog always and chained him to a pillar.

One day a thief came to their house. It was very dark. Everybody in the house was sleeping and no one knew that a thief had come to the house. He slowly got into the room where the Jewels were kept and took all the money and jewels from the box. The dog saw him and did not like such a stranger in the house. So he barked loudly. The house was awake. Kamala's father caught the thief and got back all the jewels and money from him. If Poppy had been silent, he would have lost all his money. So he was very thankful to the dog. From that time onwards he did not beat Poppy. He loved it and treated it kindly.

K. S. SAVITHRI,
III Form, 'F'.

DO YOU KNOW?

1. That sound can travel better in water than on land?
2. That the highest water-fall in the world is in India—in the Mysore State, called 'Gersoppa'?
3. That sound can break glass?
4. That the second oldest city in the world is Delhi?
5. That the Louvre in France is the largest museum in the world?

Collected by : S. MALATHI,
V Form, 'B'.

Our Independence Day Celebrations.



Sri S. S. Vasan Hoisting the National Flag.

With our Tensingh.

Mrs. C. R. Pattabhiraman, Mrs. Jayaprakash Narain, and Mrs. Vasan with our Headmistress.

Sri S. S. Vasan, speaking on the Independence Day.



Our India Pageant Parade.

OUR STAFF EXCURSION

In the annals of the history of our School never was an excursion so well planned and carried out successfully as our recent five days' trip to Srirangam and other places in the South. The success of the excursion was due to the untiring energy and help rendered by our Founder-Secretary and our sincere thanks are due to him.

After offerings of prayer to our Deity to help us safely through our journey, we left Madras on 22-8-53 exactly at 7-45 a.m. by our School bus. Dr. T. S. Tirumurthi, our beloved President now deceased, wished us a happy journey and we left the precincts of our School, for Chingleput. We reached Chingleput within two hours and there we had a sumptuous meal arranged through the good offices of Mr. S. Parthasarathy, Public Relations Officer, Southern Railway, and we resumed our journey. On the way we halted at Villupuram for tea and from there we left straight for Srirangam and reached the place at 5 p.m. in the evening. We stayed at Srirangam Girls' High School for the day. During our stay there, we visited Sri Ranganathar temple and thanked God for having helped us safely through our journey so far and also prayed that He should guide us likewise throughout our excursion till we returned home.

On the next day, we left for Trichy where we visited the famous Rock temple. From there we had a bird's eye view of Trichy. Then we hurried back to Srirangam to attend the marriage of our Head-mistress which was celebrated in a fitting manner. After our 'Khana' we left for Samayavaram, Gunasekarapuram and Thiruvanikaval. We returned again to Srirangam and halted there for the night.

Monday, the 24th August was a very busy day. Some of us were busy making preparations for a visit to the Srirangam temple while the men teachers of our Staff were celebrating their Avani Avittam with all the sanctity befitting the occasion on the banks of the River Cauvery which was brimful with water and roaring with delight. Even this sacred river seemed to be overjoyed at our visit to Srirangam. It was a picturesque sight indeed to watch the people, all assembled on the banks of the Cauvery, taking a dip in the sacred river and chanting mantras associated with the performance of Avaniavittam.

In the evening we left for Tanjore. There we had a light repast at Ananda Lodge, one of the best hotels at Tanjore and then we visited the Saraswathi Mahal Library, Tanjore Palace. We also visited Brahadeeswar Temple, the the most famous shrine built by the Cholas. The day ended with all of us seeing the unique film "AVVAIYAR" produced by "GEMINI".

Early in the morning on 25-8-53 we proceeded to Thiruviyar. There we bathed in the sacred waters of the river Cauvery and visited Thyagaraja Swamy's house as well as his Samadhi. A visit to the house of Sri Thyagaraja rendered a spark of divinity to our excursion and revived in us glorious memories of the revered Saint. We were lost in admiration and devotion to this great sage.

We next visited Swamimalai and had a good Darsan of Lord Murugan, the favourite deity of the South. This place is considered as very important because it was there that Lord Muruga

as a child rendered "Upadesam" to his father Siva. We reached Kumbakonam at 1 p.m. in the afternoon. There we had our lunch and rested for sometime. We next proceeded to Chidambaram.

The next day we visited the splendid university at Chidambaram and Sir C. P. Ramaswamy Ayyar, the Vice-Chancellor of the University, was glad to meet us.

The Convenor of the excursion party said, "It is my great pleasure and previlege to thank the Vice-Chancellor Sir C. P. Ramaswamy Ayyar for his presence in our midst. We deem it a great honour that your worthy son Sri. C. R. Pattabiraman is in our Governing Body. It is our earnest prayer that you should live long not only to be of service but also to radiate joy all around".

In reply the Vice-Chancellor said, "I have great pleasure in meeting you all; I have always been a friend and a well wisher of your school. I have the greatest regard and respect for your Secretary, Mr. N. K. Thirumalachari, who by his indefatigable energy and enthusiasm has brought this Institution to its present position. I have no doubt that your school will grow from strength to strength. I thank you all and wish all of you and the institution every prosperity."

The executives of the University were also duly thanked for having been kind enough to take us round the University building.

We were the recipients of the bounteous hospitality of Rajah Sir M.A. Muthiah Chettiar of Chettinad during our stay in Chidambaram. Enroute, we stayed as the guest of Mr. C. Narayanaswamy, Executive Engineer (P.W.D.) at Cuddalore where he gave us a delightful Tea-party.

Then we resumed our journey homewards, our hearts full of delight and our minds rich with golden memories of the excursion, but never, never again to meet our beloved President Dr. T. S. Tirumurthi who had been snatched away from us, all of a sudden by the cruel hand of fate. May his soul rest in peace.

R. SEETHA,
Convenor, Execursion Committee.

CAN YOU FIND OUT!

1. A man has to carry two bags of coconuts to his village. Each bag contains 100 coconuts. The man has to pass through 100 toll-gates, and give one coconut for each bag at every gate. How many coconuts will he have, when he reaches his village ?

2. In a lotus tank, the lotuses get doubled every day during that particular season. In 14 days the tank is full. In how many days is the tank half full.

3. Jaya is 22 years old. But she has had only 5 birth days. How is it ?

4. A worm tries to climb a pole 10 feet high. It covers 3 feet during the day, but at night comes down by 2 feet. How many days does the worm take to reach the top ?

Answers :—

1. At each, gate he gives 2 coconuts from the same bag, so that after the 50th gate he has only one bag of 100 coconuts. For the rest of the 50 gates he gives 50 coconuts and has with him 50 cocoanuts left when he reaches his village.

2. Since thetank is full in 14 days, the previous day it is half-full, so that when the lotuses doubled the next day, the tank is full. So in 13 days the tank is half-full.

3. Born on 29th February Leap year.

4. The worm reaches the top pole on the evening of the 8th day (though during night it will come down by 2 feet).

Collected by :

R. MEENALOCHANI,
VI Form, 'B'.

RABINDRANATH TAGORE

Rabindranath Tagore, one of India's greatest poets was born in Calcutta on the 6th of May 1861.

From his young days Tagore delighted in reading and singing verse, and later on he took to writing poems. At the age of twenty he began to write poetry, stories and dramas. His Gitanjali, a collection of poems made him world famous. He was also awarded the Nobel Prize for Literature.

Later, he started a School of his own, called Santiniketan, the Home of Peace at Bhalpur, where students of different nationalities gather together, exchange their ideas freely and get to know one another better.

Tagore was a great patriot and no one loved his native land more dearly than he did. The whole world was immersed in great sorrow when he breathed his last on the 7th of August 1941.

JALAJA,
IV Form, 'A'.

MAHABALIPURAM

Mahabalipuram, also known as the Seven pagodas is a pleasant sea side resort, fifty-three miles south of Madras. It is a popular excursion spot as well. This ancient sea port which once appears to have been a busy town carrying on brisk and flourishing trade with foreign countries as far back as the sixth century is to-day a small straggling village whose inhabitants are mainly agricultural farmers. It has played a very important part in the propagation of Indian art and culture.

To-day the principal attraction of the place to tourists lies in the wonderful monuments and sculptures of ancient pallava kings. The important monuments to be seen are the Five Rathas, Arjuna's penance, the Mahishasura Mandapam, the Krishna Mandapam and the Shore temple. There is also a modern light house on a hillock. But it is advisable to see them before the midday heat.

S. SHANTHA,
V Form, 'A'.

QUIZ

Here is a list of words beginning with 'dis'. Find out what they are with the help of the clues.

1. Dis ... ... Refuse to sanction.
2. Dis ... ... Differ in opinion.
3. Dis ... ... Cease to be visible.
4. Dis ... ... Deprive of weapons.
5. Dis ... ... Pay money.
6. Dis ... ... Cease from.
7. Dis ... ... Uneasiness of body.
8. Dis ... ... Conceal of identity of person.
9. Dis ... ... Downfall from position of honour.
10. Dis ... ... Want of trust.

Given below are a few four lettered words. The second and third letters are made up of O's. Find out what they are with the help of the clues.

11. oo ... ... That which we need.
12. oo ... ... Thing asked for or gift.
13. oo ... ... One who prepares food.
14. oo ... ... Tract of open waste ground.
15. oo ... ... Wanting in necessities of life..

Answer :

1. Disallow	6. Discontinue	11. Food
2. Disagree	7. Discomfort	12. Boon
3. Disappear	8. Disguise	13. Cook
4. Disarm	9. Disgrace	14. Moor
5. Disburse	10. Distrust	15. Poor.

K. MUTHUKUMARI,
V Form, 'B'.

SELECTED SAYINGS

"Truth is the most valuable thing in the world.

—*Mark Twain.*

"My way of joking is to tell the truth. It's the funniest joke in the world."

—*Bernard Shaw.*

"Lust and greed, and greed and lust are Man's mortal enemies."

—*Lord Buddha.*

Lite without religion is flower without fragrance.

—*Vivekananda.*

Mental happiness, equanimity, silence, self control, purity of nature—this is called the austerity of the mind.

—*Bhagavat Gita.*

"Life is a game where we should act our parts. We are all cast for different roles, and our business is to play them in the right spirit. We may lose the game but we should not mind it. It is the play that matters and not the score we make."

—*Dr. S. Radhakrishnan.*

Joy comes and goes; hope ebb sand flows like the wave. Change doth unknit the tranquil strength of men. Love lends life a little grace, a few sad smiles; and both are laid in one cold place in the grave.

—*Arnold.*

There are two tragedies in life. One is not to get your heart's desire, the other is to get it.

—*G. B. Shaw.*

Man is the brain, but woman is the heart of humanity, he its judgment, she its feeling; he its strength, she its grace, ornament and solace.

—*Samuel Smiles.*

"Home is the first and most important school of character. It is there that every human being receives his best moral training or his worst."

—*Samuel Smiles.*

Collected by : BASANTHA,
VI Form, 'A'.

எம் புதிய தலைவர்

ஒலிக்கும் கடலிடையே உன்னத வேலைப்பாடு வாய்ந்த ஒரு கப்பல் அலைகளோடு விளையாடி ஒய்யாரமாக அசைந்து அசைந்து காண்போர் வியக்கும் வண்ணம் சென்று கொண்டிருந்தது. மிகக் குறைந்த காலத்திலேயே சிறந்த முறையில் சிருஷ்டிக்கப்பட்ட அந்தக் கப்பலைக்கண்டு போற்றிப் புகழாதவரில்லை. ஆசியாவின் மாணிக்கமான ஸ்ரீ பண்டித நேருஜி உட்பட பல்லோர் அதனைப் பாராட்டினார்கள். அப்பாராட்டுகளைப் பெற்ற பெருமிதத்தால் அது பூரித்துச் சென்று கொண்டிருந்தது. அது அடையவேண்டிய லட்சிய இடங்கள் பல உண்டு. அவற்றை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருந்த அந்தக் கப்பலின் மாலுமி விதி வசத்தால் விண்ணுலகெய்தினர். கப்பலில் உல்லாசப் பயணமாகப் போய்க்கொண்டிருந்தோர் உள்ளம் தடுமாறித் திகைத்தனர். ஆனால் அம் மாலுமியின் வலது கரம்போல் நின்று உழைத்து அக்கப்பலை உருவாக்கி உடனேட்டிக்கொண்டு வந்த ஒருவர், தலைவரைப் பிரிந்த ஆருத்துயரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, கப்பலை ஓட்டும் மற்றொரு சிறந்த மாலுமியைத் தேடுவதில் நாட்டத்தைச் செலுத்தினர்; இறைவனருளால் ஒரு சிறந்த மாலுமியை எவ்வாறோ கொணர்ந்து நிறுத்திக் கப்பலோட்டும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் செய்தார். கப்பலில் இருப்பவரும், கரையில் நின்று அக்கப்பலைக் காண்போரும் துன்பம் நீங்கி இன்பப் பயணத்தில் இதயத்தை ஈடுபடுத்தினர். இவ்வாறு பல்லோரின் துயரத்தைத் துடைத்துப் படகைச் செலுத்தவந்த உத்தமர் யாரெனில் அவர்களே எம் பாடசாலை நிர்வாகக் கமிட்டியின் புதிய தலைவரான ஸ்ரீமான். ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனவர்கள். எம் கலாசாலைக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கிய எம் தலைவர் டாக்டர். டி. எஸ். திருமூர்த்தியவர்களுக்குப் பின்னும் பள்ளிக்கூடத்தை மேலும் பலவகையில் மேம்படுத்தத் தலைமைப் பதவியை ஸ்ரீ ஸ்ரீநிவாசனவர்கள் ஏற்றுக்கொண்டது எம் பாக்கியமே. நம் பள்ளிக்கூடத்தைச் சார்ந்தோரனைவரும் அவர்களின் பெருமையை அறிந்து போற்றுதல் அவசியமாகும்.

உலகில் தம்மினும் பிறர்க்குப் பயன்பட வாழும் உத்தமர்களை விரலிட்டு எண்ணிவிடலாம். தமிழகத்தில் அத்தகைய பெருமையோடு திலங்கும் பெரியோர்களுள் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்களும் ஒருவராவர்.

ஸ்ரீ. ஸ்ரீநிவாஸனவர்கள் 28-11-1889 இல் பிறந்தார்கள்; சென்னை ராஜதானிக் கல்லூரியில் கல்வி பயின்று 1909-இல் பி. ஏ. பட்டதாரியானார்கள்; சென்னை வெஸ்லி காலேஜில் ஓராண்டு ஆசிரியராக இருந்தார்கள். 1915-இல் சுதேசமித்திரன் பத்திரிகையின் மானேஜராகவும் உப பத்திராதிபராகவும் அமர்ந்தார்கள். 1928-இல் மித்திரன் இவர்களைப் பத்திராதிபராகவும் 1934-இல் நிர்வாகத் தலைவராகவும் பெற்று படிப்படியே உயர்நிலையை எய்தி இன்று தமிழகத்தின் தலைசிறந்த பத்திரிகையாக விளங்குகிறது. அனைத்திற்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாசனவர்களின் ஓயா உழைப்பும், நிர்வாகதிறனும், ஆன்றமைந்த கல்வியும், ஆதியில் ஸ்ரீ A. ரங்கசாமி ஐயங்காரவர்களின் ஆதாவுமே காரணங்களாகும்.

ஒளிபெருக்க விண்ணுக்கு வெண்மதியும், கண்ணுக்குக் கருமணியும், பெண்ணுக்குக் கல்வியும் எவ்விதம் இன்றியமையாதனவோ அவ்விதமே ஒரு நாடும், அந்நாட்டு மொழியும் ஒளிபெறப் பத்திரிகைத்துறை அவசியம். அத்துறையில் தமிழ்நாட்டுக்குத் தனிப் பெருமையையும், தமிழ்மொழிக்குப் புதிய இனிமையையும், அரசியல், பொருளாதாரம், கைத்தொழில் முதலிய துறைகளுக்கு அளவற்ற வலிமையையும், அளிக்கும் பத்திரிகையாகச் சுதேசமித்திரன் விளங்குகிறது. தேசபக்திதீபம் நந்தா விளக்காய் நாள் தோறும் வளர மக்களுக்கு நல்லுரையை அளித்து, எத்திற நன்மை தீமைகளிலும் உடனிருந்து உதவும் மித்திரன்போல் விளங்குவது சுதேசமித்திரனே. அத்தகைய மித்திரன் அங்நிலையில் அரும்பெரும் புகழுடன் ஓங்கி நிற்பதற்குக் காரணம் ஸ்ரீ ஸ்ரீநிவாசனவர்களே என்பதை அறியாதவர் தமிழகத்தில் இரார்.

அன்பு ததும்பும் புனித இடம் அவர்கள் உள்ளம். அடக்கம் வீற்றிருக்கும் சிம்மாசனம் அவர்கள் வடிவம். வாய்மை தாங்கி விளங்கும் அவர்கள் சொற்கள். தூய்மை தாங்கித் துலங்கும் அவர்கள் அகமும் புறமும். கல்வியிலும், கலைகளிலும், சீரிலும், செல்வத்திலும் வளம்பெற்று விளங்கும் அவர்கள் தமிழ்நாட்டுக்கே தனிப்பெரும் பொக்கிஷமாக விளங்குகிறார்கள். அறிவும் ஆற்றலும், இரக்கமும் ஈகையும், உழைப்பும் ஊக்கமும், பெருமையும், பொறுமையும் நிறைந்த புண்ணியமூர்த்தி அவர்கள்.

இத்தகையவரைத் தலைவராகக் கொண்டு சிறப்புப் பெற்ற சங்கங்கள் பல; மகாநாடுகள் எண்ணிலடங்கா; பத்திரிகை சம்மேளனங்கள் இவரது தலைமையால் ஒளிவீசி உலகெங்கும் தம் புகழைப் பரப்பின. அகில இந்திய பத்திரிகையாசிரியர் மகாநாடு இவரது தலைமையை இருமுறை விரும்பியேற்று ஓங்கி உயர்ந்தது. எத்தனையோ புதிய தொழிலகங்கள் இவர்களது சம்பந்தத்தால் ஊன்றி நின்று தாயகத்திற்கு உழைத்து வருகின்றன.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் பாண்டித்தியம்பெற்ற இவர்கள்

Sri C. R. Srinivasan, Our President.

Mrs. C. R. Srinivasan inaugurating Bharathi Day.

உயர்ந்த நூல்களை எழுதுவதிலும் எவருக்கும் சளைத்தவரில்லை. ஆங்கிலத்திலும், தமிழிலும் பல புத்தகங்கள் எழுதி இருமொழிக்கும் பெருமை யளித்துள்ளார்.

இவ்வாறு பல துறைகளிலும் மேம்பாடுற்று விளங்கும் ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்களை நம் ஸ்தாபக காரியதரிசியவர்களின் முயற்சியால் நம் பள்ளிக்கூடம் தலைவராகப் பெற்றது பெரும் பாக்கியமேயாகும். நம் பள்ளிக்கூட மைதானத்தில் காண்போர் கண்களுக்கு விருந்தூட்டி வரும் கலா மண்டபம் இவர்கள் முயற்சியாலும் ஆதரவாலும் படைக்கப்பட்டதே. இவர்களால் இனி நம் பாடசாலை அடையப்போகும் பெருமை அளவிலடங்கா என்று நம்பலாம். இவ்வித நம்பிக்கையை அளிக்கும் நமது அருமையான, புதிய தலைவரான ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்கள் அரோக திடகாத்திரத்தோடு நீடூழி வாழவும், அன்னார் தொண்டினை அளவின்றி நம் கலாசாலை பெறவும் இறைவன் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமான் அருள்வாராக.

H. வைத்தியநாதன்.

சமூகமும் பண்பும்

ஒரு நாட்டின் பெருமை எதைப் பொருத்திருக்கிறது? உங்களில் விஞ்ஞான மாணவர்கள் விஞ்ஞானமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பார்கள். பொருளாதார வகுப்பில் உள்ளவர்கள் ஏற்றுமதி உற்பத்தி இவைகளைப் பொருத்திருக்கிறது எனலாம். கலைகளைப் பிரதானப் பொருளாக உடையவர்கள் இலக்கியங்களே நாட்டின் பெருமையை உயர்த்துகிறது என்று கருதுவார்கள். உண்மையில் எது தான் சரி? எல்லாமே உண்மைதான். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையான இன்னொரு காரணம் இருக்கிறது.

மனிதனுக்குப் பணம் இருந்தாலும் அறிவு எவ்வளவு முக்கியமோ, பெருமை இருந்தாலும் பண்பு எவ்வளவு அவசியமோ அது போல சமூக மனப்பான்மை முக்கியமானது. சமூக மனப்பான்மை என்பது என்ன? சமூகத்தின் நலத்தைக் கருத்தில் வைத்து அதன்படியே செய்கைகளில் அனுஷ்டிப்பதே சமூக மனப்பான்மையாகும். பிரஜைகள் சேர்ந்ததே சமூகம். தாய் தந்தையரின் குணங்கள் குழந்தைகளுக்குப் படிவது போல மக்களின் குணங்களே தேசத்தின் முன்னேற்றத்திலும் மதிப்பிலும் பிரதிபலிக்கின்றன.

இது எவ்வாறு? இரண்டாவது மகாயுத்தத்தில் குண்டுகள் பொழியப்பட்டுப் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அடைந்ததன்றிப் பொருளாதாரமும் அடியோடு சிதறுண்ட பிரிட்டன் இன்று தன் மக்களின் முயற்சியினாலும் தைரியத்தினாலும் மீண்டும் தன் பெருமையை நிலைநாட்டி வருகிறது. மிகுந்த துணிகரமான மனப்பான்மையினால்தான் நம் மாகாணத்திலும் சிறியதான இங்கிலாந்து தேசத்தின் செல்வாக்கு உலகம் முழுவதுமே பாவியிருக்கிறது.

மற்றொரு உதாரணமாக ஜப்பானைப் பாருங்கள். இச்சிறிய நாட்டின் பெருமை கொஞ்சம் நஞ்சமல்ல. மகா யுத்தத்தில் தோல்வியடைந்து நசுக்கப்பட்ட இந்நாட்டு மக்கள் இந்தக் குறுகிய காலத்திற்குள் வியாபாரத்தில் மேல் நாடுகளுடன், காண்போர் திகைக்கும் வண்ணம் போட்டியிடுவதைத் தினசரிப் பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

பிரான்ஸை எடுத்துக்கொள்ளுங்கள். இங்கு வாரத்திற்கொரு மந்திரிசபை! இதற்குள்ள பல காரணங்களுள் ஒன்று என்னவென்றால் பிரஞ்சு மக்கள் சுயேச்சையான போக்கை உடையவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம். அதில் மற்றவருக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆகையால் எத்தனை அரசியல் நோக்கங்களோ அத்தனை கட்சிகள் ஏற்பட்டு மந்திரிசபை நிலைக்க விட்டால்தானே!

இப்படியாகத்தான் தேச சரித்திரம் மக்களின் மனப்போக்கு எனும் அச்சில் வார்க்கப்படுகிறது. தேசிய உணர்ச்சியினால் சுதந்திரம் அடைந்தோம். அதோடு முடியவில்லை. ஏழ்மை, அறிவின்மை, நோய் இவைகளை எதிர்க்கும் போராட்டத்திலும் வெற்றி பெற்றாகவேண்டும்.

நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது ஒரு சம்பவத்தைக் கண்டு திகைத்தேன். தினசரிப் பத்திரிகைகள் கட்டு ஒன்றிலிருந்து பலர் பிரதிகள் எடுத்துக் கொண்டு பெட்டியில் காசைப் போட்ட காட்சியைக் குறிப்பிடுகிறேன். நான் காணாவிட்டாலும் கேட்டறிந்த மற்றொரு திகைப்பூட்டும் விஷயம்—இங்கிலாந்தில் சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட்டபோது பிரதம மந்திரி எல்லோரும் அவரவர்களிடம் உள்ள அதிகப்படியான சர்க்கரையைத் திரும்பி ரேஷன் கடைகளுக்குக் கொண்டுவந்து கொடுத்துவிடுமாறு மக்களை

வேண்டிக்கொண்டாராம். மறுநாள் காலை ரேஷன் கடைகளின் முன்பு சர்க்கரையைத் திரும்பித்தர நீண்ட 'க்யூ' வரிசைகளாம்.

இதுபோல உள்ளம் இருந்திருந்தால் பதுக்கலோ, 'பிளாக் மார்க்கெட்டோ', பஞ்சமோ நம்மை அணுகாதே !

இந்தத் தேசப்பண்புக்கு ஆதாரமென்ன ? தன்னால் ஏற்படுவதா ? மனப்பண்பு ஏற்படுவது கல்வியினால் மட்டுமல்ல ; அனுபவத்தினாலும் தான். மனித இயற்கையை அறிந்து அதன்படி வாக்கு, செய்கை இவைகளை அமைப்பது தான் பண்பு. இயற்கையின் எண்ணற்ற விநோதங்களைப் பயன்படுத்திச் செல்வது தான் அறிவு. இப்படி இயற்கையைப் பயன்படுத்தி மனித வர்க்கத்திற்கு நன்மையும் ஏற்படுகிறது ; தீமையும் ஏற்படுகிறது. விஞ்ஞானம் தந்தது தான் பயங்கரமான அணுகுண்டு. அதே விஞ்ஞானம் அளித்ததுதான் பெனிஸிலின், ஆரியோமைஸின் போன்ற ஒப்பற்ற ஔஷதங்கள்.

கல்விக்கும் அனுபவத்திற்கும் சம்பந்தம் இல்லாதது போல் கருதுவதோ, ஒன்றைவிட மற்றொன்று தான் சிறந்தது என்று சொல்வதோ சரியல்ல. நெருப்பைத்தொட்டுப் பிறகு அது சுடுகிறது என்று தெரிந்துகொள்வது அனுபவம். நெருப்பின் குணங்களைப்பற்றிப் படித்தோ கேட்டோ தெரிந்து கொள்வது கல்வி. கல்வி நாம் அடையவேண்டிய எல்லை அல்ல. பட்டம் பெற்றதும் அடைய வேண்டியதை அடைந்தது போலவும் அதுவே வாழ்க்கை இலக்ஷியம் போலும் பேசுவது தவறு. வாழ்க்கை எனும் பிரயாணத்தைச் செய்யவும் உயரிய இலக்ஷியங்களை அடையவும் கல்வி ஒரு சாதனம். இப்படிப்பட்ட நோக்கத்துடன் கல்வி பயின்றால் தான் பயன் உண்டு என்பது பேராசிரியர் ஹக்ஸ்லியின் அபிப்பிராயம்.

கல்வியே பண்பு, கல்வி உடையவர்களெல்லாம் பண்புடையவர்கள் என்பது முழுவதும் உண்மையில்லை ஆனாலும் கல்வி பண்புக்கு ஆதாரம். அது போலவே குடும்பம் என்பது, பண்பு என்னும் நாற்றைக் காத்து, வளர்த்து, போஷித்துச் செடியாக்குகிறது. இச் செடியானது அனுபவத்தினால் வளர்ந்து பூத்துப் பசுமையுடன் குலுங்குகிறது. இந்தக் கட்டத்தில் தான் நம் பெண்மணிகள் வகிக்க வேண்டிய பிரதான பாகம் வருகிறது. நம் பெண்கள் இப்பாகத்தை வகிக்கும் திறனை அடையவேண்டிய தற்குரிய பயிற்சியையும் கல்வியையும் பெற்று அதை அவர்கள் சரிவரப் பிரயோகித்துத் தங்கள் தர்மங்களைச் செய்து வந்தால், சிறப்பாலும் பெருமையாலும் உச்ச நிலையில் விளங்கி இருக்கும் இந்தியா எதிர்காலத்தில் கண்ணுக்கெட்டிய தூரத்திலேயே இருக்கிறது எனலாம்.

ஸ்ரீமதி நாமகிரி சீனிவாஸன்.

யார் வல்லவர் ?

அன்று நான் ஸ்ரீரங்கம் போவதற்காக எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய் ரயிலில் ஏறப்போனேன். கூட்டம் சொல்ல முடியாமலிருந்தது. எள்ளுப் போட்டால் அது கீழே விழாது. யார் தோளிலாவது தொத்திக் கொண்டுதான் நிற்கும்.

ரயில் எழும்பூர் ஸ்டேஷனை விட்டுப் பெருமூச்சு விட்டபடியே கிளம்பியது. சிறிது நேரத்திற்கெல்லாம் தன் கடமையை உணர்ந்து கொண்டு அதிவேகமாகச் சென்றது. நான் நின்று கொண்டிருந்த வண்டியில் ஒரு முரட்டு ஆசாமி காலை நீட்டிக்கொண்டு பெரிய படுக்கையைப் பக்கத்தில் பரப்பி விட்டு உட்கார்ந்து விட்டான். கொஞ்சம்கூட மரியாதை அறியாத மனிதன். படுக்கையோடு விட்டால் தேவலை என்று கூறலாம். அதற்குப் பக்கத்தில் பெட்டி, கூஜா, இன்னும் சில சாமான்களை வேறே வைத்திருந்தான். கிட்டத்தட்ட நாலு பேர் உட்காரக்கூடிய இடத்தில் மேற்கூறிய சாமான்களையெல்லாம் அடைத்து வைத்திருந்தால் யாருக்குத்தான் கோபம் வராது ?

பெட்டியிலிருந்தவர்களுக்குக் கோபம் மூக்குக்கு மேல் வந்தது. ஆனால் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. காரணம் அந்த முரட்டு ஆசாமி மீசையை வைத்துக்கொண்டு பார்வைக்கு மிகவும் பயங்கரமாகக் காட்சியளித்தது தான். கோழைகள் ! யாராவது துணிச்சலாக அந்த ஆசாமியிடம் போய், டேய் இந்தப் பெட்டி படுக்கை எல்லாம எடுக்கப் போகிறாயா இல்லையா என்று கேட்க வேண்டுமே ? ஊஹூம் இடையவே கிடையாது. நான் கேட்டுவிடலாமா என்று ஆத்திரப்பட்டேன். ஆனால் நான்

பெண். மேலும் என் அண்ணா பரமசாது. அவன் பேசாமல் நிற்கும்போது நான் கேட்டால் என்னைக் கோபிப்பான். மேலும் நான் காந்தியின் கொள்கைப்படி நடக்கப் போவதாக என் அண்ணாவிடம் கூறியிருக்கிறேன். காந்தியோ வலுச்சண்டைக்குப் போகக்கூடாது என்று கூறியிருக்கிறார். எனவே மேற்கூறிய காரணங்களைக் கொண்டு என் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன். முரட்டு ஆசாமியோ தன் இஷ்டப்படி காலை நீட்டுவதும், கையை மடக்குவதும், பத்திரிகை படிப்பதும், சுருட்டு பிடிப்பதுமாக இருந்தான். கடைசியாக வண்டி விருத்தாசலம் ஸ்டேஷனை அடைந்தது. அந்த ஸ்டேஷனில் ஏகக் கூட்டம். காரணம் மார்கழி மாதம், வைகுண்ட ஏகாதசி மறுநாள். யாவரும ஸ்ரீரங்கநாதனை நமஸ்கரிக்க ஆவலுடன் வந்து கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு கொத்தவரைக்காய் வற்றல் போன்ற ஆசாமி ஒருவன் எங்கள் பெட்டியை எட்டிப் பார்த்தான். அவன் முரட்டு ஆசாமியைப் பார்த்து 'ஏன் சார் இடமிருக்கிறதா' என்று கேட்டான். 'இல்லை' என்றான் முரடன். அதற்கு மெலிந்த ஆசாமி 'ஏன் ஐயா யாரை ஏய்க்கிறே? பக்கத்திலிருக்கும் பெட்டி படுக்கையெல்லாம் எடுத்து மேலே போடு ஐயா. இவ்வளவு ஜனங்கள் வெளியே காத்துக்கிடக்கிறோம. நீ என்னடான்னா ஹாயா உட்கார்ந்திருக்கே. எடு அப்பா அதையெல்லாம்' என்றான். அதற்கு முரட்டு ஆசாமி சளைக்காமல் 'இந்தப்பெட்டி படுக்கையெல்லாம் வேறு ஒருத்தருடையது. அவர் இந்த ஸ்டேஷனில் இறங்கிக் காப்பி சாப்பிடப் போயிருக்கிறார். இந்த இடம் அவருடையது. ஆகையால் தான் இவைகளை இங்கே வைத்திருக்கிறார். இதோ மறுபடியும் வந்து ஏறுவார்' என்றான். ஆனால் அந்த மெலிந்த ஆசாமி விட்டவனைத் தோன்றவில்லை. ரயில் புறப்படும் வரை அங்கேயே காத்திருந்தான். ரயிலும புறப்பட்டது. தடித்த மனிதன் சொன்னபடி யாரும் ஏறவில்லை. போயிருந்தாலல்லவா ஏறப் போகிறான்? அந்த விநாடியே மெலிந்த மனிதன் சட்டென்று வண்டிக்குள் ஏறி முரட்டு மனிதன் பக்கத்தில் நின்றான். நாங்கள் எல்லாம் (நான் இல்லை) பயந்து போனோம். ஏதோ சண்டை உண்டாகப் போகிறது என்று தீர்மானித்து விட்டோம். மெலிந்த ஆசாமி என்ன செய்தான் தெரியுமா? அடுத்த க்ஷணமே அங்கிருந்த பெட்டி படுக்கை எல்லாவற்றையும் தூக்கி வெளியே எறிந்தான்.

முரட்டு ஆசாமி கோபத்தால் சீறினான். 'ஏன் ஐயா அதையெல்லாம் வெளியே எறிந்தீர்' என்று கையை ஓங்கினார். அவருடைய இடது கையும் வலது கையும் சண்டை போட ஆயத்தமாக இருந்தன. 'விட்டேனா பார் உன்னை' என்று கறுவியபடியே மேலே பாயத் தயாராக இருந்தான். மெலிந்த ஆசாமி நீக்கு பெப்பே நீனு தாத்தாக்கு பெப்பே என்பது போல் தானும் சண்டைக்குக் கிளம்பத் தயாரானார். பின் 'ஓய் யார்கிட்டே உன் கைவரிசை காண்பிக்கப் பார்க்கிறே' என்றான்.

'பாவம்; காப்பி சாப்பிடப் போனவன் ரயிலை விட்டுவிட்டானென்றால் அவன் சாமான்களாவது அவனிடம் சேரட்டும். சாமானும் ரயிலோடுபோய் விட்டது என்று அல்லாடுவானேன்' என்று கூறியபடியே மேலும் சாமான்களைத் தூக்கி பிளாட்பாரத்தில் எறிந்து விட்டான். முரடன் எவ்வாறு தடுத்தும் பிரயோஜனப் படவில்லை. அவன்கண் நெருப்பைக் கக்கியது. மீசை துடிதுடித்தது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த எங்களுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. இதற்குள் மெலிந்த தேகி கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டான். ரயிலில் இருப்பவர்கள் எல்லாரும் தனக்கு விரோதமாகத் தானிருக்கிறார்கள் என்று அவன் தெரிந்துகொண்டதால மறுபடியும முரடன் சண்டையைக் கிளப்பவில்லை. சோர்ந்து ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டான்.

ஒரு வேடிக்கை கேட்டீர்களா? ரயில் லால்குடியை அடைந்தவுடன் டிக்கெட் பரிசோதகர் வந்து அவர்கள் இருவரையும் டிக்கெட் கேட்டார். அவ்விருவர்களிடமும் டிக்கெட் இல்லை.

A. C. கௌசல்யா,
ஐந்தாம படிவம, 'அ' பிரிவு.

எங்கள் பள்ளி அரசாங்கம்

நம் நாட்டில் ஆட்சிமுறை கூட்டாட்சியில், அதாவது சமஷ்டி முறையில் நடைபெறுகிறது. பல ராஜ்ஜியங்களைக் கொண்ட நம்நாட்டின் அகில இந்திய விவகாரங்கள் அனைத்தையும் கவனிப்பது யூனியன் அரசாங்கம் என்ற மத்திய அரசாங்கம் ஆகும். யூனியனின் உறுப்பான ராஜ்ஜியங்கள் தத்தம் விவகாரங்களைத்தாமே கவனிப்பது ராஜ்ஜிய அரசாங்கமாகும். இத்தகைய திட்டப்படியே எங்கள் பள்ளி அரசாங்கமும் நடைபெறுகிறது.

பள்ளியில் வகுப்பு அரசாங்கம் :— இது மாகாண அரசாங்கத்தைப்போல் நடைபெறுவதாகும். வகுப்பு நிர்வாகத்தை நடத்துவது வகுப்பு அரசாங்கம். இதன் உறுப்புக்களாவன :—வகுப்புத்தலைவி (Class Leader) அணித்தலைவிகள் (Squad Leaders), இவர்களின்சபை (class leader's Council).

வகுப்பு அரசாங்கத்தின் நிர்வாகத்தலைவர் வகுப்புதலைவி ஆவாள். இவள் அவ்வகுப்பு மாணவிகளால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவாள். இவளது பதவியின் ஆயுட்காலம் ஒரு ஆண்டு தான். ஆனால் மறுவருடமும் இவள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக்கு வரலாம். இவள் நல்லதிறமை வாய்ந்தவளாகவும், தன் கடமையைக் குறைவின்றிச் செய்பவளாகவும் இருத்தல் வேண்டும்.

இவளுக்கு உதவியாக அந்தந்த வகுப்பில் ஐந்து அணித்தலைவிகள் (Squad Leaders) தேர்ந்தெடுக்கப்படுவர். வகுப்பு அரசாங்கத்தை வகுபபுத்தலைவியுடன் ஒத்துழைத்துச் செம்மையாக நடத்துவதே இவர்களின் கடமையாகும். ஒத்துழையாத அணித்தலைவிகளை நீக்க வகுப்புததலைவிக்கு உரிமையுண்டு. வகுப்பின் அமைதி, வகுப்பின் சுத்தம், சுற்றுப்புறச் சுத்தம், மாணவியரின் சுத்தம, மாணவியரின் ஒழுங்குமுறை இவைகளைக் கவனிப்பதே இவர்களது கடமை.

வகுப்புச்சபை :—வகுப்புத்தலைவியே இதன் தலைவர். அணித்தலைவிகளே இதன் அங்கத்தினர். வகுப்பின் நலனுக்காகக் கடமைகள் ஆற்றுவதைபபற்றி ஆலோசனை செய்வதும், வகுப்பு அரசாங்கம் ஒழுங்காக நடைபெறச் சட்டங்கள் இயற்றுவதும் இச்சபையின் வேலையாகும். இது மாதம் ஒரு முறை அல்லது இரு முறை கூட்டப்படும. மேற்கூறிய திட்டங்களின்படி எல்லா வகுப்பு அரசாங்கங்களும் நடைபெறுகின்றன.

பள்ளியின் மத்திய அரசாங்கம் :—பள்ளி யூனியன் நிர்வாக மனைத்தையும் நடத்துவது பள்ளியின் மத்திய அரசாங்கமாகும். இதன் உறுப்புக்களாவோர்:—பள்ளித்தலைவி (School Pupil Leader), உதவி பள்ளித்தலைவி (Assistant School Pupil Leader), மந்திரிகள், பார்லிமெண்ட், பிரதிநிதிகளின் சபை (Representatives Council). பள்ளியூனியன் அரசாங்கத்தலைவர் பள்ளித்தலைவி ஆவாள். இவளுக்கு உதவி செய்ய உதவி பள்ளித்தலைவி இருக்கிறாள். ஆண்டுதோறும் பள்ளியில் நடக்கும் தேர்தலில் இவ்விருவரும் ரகசிய ஓட்டு மூலம் பள்ளிமாணவியரனைவராலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் பதவியின் ஆயுட்காலம் ஓரே ஆண்டே.

பள்ளியூனியனின் நிர்வாக அதிகாரமனைத்தும் சரிவர நடத்தச்செய்வதும், அவைகளை மேற்பார்வையிடுவதும் பள்ளிததலைவியினது வேலையாகும். பள்ளியின் பொது அமைதிக்காகச் சட்டங்களை இயற்றவும, சட்டங்களை மீறி நடந்தவர்களுக்கு அபராதம் விதிக்கவும் இவளுக்கு உரிமையுணடு.

பார்லிமெண்ட் (Parliament) :— ஒவ்வொரு வகுபபிலிருந்தும் மூவர் இதன் அங்கத்தினராக நேர்முகமாகத தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் நல்ல சொல்வன்மையுடையவராயும, அரசாங்கத்தின் குற்றங்களை எடுத்துரைக்கும் திறனுடையவராயும இருத்தல் வேண்டும். மேலும் பள்ளியில வேறு எந்த அலுவலுக்கும் தலைவராக இருத்தல்கூடாது. ஒரு சபாநாயகரும் உதவி சபாநாயகர் ஒருவரும தேர்ந்தெடுக்கப்படுவர். இவரே இசசபையின் தலைவராவர். பார்லிமெண்ட் விவகாரங்களைக் கவனிக்க ஒரு காரியதரிசியும் உண்டு.

பார்லிமெண்டின் அங்கத்தினருக்குக கேள்விகள் கேட்கவும், பள்ளித்திட்டங்களைப்பற்றி விவாதிக்கவும, பள்ளி அரசாங்கத்தின் குற்றங்களை எடுத்துரைக்கவும் உரிமை உண்டு.

பார்லிமெண்ட் நடைபெறும் முறை:—பார்லிமெண்டு கூடுவதற்கு இருதினங்களுக்கு முன்பாகவே காரியதரிசி அங்கத்தினர்களிடமிருந்து கேள்விகளைச் சேகரிப்பர். அவைகளில் சட்டத்திற்கு விரோதமானவை நீங்கலாக மற்றவை ரகவாரியாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்த மந்திரிகளின் வசம் ஒப்புவிக்கப்படும். மந்திரிகள் ஆலோசனை செய்து தக்க பதில் தயாரித்துக் கொள்வர்.

கேள்விகளைச் சேகரித்து மந்திரிகளின் வசம் ஒப்படைப்பதும், சபை கூடுவதற்கு ஏற்றவசதிகள் செய்வதும், மந்திரிகள், அங்கத்தினர் இவர்கள் எல்லாரும் வந்திருக்கிறார்களா எனக் கவனிப்பதும் காரியதரிசியின் வேலையாகும்.

பள்ளியின் பார்லிமெண்டுக்கு மந்திரிகளும், அங்கத்தினர்களும் தவறாமல் வருதல் அவசியமாகும். அரசாங்கக்கட்சி என்றும், எதிர்க்கட்சியென்றும் இச்சபையில் இருபிரிவுகளுண்டு. சபாநாயகர் (Speaker) வந்து அவரது ஸ்தானத்தில் அமர்ந்ததும் அவரது உத்தரவின் பேரில் கேள்விகள் கேட்கப்படும். கேள்வி எந்த இலாகாவைப் பொறுத்துள்ளதோ, அந்த இலாகாவின் மந்திரி அக்கேள்விக்குத் தக்கவாறு பதிலளிப்பார். அப்பதில் திருப்தியளிக்காவிடில் குறுக்குக் கேள்விகள் கேட்கலாம். ஆனால் சபாநாயகரின் கட்டளைப்படி அவை நிறுத்தப்படல் வேண்டும். பள்ளி ஒழுங்கு, குடிதண்ணீர், வாசகசாலை, படக்காட்சி, பொதுச்சுகாதாரம், உணவருந்துமிடம், வகுப்பின் தேவைகள், விளையாடுமிடம், கூட்டங்கள் (Meetings) முதலியவைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்கப்படும். அவசரமாக நிறைவேற்ற வேண்டிய வசதிகளுக்கு வேண்டிய சட்டங்கள் உடனே அமுலுக்குக்கொண்டு வரப்படும். மற்றவை ஆலோசனைக்கு வைக்கப்படும். இது மாதத்திற்கு ஒருமுறை கூடும்.

பிரதிநிதிகளின் சபை (Representatives Council):—ஒவ்வொரு வகுப்புப் பிரதிநிதிகளும், மந்திரிகளும் அடங்கிய சபையாகும் இது. ஒவ்வொரு வகுப்புத் தலைவியும் அவ்வகுப்பின் பிரதிநிதியாவாள். இச்சபையின் தலைவர் பள்ளித்தலைவியாவாள். இச்சபையின் அங்கத்தினர்களும், மந்திரிகளும், பள்ளித்தலைவியுடன் கலந்தாலோசித்து பள்ளி நிர்வாகம் அன்னதம் செம்மையாக நடைபெறச் சட்டங்கள் இயற்றுவர். மேலும் ஒவ்வொருவரும் எங்ஙனம் செயலாற்ற வேண்டுமென்பதையும் தீர்மானித்து அதன்படி செயலாற்றுவர்.

பள்ளியின் நிர்வாகச் செயல்கள் பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், பள்ளியின் ஒழுங்கும் அமைதியும், மராமத்து எனப் பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இலாகாவின் நிர்வாகத்தையும் ஒவ்வொரு மந்திரி ஏற்றுள்ளனர். குறிப்பிட்ட சில பிரதிநிதிகளின் உதவியால் ஒவ்வொருவரும் தத்தம் வேலையை நிறைவேற்றுகின்றனர். மந்திரிகளின் தலைவர் பிரதம மந்திரி, பள்ளியில் நடைபெறும் கூட்டங்களிலும், பிரார்த்தனைக் கூட்டத்திலும் ஒழுங்கு, அமைதி இவைகளையும், விளையாட்டு மைதானம், உணவருந்துமிடம், குடிதண்ணீர் முதலியவைகள் சுத்தமாக இருக்கின்றவை என கவனிப்பதும் இவர்களது வேலையாகும். பிரசங்கங்கள் முதலியன நடைபெற வசதிகள் செய்வதும் இவர்களது கடமையாகும். சட்டங்களை மீறி நடப்பவர்களுக்கு அபராதம் விதிக்கவும் இவர்களுக்கு உரிமையுண்டு. மந்திரிகளும், பிரதிநிதிகளும் தத்தம் கடமைகளைச் செம்மையாக நடத்துவதொடு மற்ற வேலைகளிலும் பள்ளித்தலைவியோடு ஒத்துழைத்து உதவி செய்வர்.

இவைகளன்றி Hobbies club, Science club, Fine Arts Society, Musical choir, Literary Association (Tamil, English, Samskrit & Hindi) Games முதலியவைகளுக்குத் தனித்தனியே இருகாரியதரிசிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்காரியதரிசிகள் மந்திரிகள், பிரதிநிதிகள் இவர்களின் உதவியினால் தத்தம் கடமைகளைச் சரிவரச்செய்வர்.

இங்ஙனம் எங்கள் பள்ளி அரசாங்கம் தலைவர், மந்திரிகள், பார்லிமெண்ட், பிரதிநிதிகளின் சபை முதலியவைகளைத் தன்னகத்தே கொண்டு சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைக்கொண்ட ஓர் உன்னத குடியரசெனத் திகழுகிறது.

R. பாகீரதி,
ஆறும் படிவம், 'அ' பிரிவு.

புது பொம்மை

நவராத்திரிக்கு இன்னும் பத்தே நாட்கள் இருக்கின்றன. என் சிநேகிதிகள் எல்லாரும் அவரவர்கள் வீட்டில் வாங்கப்பெற்ற பொம்மைகளைப்பற்றி படி படியாய் அளக்க ஆரம்பித்தனர். எங்கள் வீட்டிலே இதைப் பற்றி ஒரு பேச்சும் இல்லை. எனக்கு ஆத்திரமாக இருந்தது. நானும் என் சிநேகிதர்களைப் போல் பெருமையாய் பேசிக்கொள்ள ஒரு பொம்மைகூட என் அப்பா வாங்கவில்லையே என்று எனக்கு கோபம் பொங்கியது. ஆனால் என் செய்யலாம் என் அம்மாவிடம் இதைச் சொன்னால் கட்டாயம் என் அப்பாவைக் கேட்பாள். என் அப்பாவுக்கோ ஆபீஸில் வேலைத் தொந்தரவு அதிகமாயிருந்ததால் கட்டாயம் கோபம் வரும். வீட்டில் அனாவசியமாய் ரகளை ஏற்படும். அதனால், ஏற்கனவே இருக்கும் பொம்மைகளுக்குக்கூட தலைவலி ஏற்பட்டு விட்டால் கொலுவே வைக்கமுடியாது. 'புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டுபோய் விட்டதாம்' என்கிறபடி ஆகிவிட்டால், பிறகு என் பட்டு பாவாடைகளுக்கு வேலையே இல்லாமற் போய் விடுமே! அதனால் "பொறுமை என்னும் நகையணிந்து' என அவ்வையாரின் பாட்டைப் பாடிக்கொண்டு வெகு சிரமத்துடன் பொறுத்துக் கொண்டிருந்தேன்.

நவராத்திரி ஆரம்பத்தன்று எங்கள் வீட்டு வேலைக்காரன் பொம்மைப் பெட்டியை பரணிலிருந்து இறக்கி ஒவ்வொரு பொம்மையையும் துடைத்து வைத்தான். பிறகு படி அமைத்து வெகு அழகாக மின்சார விளக்குகள் பொருத்தினர். பொம்மைகள் படிகளில் அற்புதமாக விளங்கின. நடு நாயகமாக வைக்கப்பெற்ற 'சேஷசயனன்' திருப்பாற்கடலில் ஆதிசேஷனின் மீது பள்ளிகொண்டிருப்பதுபோலவே விளங்கிறது. நீலகடல்போன்ற தோற்றமளிக்க நீலநிற விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அவைகள் தாமே அடிக்கடி எரியவும் அணையவும் விசை வைக்கப்பட்டிருந்தது. நீல விளக்கு எரியும்போது திருமால் ஆசி கூறுவதைப் போல் கையை ஆட்டுவது தேவர்கள் பணிவது போன்ற தோற்றம் அளிக்கும்படி அமைக்கப் பட்டிருந்தது. அந்த சமயத்தில் என் சிறு தங்கை தனக்குத் தெரிந்த பாட்டு ஒன்றை யார் கேட்டாலும் கேளாவிட்டாலும் ஓயாது பாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பாட்டு,

" க்ஷீராப்தி சயனனான தேவனே
எனைக்காவாய்
அடைக்கலம் என்றோடி வந்தோம்
அபயம் அபயம் ஆகரிப்பாய் "

ஏதோ புராணப்படத்தில் தோன்றிய திருமாலை தேவர்கள் தொழும் பாட்டு. கொலுவிற்கு வந்தவர்களுக்கு பொம்மைகளின் அழகைப் பற்றியும் அது வாங்கின வரலாற்றைப்பற்றியும் ஓயாது சொல்லி திருப்தி அடைந்தேன். முதல் நாளானதால் கேஸரி செய்யப்பட்டிருந்தது. அதை வெகு நாசூக்காக மெல்லிய பேப்பரில் சுற்றி வைத்திருந்தேன். பூ, சந்தனம், வெற்றிலை பாக்கு முதலியவற்றோடு இந்த சுருள் ஒன்றையும் வைத்துக் கொடுத்ததில் பெருமை தலை கொள்ளவில்லை.

இவ்வளவு குதூகலப்பட்டும் என் மனது ஒரு கோடியில் சிறிது அதிருப்தி இருக்கத் தான் செய்தது. அது அந்த வருஷத்திற்கு புது பொம்மை வாங்கவில்லை என்பது மறக்க முடியாததாய் இருந்தது.

இரவு எட்டுமணிக்கு எங்கள் வீட்டுக் மோட்டாரின் ஹார்ண் சப்தம் கேட்டு அப்பா வந்து விட்டார் என்று தெரிந்தும் கோபத்தினால் எழுந்து எட்டிக்கூட பார்க்கவில்லை. ஆனால் என் தங்கை தூக்கமுடியாமல் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு உள்ளே ஆவலுடன் 'அம்மா, அம்மா, அப்பா வந்துவிட்டார்' என்று கட்டியங் கூறியதைக்கேட்டு என் அம்மாவும் நானும் ஒரே சமயத்தில் அவள் கையிலிருந்து பெட்டியை வாங்க ஓடினோம். இசற்குள் என் தந்தையும் கூடத்திற்கு வந்து சேர்ந்தார். மிகுந்த திருப்தியுடன் கொலுவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, அவர் வாங்கிவந்த பொம்மைகளைக் காட்ட பார்சலைப் பிரித்தார். நாங்களும் ஆவலுடன் எந்த சினிமா இராணியின் பொம்மையோ அன்றி எந்த தேசத் தலைவரின் சிலையோ என்று அறிய குனிந்துநின்று கொண்டிருந்தோம். வெளியே வந்ததையா மூன்று குரங்கு பொம்மைகள்! எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

உடனே பார்க்கவேண்டுமே என் தகப்பனாரின்! பிரதாபத்தை எப்போதுமேதான் வாங்கி வந்த எந்த சாமானையும் சிலாகித்துக்

கொள்ளும் சுபாவம். அதற்கேற்ப, என்னைப் பார்த்து "இதோ பார் இந்த பொம்மைகளை" என்று மூன்று குரங்குகளையும் வரிசையாய் நிறுத்திவைத்தார். முதல் குரங்கு தன் கைகளால் இரு காதுகளையும் பொத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தது. அடுத்தது இரு கண்களையும் மூடிக்கொண்டிருந்தது. மூன்றாவது தன் வாயைப் பொத்திக்கொண்டிருந்தது. அவைகளைக் காட்டி என் தந்தை, "கெட்ட விஷயங்களைக் கேளாதே, தகாததைப் பார்க்காதே, வீண் வம்பு பேசாதே, என்று இவைகள் விளக்குகின்றன என்று கூறி சிரித்தார். அதன் உள் அர்த்தத்தை அறிந்து கொண்ட நான் மிகுந்த சந்தோஷம் அடைந்தேன். உடனே நான் சிறுமியாயிருக்கும் போது கற்ற ஒரு சிறிய பாட்டு நினைவுக்கு வந்தது.

"இரண்டு சிறு கண்கள் தேவனைப்பார்க்க
இரண்டு சிறு காதுகள் அவர் சப்தம் கேட்க
இரண்டு சிறு கைகள் அவர் வேலை செய்ய
இரண்டு சிறு கால்கள் அவர் வழி நடக்க
ஓர் சின்ன நாவு அவர் புகழ் பாட"

சிவகாமி,
மூன்றாம் படிவம், 'ஆ' பிரிவு.

சங்ககாலமும் சோழநாடும்

மனிதனின் மனத்தைத் தங்கள் கொள்கைக்குத் தக்கவாறும் தங்கள் நடத்தைக்குத் தக்கவாறும் நிலை நிறுத்தக்கூடிய எண்ணங்கள் அற்புகாலமும் இல்லாமலிருந்ததில்லை. சங்க கால நூல்களில் உள்ள நூல்களின் ஆதாரங்கள் பல இருக்கின்றன. அறிவின் பண்பட்ட நிலைமை கலப்புத் தன்மையுடையதாக இருந்தது. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியைப் பற்றிய காலவரலாறும், நம்பத்தக்க சான்றுகளும் இல்லாமையால் தனித்தனிச் செய்யுட்களின் காலத்தைத் தக்க சான்றின்றி நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தக் காலத்தைக் கரிகாலன் காலமென்று சொல்லலாம்.

நாம் சங்ககாலத்திற்கு முன்னுள்ள சரித்திரத்தை அறிய விரும்புவது மிகவும் கடினம். மணிமேகலையின் வாயிலாக நம் முன்னோர்கள் இறந்தவர்களை எப்படி அடக்கஞ் செய்தனர் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். இந்த முறையில் சில முறை ஆரிய முறையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தக் கலப்புப் பழக்கத்திற்கு வேறொரு சான்றும் தமிழ் இலக்கியத்தில் இருக்கிறது. ஆரிய முறையில எட்டுவகை மணங்கள் உள்ளன. தமிழ் முறையில் அவ்வித முறை சங்ககாலத்திற்கு முன் இல்லை. அப்பொழுது தமிழர்கள் எளிய முறையில் விவாகத்தை நடத்தினர். தொல்காப்பியர் எட்டுவகை மணத்தைப் பின்பற்றினர்.

'பட்டினப்பாலை' என்னும் நூலில் சோழநாட்டுக் கிராமங்களைப்பற்றி மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சோழநாட்டில கணக்கற்ற கிராமங்கள் இருந்தன. "வானம் பொய்ப்பினும்தான் பொய்யா பொன்னி" தன் சாரமுள்ள ஜலத்தினால் பூமியின் வளத்தை அதிகப்படுத்தி அதன் பலனை அளிக்கிறது. நன்றாய் வளர்ந்து நின்ற பயிர்களைக் கிராமத்திலுள்ள எருமைகள் தின்கின்றன. அதன் கன்றுகள் உயரமான நெற்களஞ்சியங்களின் அடியில் உறங்குகின்றன. தென்னஞ்சோலைகள், பழத்தோடுகூடிய வாழைத்தோட்டங்கள், கமுகு மரத்தோட்டங்கள், மஞ்சக்கொல்லைகள், பலவிதமான மாமரங்கள், குலையோடுகூடிய பனைமரங்கள், பலாமரத்தோட்டங்கள், கருப்பங்கொல்லைகள் முதலியன கிராமங்களை அழகுபடுத்தின.

புன்முறுவலுடன் நகைகள் அணிந்த மணமாகாத இளம பெண்கள் குற்றமற்ற பார்வையுடன் வெளியில் உலர்த்தப்பட்ட நெற்குவியல்களைப் பாதுகாத்து வந்தனர். அவர்கள் கோழிகளைத் தன்னுடைய காதணிகளால் அடித்து விரட்டினர் என்று ஒரு புலவர் கூறியிருக்கிறார். இதன்மூலம் சோழநாட்டில் பொருட்செல்வத்திற்குக் குறைவு இல்லை என்பது தெரியவருகிறது.

சோழநாட்டில் உள்ள ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்ததெனப் பொருநாற்றுப்படை என்னும் நூல் கூறுகிறது.

அரசியல் தொன்றுதொட்டு நடந்துவந்தது. பட்டத்திற்கான சண்டைகளும், உள்நாட்டுக் கலகங்களும் இருந்தன. ஆனால் அதிகம் இருந்ததாகக் கூறுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை. வடமொழியில் அரசாங்கத்திற்கு ஏழு அங்கங்கள் கூறப்பட்டுள்ளன. அதைச் சோழ அரசர்கள் கைக்கொண்டனர்.

அரசாங்கப் பொக்கிஷம் மூன்றுவித வருமானத்தால் நிரம்பியது. மூன்றுவித வருமானங்கள்: (1) நிலவரி (2) சுங்கவரி (3) வெற்றி. அரசர்கள் பெருந்தன்மையுடையவர்களாக இருந்து நாட்டை அரசாண்டுவந்தார்கள். அமைச்சர்களுடைய அறிவுரையாலும், சமயோசித புத்தியாலும் அரசியல் நல்ல முறையில் நடைபெற்றது.

மக்கள் உள்ளத்தில் பழைய வழக்கங்கள் வேரூன்றியிருந்தபடியால் புதிய வழக்கங்களைக் கைக்கொள்ளவில்லை. அரசாட்சி சிறந்தமுறையில் நடந்ததால் பஞ்சம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சோழநாட்டு அரசாங்க அதிகாரமானது பொதுமக்களுடைய ஆதரவால் நடைபெற்றது. ஆதிகால வடமொழிப் புலவர்கள் கூறியுள்ளபடி சோழநாட்டு அரசியலானது நடைபெற்று வந்தது. ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற உறுப்புகளைப்பெற்று அரசர்கள் அரசியலை நடத்திவந்தார்கள்.

மத குருக்கள் எல்லாக் காரியங்களையும் நடத்தினர். வைத்தியர்கள் அரசர்களுடைய உடல் நலனையும், மக்களுடைய உடல் நலனையும் பேணி வந்தனர். சோதிடர்கள் பொது மக்களுடைய காரியங்களுக்கு நாள் பார்த்துக் கூறிவந்தனர். அமைச்சர்கள் வரவு செலவு கணக்குகளையும், நியாய பரிபாலனத்தையும் கவனித்து வந்தனர். அரசன் ஏதாவது குற்றம் செய்து விட்டால், அதைத் திருத்தும் உரிமை அந்நாட்டில் வாழும் சான்றோர்களுக்கு உரித்தாய் இருந்தது. அக்கருத்தினால அரசியல் வினைக்குழுவில் நாட்டிலுள்ள பெருமக்களுட் சிலரும் இடம் பெற்றிருந்து குடிமக்களுடைய குறைகளை அறிவித்து வருவாராயினர்.

சோழநாட்டில் நீதிமன்றம் நிறுவப்பெற்றது. மக்களால் தீர்க்கமுடியாத வழக்குகளை இம்மன்றம் தீர்த்தது. நீதிபதிகளை அரசர்கள் நியமிப்பார்கள். அரசாங்க அதிகாரம் அரசனிடத்திலும், ஐம்பெருங் குழுவினிடத்திலும் இருந்தது.

இந்தச் சிறந்த முறை பாண்டியநாடு, சோழநாடு ஆகிய இந்த இரண்டு நாடுகளிலும் இருந்தது. இந்தமுறை மகதராஜ்யத்திலும் பரவியது என்று தெரியவருகிறது. நீதி அரசன் இருந்த இடத்திலேயே வழங்கப்பட்டது. மன்றம், அரசன் மக்களுடன் கலந்து ஆலோசிக்கும் இடமாக இருந்தது. கிராம மக்கள் பெரிய மரத்தடியில் இருந்துகொண்டு பொதுக் காரியங்களைக் கவனித்தனர். மரத்தடியிலேயே கிராமிய நடனங்கள் நடந்தன. இந்நடனங்களில் பெண்கள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

அரசாங்கத்தின் வருமானம் நிலவரியும், வியாபார வரியுமாகும். நிலவரி எவ்வளவு கிடைத்தது என்று திட்டமாய்க் கூறமுடியாது. விவசாயிகள் நாட்டிற்கு முதுகெலும்பாக இருந்தனர்.

பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானுக்கும், அறுமுகச் செவ்வேளாகிய முருகனுக்கும், நீலமேனியனாகிய திருமாலுக்கும், பலதேவனுக்கும் உரிய திருக்கோயில்கள் அமைந்திருந்தன. இவையன்றிக் கொற்றவை கோயிலும், காமவேள் கோட்டமும், சாத்தன் கோயிலும், சமணப்பள்ளியும் போதி அறவோனை வழிபடுதற்குரிய புத்த விகாரமும், இந்திரன் கோயிலும், காவற் பூதங்களின் கோயில்களும் இருந்தன.

திறமையுள்ள சைன்யம் சோழராஜ்யத்தில் இருந்தது. சேனைத் தலைவர்களை ஏனாதி என்று அழைத்தனர். நச்சினார்க்கினியர் அரசர்கள் ஒரு விழா நடத்தி அதில் சேனைத் தலைவர்களுக்கு மக்களின் முன்னிலையில் ஒரு மோதிரத்தைப் பரிசாக வழங்குவார்கள் என்று கூறியுள்ளார்.

புறநானூற்றில் சோழநாட்டு போர்வீரர்கள் போரில் இருக்கவேண்டிய நிலைமையைப் பற்றித் தெளிவாக ஒருபுலவர் கூறியுள்ளார். அரசன் கொல்லப்பட்டாலும் அல்லது காயமடைந்தாலும் வீரர்கள் தோல்வியை ஒப்புக்கொள்வார்கள். அரசர்கள் அரசாங்கத்திற்கும், யுத்தத்திற்கும் தலைமை வகித்ததோடு மட்டுமன்றிச் சமூக வாழ்விலும் தலைமை வகித்தார்கள். அரசர்கள் கலையை நன்கு போற்றி வந்தனர். அரசர்களும், சேனைத் தலைவர்களும் தங்களுடைய வாழ்க்கையின் இன்பத்தைக் கூடி, உணவு முதலியவற்றால் அனுபவித்தனர். திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

புலவர்களும் அதில் பங்கெடுத்துக் கொண்டனர். புலவர்கள் இல்லையேல் திருவிழாக்களும் இல்லை.

செல்வந்தர்களின் பொழுதுபோக்கு செய்யுள் இயற்றுதல், பாட்டு, நடனம் முதலியவை. ஆண், பெண் என்ற பேதமின்றிச் சமமாக மதிக்கப்பட்டனர். காலத்துக்குத் தக்கவாறு கவிகள் இயற்றப்பட்டன. கவிகளுக்குத் தக்க சன்மானங்கள் கிடைத்தன. வாழ்க்கைக்குத் தகுந்தவாறும், எளிய நடையிலும் நூல்கள் இயற்றப்பட்டன. செய்யுட்கள் பிற்காலத்திய செய்யுட்களைவிட சொற்சுவை, பொருட்சுவை மிக்கவையாயும், தெய்வத்தன்மை பொருந்தியவையாயும் இருந்தன. நட்டுவனரும், நடனம் புரியும் மாதர்களும், சங்கீத வித்வான்களும் அதிகமாக இருந்தனர். இவர்கள் தங்கள் இசைக் கருவிகளுடன் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களை மகிழ்வித்தனர்.

பெருஞ் செல்வர்கள் செங்கல்லாலும், சுண்ணும்பினுலும் கட்டப்பட்ட மாளிகையில் வசித்துவந்தனர். மாளிகையைச் சுற்றித் தோட்டங்கள் இருந்தன. தோட்டங்களில் நீரோடைகள், கிணறுகள், குளங்கள், செயற்கை முறைகளில் அமைக்கப்பட்ட சிறு குன்றுகள், சிற்றுறுகள், நீர்வீழ்ச்சிகள், பூச்செடிகள், கண்ணுடி வீடுகள் இருந்தன. கண்ணுடியின் உபயோகத்தை நன்கு அறிந்திருந்தார்கள். மக்கள் சமயப் பிணக்கின்றிக் கூடி வாழ்நது வந்தனர்.

பட்டினப்பாலை என்னும் நூலில் கிராம மக்களின் நிலைமையைபபறறி நனகு கூறியுள்ளார் அதன் ஆசிரியர். பரதவர்கள் கடலோரங்களில் வசிதது வநதனர். அவர்கள் மீன் பிடித்து ஜீவனம செய்துவந்தனர். உழவர்கள் நிலத்தை உழுது எருவிட்டு, நீர்பபாய்சசி விவசாயம் செய்துவந்தனர். இத்தொழில வேளாண்மையாகிய ஆள்வினைத் திறத்தை வளர்த்தது. சிறிய நிலப்பகுதியில் நிறைந்த உணவுப் பொருள்களை விளைவித்து மக்களைப் பசிப்பிணியின்றி வாழச்செய்தனர். ஒரு யானை படுத்திருக்கும் அளவுடைய ஒரு சிறிய நிலத்தில் ஆண்டு ஒன்றுககு எழு யானைகள் உண்பதற்குப போதுமான நெலலை விளைவிக்கும் திறமையுடையவர்களாகச் சோழநாட்டிலே உழவர்கள் தங்கள் தொழிலில சிறந்து விளங்கினர். புதுப்புனல் ஆடுதல் இவர்களுக்குச் சிறந்த திருவிழா.

கடைத்தெருக்கள் சாமான்களுக்கு எற்றபடி பிரிக்கப்பட்டு மிகவும் அழகாய்த் தோற்றம் அளித்தன. "பட்டினப்பாலை" என்னும் நூல் வெளிநாட்டு வியாபாரத்தைப்பறறி விரிவாகக் கூறுகின்றது. நம் நாட்டில் நமக்குப் பயன்பட்டு மீதியுள்ள பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியும், தமக்குத் தேவையுள்ள பொருளை இந்நாட்டிற்குக் கொண்டுவந்தும் வாணிபத்தைப் பெருக்கினர். யவனர் முதலிய வெளிநாட்டு வணிகர்களும் சோழநாட்டிற்கு வந்து வாணிபம் செய்தனர். உள்நாட்டு வாணிபமும் சிறந்தமுறையில் நடைபெற்றது. பருத்தி நெசவிலும், பட்டு நெய்தற் தொழிலிலும் சிறந்து விளங்கினர். நூல் வியாபாரமும், பட்டு வியாபாரமும் மக்களின் முக்கிய வியாபாரமாக இருந்தன. சோழநாட்டின் கைத்திறன் வெளிநாட்டாரால் போற்றப் பெற்றது. வியாபாரம் பண்டமாற்று முறையில் நடந்தது.

நாட்டில் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. இத் திருவிழாக்கள் காலத்திற்குத் தக்கவாறு கொண்டாடப்பட்டன. இளம் பருவத்து ஆடவர்களும், மகளிரும் தங்கள் உடல் அமைப்புக்கு ஏற்றபடி நன்றாக விளையாடினார்கள். இளைஞர்கள் விளையாடாது சோம்பியிருத்தல் அவர்களுடைய உள்ளததிண்மையையும், உடல் வளர்ச்சியையும் சிதைக்குமெனப் பெற்றோர்கள் அறிவுறுததினர்.

இந்துமதம் வேரூன்றியிருந்தது. அரசர்கள் யாகங்கள் பல செயதனர். சோழநாட்டு மக்கள் சைவ சமயத்தைப பின்பற்றினர். மணிமேகலை காலத்தில் புத்தமதம் பரவ ஆரமபித்தது. ஆனால புத்தமதத்தால் இந்துமதம் எவ்வளவு தூரம பாதிக்கப்பட்டது என்று சொல்வதறகுத் தக்க சான்றுகள் இலலை.

சோழர்கள் கல்வித்திறத்தால் அறிவை வளர்த்தனர்; படைத்திறத்தால ஆண்மை பெற்றனர்; உழவு, வாணிபம முதலிய துறைகளால பொருளைப் பெருக்கினர்; அறிவும், ஆணமையும உடையோரைத தேர்நதெடுத்து, அவரின் உதவிபெற்று அரசியலை வளாத்தனர்; அன்பின் திறத்தால் உலகோரைத் தம சுற்றத்தோராகக் கருதி அன்பை வளாத்தனா. இறைவனை வழிபட்டு எல்லோருக்கும் நல்லனவே செய்து மகிழ்ந்தனர்.

S. B. ஸாரநாதன்.

அவள் யார்?

எனக்கு வருடாந்திரப் பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது. அதனால் நான் எனது படிப்பில் அதிகக் கவனம் செலுத்தலானேன். அன்று இரவு சாப்பிட்டுவிட்டு நான் எனது அறைக்குச்சென்று படிக்க உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் எனது பெற்றோரும் படுக்கச் சென்றுவிட்டனர்.

நான் சிறிதுநேரம் படித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் இதுவரைக்கும் எங்கோ மறைந்திருந்த ஒருத்தி என்னைத் தழுவத் தன் இரு கைகளையும் நீட்டிக்கொண்டு ஓடிவந்தாள். நான் திடுக்கிட்டேன். ஏனென்றால், என்னையும், அவளையும் சேர்ந்து என் தந்தை பார்த்தால் எனக்கு உதை தவறாது. அதனால் நான் அவளிடம் கெஞ்சினேன், என்னிடம் வர வேண்டாமென்று. ஆனால், அவள் மறுத்தாள். அதற்குள் என் தந்தை நான் படிக்கிறேனா என்பதைப்பார்க்க வரும் ஓசை கேட்கவே ஓடிவிட்டாள். வந்த தந்தையார் நான் படிப்பதைக் கண்டு பேசாமல் சென்றுவிட்டார். என்னுடைய தந்தை மறைந்தவுடன் அவள் மறுபடியும் வந்துவிட்டாள். நான் கெஞ்சினேன். ஆனால் அவள் ஜயித்துவிட்டாள். அவள் என்னை ஆலிங்கனம் செய்துகொண்டாள். அந்த இன்பத்தில் செயலற்றேன். அவள் யார் என்றறிய ஆவலாயிருக்கின்றதல்லவா உங்களுக்கு! அவள்தான் நித்திராதேவி.

R. சுகுணவல்லி,
ஐந்தாம் படிவம், 'அ' பிரிவு.

சங்கீதமும், அதன் பெருமையும்

இவ்வுலகில் அநேக கலைகள் பண்பாடுபெற்று சிறப்புடன் விளங்கி வருகின்றன. அவைகளில் சிறந்ததும, மேன்மையானதுமாயுள்ளது சங்கீதக் கலை. சங்கீதம் என்பது செவிக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடிய நாதத்தைப்பற்றிய ஒரு கலை. இது எல்லோருக்கும் இன்பத்தைத் தரக்கூடியது.

சங்கீதம் ஒரு உன்னதமான கலை ஆகும். இதற்குக் 'காந்தர்வவேதம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. கடவுள் வழிபாடு செய்வதற்கும், கடவுளை அறிவதற்கும் சங்கீதம் ஒரு முக்கிய சாதனமாகப் பயன்படுகிறது. சாமானிய பதங்களினால் வெளியிடமுடியாத அதிநுட்பமான கருத்துகளையும் சங்கீதத்தின் மூலமாக வெளியிட முடியும்.

மனிதன் தன் அறிவினாலும், யுக்தியினாலும் வளர்த்த பல அரும்பெருங் கலைகளில் சங்கீதமும் ஒன்று. பண்டைக்காலத்திலிருந்து நமக்கு வந்த விலைமதிக்கமுடியாத நிதிகளில் சங்கீதமும் ஒன்றாகும். வீணை வாசிப்பில் தேர்ச்சி அடைந்தவனும், சுருதி சாஸ்திரத்தில் நிபுணனானவனும், தாளஞானத்தை அடைந்தவனும் கஷ்டமில்லாமல் மோக்ஷ மார்க்கத்தை அடைகிறான் என்று பெரியோர் வாக்குகளின் மூலம் தெரியவருகிறது. இதிலிருந்து மோக்ஷ மார்க்கத்தை அடைவதற்குச் சங்கீதத்தை ஒரு சாதனமாகக் கொள்ளலாம் எனத் தெரிகிறது.

சங்கீதம் லலித கலைகளில் முதன்மையான இடம் பெற்றிருக்கிறது. லலித கலைகளில் முதன்மையான ஸ்தானம் வகிக்கும் இந்தச் சங்கீதத்தினால் ஒருவன் அடையும் நன்மைகள் கணக்கிடற்பாலதன்று. தேனையும், பாலையும் விரும்புவதுபோல எல்லோரும் சங்கீதத்தை விரும்புகிறார்கள். சங்கீதமற்ற நம் வாழ்வு சந்திரன் இல்லாத இரவுபோலவும், நீர் இல்லாத நதிபோலவும், மலரில்லாத கொடிபோலவும், மணமில்லாத மலர்போலவும் ஆகும்.

உயர்ந்த சங்கீதத்தைக் கேட்கும்போது நாம் மெய்மறந்து இன்பக்கடலில் மூழ்கி தெய்வீக உலகத்தில் உலாவுகின்ற உணர்ச்சியைப்பெறுகிறோம். மனிதனுடைய துர்க்குணங்களைப் போக்கி, நற்குணங்களைப் பெருக்கி, அவனை ஜனசமூகத்தில் ஒழுங்கானவனாக ஆக்கக்கூடிய சக்தி சங்கீதத்திற்கே உரியது இத்தகைய அரிய, பெரிய சக்தி சங்கீதத்தைத் தவிர வேறெதற்கும் கிடையாது. சங்கீதம் எத்தனையோ அரிய பெரிய விஷயங்களைச் சாதித்திருக்கிறது.

இலங்கைக்கு அரசனாக விளங்கிய இராவணன் ஒரு கொடிய அரக்கனாக விளங்கியபோதிலும் சிவபக்தி உள்ளவன். நாள்தோறும் தவறாமல் கயிலைக்குச் சென்று சிவபூஜை செய்து வருவது வழக்கம். ஒருநாள், கயிலைக்குச் சென்று வருவது கடினமாகத் தோன்றியதால் கயிலையையே தான் வசிக்கும் இட

மாகிய இலங்கைக்குக் கொண்டுவந்து விடவேண்டும் என்றெண்ணி கயிலையைத் தூக்கியபொழுது—குளிர்ந்த நிலவையும், கங்கையையும் தன் சடையில் தாங்கியிருக்கும்—சிவபெருமான் கோபங்கொண்டு தன் காலின் கட்டைவிரலினால் கயிலையை அழுத்த இராவணன் பூமிக்கும், கயிலைக்குமிடையில் அகப்பட்டுக்கொண்டான். அச்சமயம் தன்னை விடுவித்துக்கொள்வதற்காகப் பத்துத்தலைகளிலிருந்து ஒரு தலையையும், கையையும் வெட்டி எடுத்து அவற்றை வீணையாக அமைத்துக்கொண்டு, சாமவேதத்தைக் கானமாக இசைத்துக்கொண்டிருக்கையில், அக்கானத்தில் லயித்துவிட்ட சிவபெருமான் தன்னையும் மெய்மறந்து காலை எடுத்துவிட்டதும் கயிலைக் கடியில் அகப்பட்டிருந்த இராவணன் முகமலர்ச்சியுடன் வெளியே வந்தான். இவ்விதம் இராவணன் தன் இசையின் மூலம் சிவபெருமானையும் மகிழ்வித்து பல அரிய வரங்களைப் பெற்றான் எனத் தெரிகிறது.

மொகலாய சக்கரவர்த்திகளுள் மிக்க புகழும், வீரமும் நிறைந்த அக்பர் அரசாண்டுவந்த காலத்தில், அவரது சபையை அலங்கரித்த தான்ஸேன் என்னும் சங்கீத வித்வான் சில ராகங்களைப் பாடிக்கொண்டிருக்கையில் மானிடப் பிறவிக்கு அவசியமான கண்களை இழந்த ஒருவன் தான்ஸேனின் சங்கீத மஹிமையினால் தன் கண்களை மீண்டும் பெற்றான்.

நாதயோகியான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஒரு நாள் திருடர்களால் துன்புறுத்தப்பட்டபோது "முந்து வெனக நிப்ரக்கல தோடை முரகரஹராரார" என்ற க்ருதியைப் பாடினவுடன் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் வந்து திருடர்களின் உபாதையைத் தீர்த்து வைத்தார்கள். கொடிய தொழிலைக் கையாண்ட அத்திருடர்களும் தம் குணம் மாறி, அத்தீய தொழிலை விட்டு விட்டுப் பக்தர்களானார்கள் எனத் தெரிகிறது.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் என்ற சிறந்த வாக்கேயகாரர் ஒரு சமயம் எட்டயபுரம் போகும்போது வழியில் வெகுகாலமாக மழையில்லாமையால் மரங்கள் காய்ந்துபோய் பூமி பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தது; குடிகள் தண்ணீரில்லாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் துயரம் தாங்காமல், ஜலகஷ்டம் நீங்கவேண்டுமென்று நினைத்து அம்ருதேச்வரியை த்யானித்து ஆகாசத்தைப் பார்த்து 'ஆனந்தாம்ருதவர்ஷிணீ! அமிர்தவர்ஷிணீ!' என்று அமிர்தவர்ஷணி ராகத்தில் பாடினார். அப்பாட்டில் 'வர்ஷய, வர்ஷய,வர்ஷய' என்று பாடும்போது மழை பொன்மாரியாய்ப் பொழிந்தது. வேண்டிய அளவு மழை பெய்தவுடன் ஜனங்களின் வேண்டுதலின் பேரில் 'வர்ஷய, வர்ஷய, வர்ஷய,' என்பதை 'ஸ்தம்பய, ஸ்தம்பய, ஸ்தம்பய' என்று பாடினதும், மேகங்கள் கலைந்து சூரிய ஒளி உண்டாயிற்றாம்.

தென்னிந்தியாவில் காணப்படும் கர்நாடக சங்கீதம் பலவகைகளிலும் பெருமை வாய்ந்தது. இது இடமறிந்து பாடும் இசையமைப்பாகவும் திகழுகிறது. அதாவது வீரத்தைச் சித்தரிக்க தனி ராகங்களும், சோகத்தைச் சித்தரிக்க தனி ராகங்களும்; இவற்றைப் போலவே பக்தி, அன்பு, ஹாஸ்யம் முதலிய நவரஸ உணர்ச்சிகளையும் உருவாக்கி நம்முன் நிறுத்த தனித் தனி ராகங்களும் உள்ளன.

ஹம்ஸத்வனி, கேதாரகௌளம், மோஹனம், சாவேரி, நாட, பிலஹரி, போன்ற ராகங்கள் வீரரஸத்திற்குப் பிரசித்தமானவை. இந்த ராகங்களைக் கேட்கக் கேட்கப் போர்க்களத்திற்குச் செல்லும் வீரர்கள் உத்ஸாகமடைவார்கள்.

தன்யாசி, யதுகுலகாம்போஜி, போன்ற ராகங்கள் பக்தி ரஸத்திற்குப் பிரதானமானவை. இந்த ராகங்களை அவ்வப்பொழுது கேட்க பக்தியற்றவர்களும் நாளடைவில் பக்தியுடன் விளங்குவார்கள். இந்த ராகங்கள் பஜனை மடங்களிலும், பிரபல கச்சேரிகளிலும் இசை நாடகங்களிலும் உபயோகப்படுகின்றன.

ஆரபி, தன்யாசி, மோஹனம் போன்ற ராகங்கள் மங்களகரமானவை. ஆச்சரியம் கலந்த பக்தி ப்ரவாகத்திற்குக் காம்போஜி ராகம் ஏற்றது.

ஸஹானா, யதுகுலகாம்போஜி, நீலாம்பரி, முகாரி, நாதநாமக்ரிய, கேதாரகௌளம் போன்ற ராகங்கள் கருணாரஸத்திற்குப் பிரசித்தமானவை. இந்த ராகங்களைக் கேட்கக் கேட்க கருணையற்றவர்களும் கருணையைப் பெறுவார்கள் கடின மனதுடையவர்களும் இந்த ராகங்களைக் கேட்கக் கேட்க நாளடைவில் மனம் மாறித் திருந்திவிடுவார்கள்.

"பூபாளம்" என்னும் ராகம் விழிப்பு ராகமாகக் கருதப்படுகிறது. இந்த ராகத்தைக் காலை வேளையில் பாடினால் கும்பகர்ணனைப்போல் தூங்குகிறவர்களையும் எழுப்பிவிடலாம்.

'பூபாள' ராகத்திற்கு நேர்விரோதமானது நீலாம்பரி என்னும் ராகம். இந்த ராகத்தைக் கேட்டவுடன் தூக்கமற்றவர்களுக்கும் தூக்கம் வரும்.

உலக வாழ்க்கையில் சுகமற்று, ஸதாஸர்வகாலமும் துக்கத்திலேயே அமிழ்ந்து கிடப்பவர்கள் பிலஹரிராக ஆலாபனையையும், அதிலமைந்துள்ள உருப்படிகளையும் அடிக்கடிக் கேட்கத் தம் துன்பத்தை மறந்து இன்பமுறுவார்கள்.

கடின ஹ்ருதயத்தை உடைய மானிடரும் 'நாத நாமக்ரியை' என்னும் ராகத்தைக் கேட்கக் கேட்க அவர்களின் மனம், மாறிச் சத்குணம் நிறைந்த மானிடர்களாய்த் திகழ்வார்கள். இந்த ராகத்தில் மன்னிப்புக்கேட்டல் போன்ற கருத்துக்களை உடைய

சாஹித்யங்களைப் பார்டினால் நாம் கொண்டுள்ள கருத்துக்கள் நிறைவேறும்.

ஸ்ரீ கண்ணனுடைய ஜீவ சரித்திரமாகிய 12 ஸ்கந்தங்களை யுடைய ஸ்ரீமத்பாகவதம் 12-ம் நூற்றுண்டில் வாழ்ந்துவந்த ஜயதேவர் என்னும் சிறந்த கிருஷ்ண பக்த சிரோமணியால், 12 ஸர்க்கங்களை யுடைய அஷ்டபதியாக இயற்றப்பட்டது. இக் காவியம், பூர்வ சங்கீத சாஸ்திரத்திற்கு ஆதார க்ரந்தமாக விளங்கி ச்ருங்கார ரஸத்தையே பிரதானமாகக் கொண்டுள்ளது. இந்தச்ருங்கார ரஸகாவியத்தினின்றும் பாகவதத்தின் முழு சாராம்சத்தையும் கால தாமதமில்லாமல் தெரிந்துகொள்ள முடிகிறது.

மதம் பிடித்து அலையும் யானைகளும் வீணை இசைக்கு அடங்கி விடுகின்றன என்பதைக் கலித்தொகை, பெருங்கதை, மேருமந்தா புராணம் முதலியவை விவரிக்கின்றன.

தினைக்கதிரை உண்பதற்காகக் குறிஞ்சி நிலத்தில் வந்த யானையொன்று அங்குக் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கும் ஒரு பெண்ணின் இசையில் மயங்கி, தான் பசியுடன் வந்ததையும் மறந்து, கதிரையும் உண்ணுமல் மெய்மறந்து நின்றது என அகநானூற்றின் வாயிலாகத் தெரிய வருகிறது.

கொடிய நஞ்சைபுடைய பாம்பும் புன்னுகவராளி ராகத்தைக் கேட்டு அழகாகப் படமெடுத்து ஆடுவதையும், அச்சங்கீதத்தில் மெய்மறந்து போவதையும், நாம் இன்றும் பார்க்கிறோம்.

தான் மேயவிட்டிருந்த பசுக்களை மாலையில் ஒருங்கு சேர்ப்பதற்காகக் கண்ணன் தன் இனிமையான வேணுகானத்தை இசைத்தவுடன், அதைக் கேட்டு வெவ்வேறு திக்குகளில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்கள் யாவும் ஒன்று சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

வண்டிமாடு, கபிலையேற்றக்காளை முதலியவை வேலைசெய்யும் பொழுது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடினால் அவ்விலங்குகள் தேன் பாங்கு போன்ற அப் பாடல்களில் தம்மையும் மெய்மறந்து, லயித்துத் தம் வேலையை அமைதியாகவும், ஒழுங்காகவும் செய்து வருவதை நாம் இன்றும் காண்கிறோம்.

சிறு குழந்தைகள் அழும்பொழுது பாடினால் அவை தம் அழுகையோய்ந்து, பாடப்படும் இசையை வெகு சிரத்தையுடன் கேட்கின்றன. அதைப் போலவே அவைகள் உறங்குவதற்கு முன்பு பாடினாலும் அவை மெய்மறந்து உறங்குகின்றன.

ஈசுவரனும் இசை உருவினன் என்பதை "ஏழிசையா யிசைப்பயனுய்;" "இயலவன் இசையவன்;" "இயலிசைப் பொருள்களாகி;" "ஏழிசையை" என்ற தேவாரப்பகுதிகள் விவரிக்கின்றன. பரமேசுவரன் இசையிலுள்ள விருப்பத்தினுல் அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் செவியில் குழையாக வைத்திருக்கின்றுரென்று நூல்கள் கூறுகின்றன.

சங்கீதம் புனிதமான 4 வேதங்களில் ஒன்ருகிய சாம வேதத்திலிருந்து தோன்றியதாகும். சங்கீதக் கலை முதன் முதலில் நம் பாரததேசத்தில் தோன்றி, பிறகு இதர கலைகளைப்போல உலகமெங்கும் பாவியது. ஒவ்வொரு தேசமும் சங்கீதத்தில் தனக்கு நிகராக எத்தேசமும் இல்லை என்று கூறும்படியாகச் சிறந்து விளங்கினுலும் நம் நாட்டில் சங்கீதம் இன்னும் சிறப்பாகவும், அழகாகவும், இனிமையாகவும் உள்ளது.

கிடைத்தற்கரியதாகிய அமிருதத்தைக் காட்டிலும் சங்கீதம் உயர்ந்தது. அமிருதம் தேவர்களுக்குத் தான் கிடைக்கும் என்று பெரியோர்கள் கூறுவர். கிடைத்தற்கு அரியதாகிய இந்த அமிருதத்தை அருந்துபவர்கள் இறக்கவே மாட்டார்கள் என்றும், இவர்களது இளமையும் மாருது என்றும், துன்பம் என்பதை இவர்கள் அறியமாட்டார்கள் என்றும் தெரிகிறது. இவ்வரிய தன்மையையும், பெருமையையும் உடைய அமிருதத்தைக் காட்டிலும் சங்கீதம் உயர்தரமானது. எவ்விதமெனில் அமிருதத்தை அருந்துபவரே அதன் பலன்களை அனுபவிக்கிருர்; பிறர் அனுபவிக்க முடியாது. ஆனால் சங்கீதமோ உணர்ந்துகொண்டு பாடுவோருக்குப் பயனளிப்பதோடல்லாமல் அதைக் கேட்பவர்களுக்கும் பயனளிக்கிறது. இத்தகைய சங்கீதத்தின் பெருமையை நாம் உணர்ந்து போற்றுவோமாக!

அ. வசந்தா,
ஆரும் படிவம், 'இ' பிரிவு.

நகைச்சுவை துளிகள்

எமன் :— சித்ரகுப்தா! இந்த மனிதன் பல சிற்றுயிர்களைக் கொன்று இருக்கிறன். ஆதலால் இவனுக்கு நரகதண்டனை கொடுக்கிறேன்.

நரன் :— சிற்றுயிர்களைக் கொன்ற எனக்கு நகர தண்டனை என்றுல் என்னைப்போன்ற பேருயிர்களைக் கொன்ற உமக்கு என்ன தண்டனை?

எமன் :— ??

R. சந்திரா, நான்காம் படிவம், 'அ' பிரிவு.

விடுகதை

1. வட்ட வட்ட சுக்கனார், வாலில்லா சுக்கனார், எலும்பில்லா சுக்கனார் என்னை வந்து எழுப்பினார்! அது என்ன? (மூட்டைப்பூச்சி)

2. வட்ட வட்டக் குருவி, வாலில்லாக் குருவி, தேசமெல்லாம் பறக்கும் தேவேந்திரக் குருவி, அது என்ன? (ரூபாய் நாணயம்)

3. ஆகாயத்திலே பறக்கும் பறவையுமல்ல, கொம்புண்டு வாலுண்டு மிருகமுமல்ல, இதைச் சொல்லுவோர்க்குத் திறனுண்டு. (காற்றாடி)

எண்களின் வேடிக்கை.

I.

$1 \times 9 + 2 = 11$

$12 \times 9 + 3 = 111$

$123 \times 9 + 4 = 1111$

$1234 \times 9 + 5 = 11111$

$12345 \times 9 + 6 = 111111$

$123456 \times 9 + 7 = 1111111$

$1234567 \times 9 + 8 = 11111111$

II.

$9 \times 9 + 7 = 88$

$98 \times 9 + 6 = 888$

$987 \times 9 + 5 = 8888$

$9876 \times 9 + 4 = 88888$

$98765 \times 9 + 3 = 888888$

$987654 \times 9 + 2 = 8888888$

$9876543 \times 9 + 1 = 88888888$

வி. சுசீலா,
ஐந்தாம் படிவம், 'ஈ' பிரிவு.

ஏற்றசொல்லால் இசைக்க

I. 1. நடனமாடுவது மயில்
2. பாட்டு இசைப்பது ——
3. சோம்பேறி வழக்கம் ——
4. மரண சாசனம் ——

II. 1. சண்டையில் காட்டுவது வீரம்
2. மிளகில் இருப்பது ——
3. ஏழுநாள் கொண்டது ——
4. தண்ணீர் தேங்கினால் ——

III. 1. அவன் பெயர் பாண்டு
2. கடையில் இருப்பது ——
3. அந்தக் குழியை ——
4. குழாயிருப்பது ——

[குயில், பூண்டு, காரம், துயில், தோண்டு, வாரம், உயில், நீண்டு, ஈரம்]

R. சந்திரா,
நான்காம் படிவம், 'அ' பிரிவு.

THE BRIDGE

R. S. JOTHI BAI,
V Form, 'E'.

THE PIED PIPER

M. R. SHANBAGAVALLI,
V Form, 'E'.

அழகும் அலங்காரமும்

அலங்காரம் செய்து கொள்வது என்பது ஒரு தனிக்கலை. அதை நன்றாகச்செய்து கொள்பவர் வெகுச் சிலரே. நம் நாட்டில் அநேக பெண்கள் முகத்தைச் சோப்புத் தேய்த்துத்தேய்த்து அலம்பி இரண்டு அங்குல கனத்திற்குப்பௌடரைப் பூசிக் கண்ணில் மை தீட்டி நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வர். இன்னும் நாகரிகம் அமைந்தவர்கள் லிப்ஸ்டிக்கு, க்யூடெக்ஸூம் தீட்டி வேஷம்அணிந்து வருபவர்கள்போல் காட்சி அளிக்கின்றார்கள். இந்த அலங்காரம் நம் பாரதநாட்டுப் பெண்களுக்கு ஏற்றதல்ல. இது நாம் மேனாட்டினரிடமிருந்து காப்பி அடித்தது. இது மேனாட்டவருக்கு ஏற்றதுதான். காரணம் அந்தத்தேசத்தில் உள்ள மக்கள் சிவந்த வர்ணமாகவோ அல்லது ரோஜா நிறமாகவோ இருப்பர். அத்தகைய பெண்கள் நம்நாட்டில் மிகக்குறைவு. அநேகர் கருப்பாகவும், சிலர் மாநிறமாகவும், சிலர் வெளுப்பாகவும் காணப்படுவர். ஆகவே இவை நமக்குப் பொருந்தா. இனி நமது முன்னோர்கள் முறைகளைக் கவனிப்போம். சோப்பிற்குப் பதிலாகத் தேகத்திற்குக் காந்தியும், மழமழப்பும் அளிக்கும் வாசனைப் பொடியைத் தேய்த்துக் குளித்துப்பிறகு கண்களுக்கு மை தீட்டிக்கொள்வர்; தாம்பூலத்தினால் அதரங்களைப் பவழம் போல் சிவப்பாக்கிக் கொள்வர். மருதாணியினால் கை நகங்களையும், உள்ளங்கைகளையும், கால் நகங்களையும் சிவப்பாக்கிக் கொள்வர். இத்துடன் முடிந்தது அவர்களுடைய அலங்காரம். இந்த முறையில் நமக்கு நன்மை ஏற்படுமே தவிர ஒரு தீமையும் விளையாது.

நமது நிறத்திற்கும், நாட்டிற்கும் ஏற்றது இந்த முறைதான். நம்நாட்டுப் பெண்கள் ஆடைகளிலும், நகைகளிலும் வீண் செலவு செய்கின்றார்கள். மேனாட்டுப் பெண்கள் அதிக நகைகள் அணிந்து கொள்ளமாட்டார்கள்; முத்து மாலைகள் மட்டும் அணிவார்கள். அவர்கள் நகைகளில் போடும் பணத்தை வியாபாரத் துறையில் முதலாக வைத்துக் கைத்தொழில் அபிவிருத்தி செய்வார்கள். நம் நாட்டுப் பெண்களைப் போல் பட்டுப் புடவைகளிலும் ஜரிகை ஆடைகளிலும் பணம் செலவழிப்பதில்லை. ஆடம்பரமற்ற தூய ஆடைகளையே அணிகின்றார்கள். அதிக பண விரயமும் இல்லை. இந்த முறையில் இருவர் நின்றால் நமது முறையே நமக்கு ஏற்றது என்பது விளங்கும். நமது கவிகள் பவள உதடுகள் என்று வர்ணிக்கின்றார்களே அன்றி ரோஜா உதடுகள் என்று வர்ணிப்பதில்லை. எந்தெந்த நாட்டிற்கு எது ஏற்றதோ, அதைச்செய்வதுதான் நல்லது. நம் நாட்டில் லிப்ஸ்டிக், பௌடர், க்யூடெக்ஸ் முதலியன இறக்குமதி செய்வதற்குச் செலவிடும் பணம் குறையும். அதிக பணம் இல்லாமல் மிக நன்றாய் அலங்கரித்துக் கொள்ளலாம்.

R. சந்திரா,

நான்காம் படிவம், 'அ' பிரிவு.

செஞ்சிக் கோட்டை

உலகின்கண் வாழும் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க விஷயங்கள் பல உள்ளன. அவை நாம் பிறந்த நாடு, நாம் செய்த சாதனைகள் எனப் பலவாறு குறிப்பிடப்படும். அத்தகைய முறையில் நானும் என் பிறந்த ஊரின் பெருமையை எடுத்துக்கூறுவதில் பெருமையடைகிறேன்.

அவ்வாறு நான் பெருமையுடன் கூறி மகிழத் தக்கதாக அமைந்துள்ளது எனது சொந்த ஊர். அது சரித்திரப் புகழ்வாய்ந்த செஞ்சிமாநகர் ஆகும். இது நம் சென்னைராஜ்யப் பிரிவின்படி தென்னார்க்காடு ஜில்லாவில் உள்ளது. புராதன புண்ணிய ஸ்தலமாகிய திருவண்ணாமலைக்குக் கிழக்கே 24 மைல் தொலைவில் உள்ளது.

இப்பொழுது தன்னகத்தே பொலிவிழந்தும் புகழ் குன்றாததுமாய்த் திகழும் இவ்வூர் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாதேசிங்கு என்ற வீரம் செறிந்த குறுநில மன்னனால் ஆளப்பட்டு வந்தது. இவ்வரசன் தன் தலைநகரமாகிய செஞ்சிமாநகரில் மலைக்குன்றுகளின் மீதும், தரையிலும் பல கோட்டைகளைக்கட்டி பகைவர்களை எளிதில் அண்டவிடாது பாதுகாத்து வந்தான். அத்தகைய மன்னன் ஆர்க்காட்டு நவாபுடன் சண்டையிட்டுப் போரில் வீர சுவர்க்கம் எய்தினான். அவனது ராஜஸ்திரீகளும் தீப்புகுந்து தம் கற்பை நிலைநாட்டிப் பெண்குலத்தின் பெருமைக்குச் சான்றாகப் புகழ் பெற்றனர்.

இவ்வாறு சரித்திரப் புகழ்பெற்ற இந்நகர் இன்னும் தன்னகத்தே கவர்ச்சிமிக்க அரண்மனையைக் கொண்டு காண்போரைக் கவர்ந்துவருகிறது. வெளியூர்களிலிருந்து பல உத்தியோகஸ்தர்களும், மந்திரிமார்களும் வந்து இப்புராதனக்கோட்டையின் கண் காணப்படும் விசித்திரங்களைக்கண்டு வியந்து

வருகின்றனர். இதன் முன்வாயில் என்று கூறப்படுவது இந்நகரிலிருந்து திருவண்ணாமலை செல்லும் ரஸ்தாவில் குறுக்கிட்டுக் காணப்படுகிறது. அது ரஸ்தாவின் இருபுறமும் எதிரெதிர் காணப்படும் இரண்டு பாதைகள் ராஜகிரி, கிருஷ்ணகிரி என்று கூறப்படும் இவ்விருகோட்டைகட்கும் உட்புறம் செல்லும் வழியாகும். திருவண்ணாமலையை நோக்கிச் செல்லுங்கால் நம் இடப்புறம் தோன்றுவது ராஜகிரி, வலப்புறம் தோன்றுவது கிருஷ்ணகிரி. இவை இக்காலத்தில் சர்க்காரினால் பாதுகாப்பில் வைத்த ஒரு புராதன சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதால் இதைக் காணவேண்டுவோர் சர்க்கார் அனுமதிபெற்ற உத்தியோகஸ்தரின் உதவியால் கண்டு களிக்கலாம்.

ராஜகிரி:—இதனுள் பிரவேசித்து ஒரு நீண்ட சாலைவழியே சென்றால் இருமருங்கும் கிணற்று நீரால் பயிர் செய்யப்பட்டுள்ள பசுமையான வயல் வெளிகளைக் காணலாம். அதைத்தாண்டி உட்புறம் சென்றால் இரண்டாம் வாயில்; இதைத் தாண்டியதும் "கல்யாண மஹால்" என்று கூறப்படும் ஒரு கட்டிடத்தைக் காணலாம். இதில் சுற்றிச் சுற்றி ஏறும் மாடிப் படிகளில் கீழே இறங்குவதற்கான படிகளும் குறுக்கிட்டு மிகத் தந்திரமாகக் கட்டப்பட்டுள்ளதால் செல்பவர்களின் பலரது மனம் தடுமாறி தம் எண்ணத்திற்கு மாறாகக் கீழோ அல்லது மேலோ போய் அல்லல்படவைத்து நம்மை ஆச்சரியத்தில் மூழ்கவைக்கும். அடுத்து நான்கு, ஐந்து நெற்களஞ்சியங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் சுமார் ஆயிரம் வண்டி தான்யத்தை தன்னகத்தே தாராளமாக அடக்கிக் கொள்ளத்தக்க இட விஸ்தீரணத்தைப் பெற்றுள்ளன.

அடுத்தபடியாக அழகிய சிங்காரக்குளம். ஒரு பெரிய கல்லில் உருவாக்கப்பட்ட ஆஞ்சநேயமூர்த்தியின் உருவம் அமைத்த மண்டபம், மன்னன் நிலாக் காலத்துத் துயின்று பின்பு சாபத்தால் கல்லுருவாகக் கப்பட்டதாகக் கூறப்படும் ஒரே கல்லால் அமைக்கப்பட்ட மெத்தையையும் 10, 12 டன் எடைக்கு மேற்பட்ட ஒரு கல் தலையணையையும் மேலும் குதிரை, யானை கட்டுமிடங்களையும், அரசன் அரசி ஆகியோரின் சமாதிக் கட்டிடங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது, மேலும் இன்று இக் கோட்டையினுள் பல கற்பாறைகளின் மீது கிட்டத்தட்ட கிணறுபோன்றும், பெருந் தொட்டிபோலவும் கட்டப்பட்ட பல கட்டிடங்கள் சில அழிந்தும், சில அழியாதனவாகவும் காட்சியளிக்கின்றன. இவை தவிர அடர்ந்த இயற்கை வளங்களும், காண்போரின் கருத்தை ஈர்ப்பனவாக அமைந்துள்ளன. இந்தக்கோட்டையின் நடுவழியில் மலைமீது ஓர் அகழி தென்படுகிறது. இதைக் கடந்துசெல்லும் வழியில் ஒரு மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இது நாளடைவில் சேதமாகி விட்டபடியால் இந்த இடத்தில் இரும்பினால் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சிகரத்தின்மீது ஏறி நோக்கும்போது நம்மை மட்டிலாமகிழ்ச்சிக்கு ஆளாக்கத்தக்க நன்செய், புன்செய் நிலவளமும் பற்பல சிறு குன்றுகளும் அமைந்திருப்பது தெரியவரும்.

கிருஷ்ணகிரி: இதன்வாயில் ராஜகிரியின் நேர் எதிரில் அமைந்துள்ளது. இதன்மீது ஏறிக் கோட்டைகளைக் காண்பது சிறிது சிரமமான காரியம். ஏனெனில் இதன் வழியில் பெரும்பான்மையான தூரம் செங்குத்தான படிக்கட்டுகளால் அமைந்துள்ளது. பற்பல இடங்களில் படிக்கட்டுக்கள் சிதைந்து இருப்பதால் ஜாக்கிரதையாக வழியைக் கடத்தல் வேண்டும். இதன்மீது ஏறுங்கால் பல இடங்களில் காவற்கூடங்களும் தங்கும் மடங்களும் காணப்படுகின்றன. இதன்மீது உள்ள அரசனின் "உல்லாச மண்டபம்" காண்பதற்குரிய காட்சியாகும். இதன் மீது அழகிய கோயில் ஒன்று இருக்கிறது. அங்கு எந்தத் தெய்வம் வழிபடப்பட்டது என்பது புலப்படவில்லை. அங்கு ஒரு சுரங்கப்பாதை காணப்படுகிறது. இதை விளக்கின் உதவியால் காணுங்கால் அதனுள் நெடுந்தூரம் இறங்கிச் செல்லும் படிக்கட்டுக்கள் காணப்படுகின்றன. இந்தச் சுரங்கம் மேற்படி கோட்டையிலிருந்து $2\frac{1}{2}$ மைல் தொலைவில் மலைக் குன்றின்மீது பள்ளிகொண்டு எழுந்தருளியிருக்கும் சிங்கபுரம் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் சென்று முடிவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அந்தக் கோயிலிலும் இந்தக் கோட்டை உள்ள திசையில் ஒரு சுரங்கவழி தென்படுகிறது. இவ்வாறு வனப்புமிக்க கோட்டைகளுடனும், சுரங்கம் முதலியவற்றுடனும் செஞ்சிமாநகரைச் சிறப்புற ஆண்டுவந்த தேசிங்கு ராஜனுடன் அக்காலத்தில் ஸ்ரீரங்கநாதர் நேரில் பேசியதாகச் சில வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். மேலும் இம் மலைக்கோட்டைகளில் இவாந்து செல்லும் மக்களுக்குக் களைப்புண்டாகாவண்ணம் இயற்கையிலேயே அடர்ந்த சோலைகளும், காக்கை இறகு போன்ற தெள்ளிய நீரோடைகளையுடைய குளிர்ந்த மலைச்சுனைகளும் உள்ளன.

இத்தகைய இயற்கை வளங்களுடனும், மலையரண்களுடனும், சரித்திரப் பிரசித்திபெற்று விளங்கும் செஞ்சிமாநகர் எனது பிறந்தவூர் என்று கூறி நான் பெருமகிழ்ச்சியடைவதில் தவறென்ன?

K. சுப்பலக்ஷ்மி,
ஐந்தாம் படிவம், அ-பிரிவு.

கண்டுபிடியுங்கள் !

1. ஓர் தடாகத்தில் சில பூக்கள் பூத்திருந்தன. சில குருவிகள் பறந்துவந்து இரண்டிரண்டாக உட்கார்ந்தன. ஒரு பூ காலியாக இருந்தது. ஒவ்வொன்றாக உட்கார்ந்தால் ஒரு குருவிக்கு இடமில்லை. குருவி எத்தனை ? பூ எத்தனை ? (விடை—குருவி 4. பூக்கள் 3.)

2. ஒரு வியாபாரியிடம் 26 வீசை நெய் இருக்கிறது; அதை இருவர் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். தராசு இல்லை. அவர்களிடமுள்ள 7, 11, 3 வீசை கொள்ளும் டப்பாக்களைக்கொண்டு சரியாகப் பங்கிடு.

	வீ.	வீ.	வீ.	வீ.
டின்களின் அளவு	26	11	7	3
I	12	11	0	3
II	23	3	0	0
III	16	3	7	0
IV	13	10	0	3

13 + 13

3. சில பறவைகள் பறந்து சென்று கொண்டிருந்தன. அவைகளைப்பார்த்து வேறொரு பறவை ஏ, நூற்றுப்பறவைகளே ! என்றது. அதற்கு அவைகள் நாங்களல்ல நூறு, நாங்களும், எங்களைப்போல் மற்றொரு பங்கும், எங்களில் பாதியும், பாதியில் பாதியும் நீயும் சேர்ந்தால் 'நூறு' என்றது. பறந்து சென்ற பறவைகள் எவ்வளவு ?

(விடை—36 பறவைகள்)

ரா. பாண்டுரங்கன்.

என் எழுத்துக்கள் எழு. முதல் மூன்று எழுத்துக்கள் ஒரு அழகிய பட்சியைக் குறிக்கும். கடைசி நான்கு எழுத்துக்கள் பீடத்தைக் குறிக்கும். இது ஷாஜஹான் செய்த அற்புதப் பொருளாகும், தாஜ்மஹாலுக்கு அடுத்தபடியாக ! (மயில் ஆசனம்)

—: x :—

அப்பா :—ஏலே, நீ ஜார்ஜ் வாஷிங்டன் கதையை வாசித்தாயே. அவன் உன் வயதில் எவ்வளவு உழைத்துத் சத்ய சந்தனாக இருந்தான் தெரியுமா ?

பிள்ளை :—அதற்கு என்னப்பா செய்வது ! அவன் உங்கள் வயதில் பெரிய பிரஸிடெண்டாக இருந்தானே !

M. S. மீனாக்ஷி,
ஐந்தாம் படிவம், 'ஆ' பிரிவு.

குரு பக்தி

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு ஆசிரியர் 'திண்ணைப்பள்ளிக்கூடம்' நடத்தி வந்தார். அதில் பல மாணவர்கள் படித்து வந்தனர். தற்காலத்தைப்போல் இல்லாமல் அந்நாளில் மாணவர்கள் உபாத்தியாயர் வீட்டிலேயே தங்கி அவர் ஏவும் வேலைகளைச் செய்து முடித்து, இட்ட உணவை உண்டு பாடங்களைப் பயின்றனர்.

வழக்கம்போல் ஒருநாள் காலை ஆசிரியர் மாணாக்கர்களுடன் அருகிலுள்ள ஆற்றில் நீராடச் சென்றார். நீராடிக்கொண்டிருந்த பொழுது திடீரென்று ஆசிரியரை ஒரு பெரிய முதலை கவ்விச் சென்று விட்டது. அதைக் கண்ணுற்ற சிறுவர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஊரில் வந்து முறையிட்டனர். ஊரார் எவ்வளவு முயன்றும் அவர் உடல் கிடைக்கவில்லை. அவரை அண்டியிருந்த மாணவர்கள் தங்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

அவர்களில் ஒருவன் சதாசிவன். அவன் மிகவும் ஏழை. குருவினிடம் மிகுந்த பக்தி உள்ளவன். அவரைப்போல மரத்தினால் ஒரு பொம்மை செய்து வீட்டில் வைத்து, அதன் முன் அமர்ந்து பாடங்களைப் படித்து வந்தான்

அவனைப் பெற்றோர்கள் ஒரு காரியமாக வெளியூர் அனுப்பிவைத்தனர். போகும்பொழுது அவன் தன்னுடன் அந்த மரப்பொம்மையையும் எடுத்துச் சென்முன்.

அவன் இதற்கு முன் வெளியூர் சென்றதில்லை. சிறிது தூரம் சென்றபின் அவன் வேறு பாதையில் போகவே அது அவனை ஒரு காட்டிற்குள் இட்டுச் சென்றது. வேறு வழிப்போக்கர்களும் கிடைக்கவில்லை. பையன் பயந்த வண்ணம் சிறிது தூரம் போனான். அதற்குள் இரவு வந்துவிடவே அவன் தங்குவதற்குத் தகுந்த இடம் தேடலானான். சிறிது தூரத்தில் ஒரு காளி கோயிலைக் கண்டான். அதன் அருகில் ஓர் அடர்ந்த ஆலமரம் இருந்தது. சிறுவன் கீழே படுத்துக்கொண்டால் யாராவது வந்து துன்புறுத்துவார்களோ என அஞ்சி, மரத்தின் மீது ஏறிப் பத்திரமான இடத்தில் தன் கையில் இருந்த மரப்பொம்மையைக் கட்டிக்கொண்டு, களைப்பால் தூங்க ஆரம்பித்தான்.

கடுகிசிக்குச் சிறிது கோத்திற்குப்பின் ஒரு கள்ளர் கூட்டம் அங்கு வந்து தாங்கள் களவாடிய பொருள்களை ஆலமரத்துக்கு அடியில் காளி கோயிலுக்கு முன்னிலையில் பங்கு போடலாயினர். அச்சமயத்தில் தூங்கி கொண்டிருந்த சதாசிவன் கையிலிருந்த மரப்பொம்மை தவறித் தடால் என்ற சத்தத்துடன் கீழே விழுந்தது. அதைக்கேட்டு திருடர்கள் பயந்து களவாடிய பொருள்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

கோழி கூவும் வேளையிலே சதாசிவன் விழித்துக்கொண்டான்; தன் கையில் இருந்த குருநாதரின் பொம்மையைக் காணுமல் திகைத்துக் கீழே நோக்கினான். அவன் அடைந்த ஆனந்தத்தை என் என்பது; ஆசிரியர் யாதொரு ஆபத்துமின்றி ஆபரணங்களுக்கு அருகிலே இருக்கக் கண்டான். உள்ளம் குளிர்ந்தது. கீழே இறங்கி வந்து பொம்மையை எடுத்துக்கொண்டு, மற்றும் கிடந்த விலையுயர்ந்த ஆபரணங்களையும் ஆசிரியர் அளித்த ஆதரவு என மதித்து மூட்டை கட்டி வந்த வழியே திரும்பிச்சென்முன்.

பெற்றோர்கள் பிள்ளையின் பேற்றைக்கண்டு பூரித்தனர். நாமும் 'சதாசிவனைப்' போன்று குருபக்தியுடன் விளங்குவோம்.

K. ஜெயலக்ஷ்மி,
இரண்டாம் படிவம், 'சி' பிரிவு.

உபநிஷதமும், பெண்களும்

தத்துவ சாஸ்திரத்தைப் பற்றிய விவாதங்களை ஆசிரியர்களால்; அவர்களுடைய சிஷ்யர்களுக்கு உபதேசித்த நூலுக்கு 'உபநிஷதம்' என்று உலக சொல்லிலக்கணம் கூறுகின்றது. ஆயுளைப் பற்றிய ஆலோசனைகளை இவற்றின் மூலமாக அறியலாம். உபநிஷதங்கள் அநேகம். அவைகளில் 10 மிகவும் முக்கியமானவை. இதில் சில வேதகாலத்தைச் சார்ந்தவை. மற்றவை சரித்திரகாலத்தைச் சார்ந்தவை. வேதகால 'உபநிஷதங்கள்' வேதங்களுக்குச் சமமாகக் கருதப்பட்டன. உபநிஷதங்களில் பெண்களைப்பற்றி யொன்றுமே கூறப்படவில்லை. ஆனால் சாந்தோக்யோபநிஷத்திலும்; ப்ரகதாரண்ய உபநிஷத்திலும் சில அரிய சான்றுகள் பெண்களைப் பற்றி யிருக்கின்றன.

'ப்ருஹதாரண்ய உபநிஷத் (Brihadaranyaka Upanishad) இந்திய சரித்திரத்தில் மிகவும் முக்கியமானது. இக்காலத்தில் பெண்கள் தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி யறியவும், அதில் வாதம் செய்யவும் அனுமதிக்கப்பட்டார்கள். 'சாந்தோக்ய உபநிஷத்', 'பிரகதாரண்ய உபநிஷத்' தோன்றிய காலத்தே தோன்றியதென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வுபநிஷத் மேற்கே தோன்றியதென்றும்; ப்ரஹதாரண்யம் கிழக்கே தோன்றியதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சாந்தோக்ய உபநிஷத்தின் முதல் இரு அத்தியாயங்கள் விவாகத்தைப்பற்றி மிகவும் தெளிவாகக் கூறுகின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் பால்ய விவாகத்தைப் பற்றிச சில விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் (Raikva) ரைக்வா என்பவர் வேறொரு ஜாதிப் பெண்ணை மணந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுபநிஷத் காலத்தில் பால்யவிவாகம் இருந்தது. ஆனால் பிராம்மணங்களில் விவாக மந்திரங்கள் வயது வந்தோர்களுக்குரியதாக இருக்கின்றன.

சமுதாயத்தில் கணவனும் மனைவியும் ஒன்று பட்டிருக்க வேண்டும் என்று உபநிஷத்துக்கள் கூறு கின்றன. 'ப்ருஹதாரண்ய உபநிஷத்' மனைவி இல்லாத புருஷனைப் பாதி புருஷன் என்று கூறு கின்றது. ஆறுவது அத்தியாயத்தில் நான்காவது பிராம்மணம் முழுவதும் குழந்தைகளைப் பற்றிய விஷயங்கள் கூறப்படுகின்றன. விவாகம் என்பது வைதிகச் சடங்கு. பெண்களை யாகத்தின் வேதி யாகக் கருதப்பட்டிருக்கிறது. குழந்தை யாகத்தின் பயனாகக் கருதப்படுகிறது. அடங்காத மனைவிகளைக் கணவன் கண்டித்துத் தன் இஷ்டப்படி நடக்கச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது

நல்ல அறிவுடைய பெண் பிறக்க வேண்டுமென் ருல் அரிசியையும், எள்ளையும் சேர்த்துச் சமைக்கப் பட்ட அன்னத்தை வெண்ணெயுடன் கலந்து உண்ணவேண்டும்.

சங்கரர் பெண்களுக்கு வீட்டுக்கு வேண்டிய படிப்புப் போதுமென்று கூறுகிருர். ஆனல் வேதத்தில் பெண்கள் படிக்கக்கூடாது என்பதற்குச் சான்றுகள் இல்லை. பெண்களை வைதிகச்சடங்கு களுக்குக் கூட்டாளியாக ஆண்கள் எண்ணினர்.

கார்க்கி என்ற பெண் யாக்ஞவல்கிய (Yajnavalkya) ரிடம் பரம்பொருளைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டுப் பரம்பொருளைத் தெரிந்து கொண்டாள். யாக்ஞவல்கியர் தன் மனைவிகளுக்கு ஆஸ்தியைப் பிரித்துக் கொடுப்பதற்குமுன் தன் இளைய மனைவியான காத்யாயனியைக் கூப்பிட்டு உனக்குப் பொருள் வேண்டுமா? அல்லது பரம்பொருளை அறிய மார்க்கம் தெரிய வேண்டுமா என்று கேட்டார். அவள் பொருளில் ஆசைப்பட்டுப் பொருளை யடைந்தாள். மைத்ரேயி ஆத்மவித்தை யைத் தெரிந்துகொண்டு தன் கணவருடன் வானப் பிரத்தம் சென்று மோக்ஷம் அடைந்தாள்.

உபநிஷத் காலத்தில் பௌத்த மதத்தைப் பெண்கள் பரவச்செய்தார்கள். பௌத்தமதச்சங் கத்தை ஏற்படுத்தியவள் Mahapajapadi-Gautami. சித்திரா, உத்தமா என்ற பெண்கள் தன் இளமைப் பருவத்திலேயே உலகச் சிற்றின்பத்தை வெறுத்துச் சங்கத்தில் சேர்ந்து மதத்தைப் பரப்பினர். இவை களிலிருந்து அறிவது என்னவென்ருல், உபநிஷத் காலத்தில் பெண்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி ஆண்களுக்குச் சமமாக மதிக்கப்பட்டார்கள் என்பது நன்கு தெரிய வரும்.

S. B. சாரநாதன்.

யாருக்கு உபயோகம்?

ஓர் அரசனுக்கு செல்வராஜ் என்ற சிநேகிதன் ஒருவன் இருந்தன். அரசனுடைய சிறுவயது முதல் அவனும், அரசனும் அண்ணன் தம்பி போல் பழகி வந்தார்கள்.

செல்வராஜ் பல காரணங்களால் அவனை விட்டு பிரிந்து தன் ஊரில் வசிதது வந்தான். ஆனல் அவன் எப்பொழுதும் தன் நண்பனையே நினைத்துக் கொண்டிருந்தான்.

அரசனுக்கு எவ்வளவோ பணம் இருந்தது. ஆயினும மேலும் மேலும் பணம் சேர்ப்பதிலேயே அவனுக்கு மிகவும் ஆசை. ஒரு நாள் அரசனுக்குத் தன் சிநேகிதனுகிய செல்வராஜின ஞாபகம் வந்தது 'ஆமாம். செல்வராஜ் என்னுடைய இணைபிரியாச் சிநேகிதன் தான். அவன் மிகவும் எழை. அவனுக்குச் சீக்கிரத்தில் ஏதாவது தகுந்த வெகுமானம் அனுப்ப வேண்டும்." என்று தனக்குததானே அடிக்கடி சொல்லிக்கொண்டான்.

ஆனல், ஏதாவது கொடுத்தால் தன் பணம் குறைந்து போய் விடுமே என்று நினைத்துச் சும்மா இருந்துவிட்டான், இப்படியாக இருபது வருஷங் கள் ஆயின, ஒரு வெகுமானமாவது செல்வ ராஜக்கு அனுப்பப்படவில்லை.

"அரசே! தங்களுடைய சிநேகிதர் செல்வராஜ் தங்களை விட்டுப் பிரிந்து இப்போது இருபது வருஷங்களாயின" என்று ஒரு மந்திரி ஞாபக மூட்டினன். அரசன், "அப்படியா! என்ன வெகுமானத்தை அனுப்புவது என்று சீக்கிரம் நிச்சயம் செய்யவேண்டும்" என்று பதில் உரைத் தான். இப்போதும் அவனுக்கு என்ன கொடுக்கலா மென்று தோன்றவில்லை.

அரசனுக்கு ஒருநாள் திடீரென்று ஒரு நல்ல யோசனை தோன்றிற்று. அரசனுடைய அரண் மனைக்கு வெகுதூரத்திற்கு அப்பால் இருந்த இருபது சிறிய கிராமங்களின் ஞாபகம் அவனுக்கு வந்தது. அந்தச்சிறிய கிராமங்கள் எல்லாம் பாழடைந்தவை. அங்கு ஆடுமாடுகள் கூட வசிப் பதில்லை. அக்கிராமங்களைச் செப்பனிடுவதற்கு மிகுந்த திரவியம் வேண்டியிருந்ததால் அரசன் அவற்றைக்கவனியாமலே இருந்து வந்தான். "செல்வராஜ் என்னைப்பிரிந்து இருபது வருஷங்

களாயின. ஆகையால், அவனுக்கு வெகுமானமாக இந்த இருபது கிராமங்களைக் கொடுப்பதே சரி" என்று அரசன் நிச்சயித்தான். தன்னுடைய தீர்மானத்தையும் நண்பனுக்குத் தெரியப் படுத்தினான்.

செல்வராஜுக்கு அரசன் கொடுத்த வெகுமதியைப்பற்றித் தெரிந்ததும் மிக்க சந்தோஷம் உண்டாயிற்று. "ஆஹா! என் நண்பன் என்னைப் பற்றி இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறானே! அதோடு, உதவியும் செய்கிறானே! இருபது கிராமங்களை வைத்துக்கொண்டு இனிக் கவலையில்லாமல் இருக்கலாம்" என்று எண்ணினான். உடனே கிராமங்களைப் பார்வையிடச் சென்றான்.

வெகு சந்தோஷமாக அந்தக் கிராமங்களுக்குச் சென்ற செல்வராஜின் முகம் திடீரென்று ஒருவித மாறுதலடைந்தது. காரணம் உங்களுக்குத் தெரியும். கிராமங்கள் எல்லாம் பாழடைந்திருந்தன. அங்கிருந்து அவன் வெறுப்புடன் திரும்பினான். மிகவும் ஏமாற்றமடைந்தவனாய் அரசனுக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"அரசே! நீங்கள் எனக்கு வெகுமானமாகக் கொடுத்த இருபது கிராமங்களும் எனக்கு வேண்டாம்; எனக்கு அவற்றினால் ஒரு பிரயோசனமும் இருப்பதாகத் தெரியவில்லை. உமக்கு இவ்வளவு காலம் பிரயோசனமாக இருந்த கிராமங்களை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்!" என்று கடிதத்தை எழுதி முடித்தான். செல்வராஜ், அரசனுக்குக் கடிதம் எழுதினால் மாத்திரம் போதாது என்று எண்ணி, பதில் வெகுமானம் அனுப்புவதென்றும் நிச்சயித்தான். வெகுமானம் என்ன அனுப்பினான் என்று நினைக்கிறீர்கள்? தான் வெகு நாளாகச் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த சில பொன் நாணயங்களை ஒரு பையில் போட்டு அரசனுக்கு அனுப்பிவைத்தான். தன் சிநேகிதனாகிய அரசனுக்கு அதுதான் மிகவும் பிரியம் என்பது செல்வராஜுக்குத் தெரியும்.

அரசன் செல்வராஜின் கடிதத்தைப் பார்த்தான். அவனுக்குத் தான் செய்த காரியத்தை நினைக்க வெட்கமாகப்போயிற்று. அதற்குப்பிறகு அவன் தனக்கு வேண்டாத சாமான்களைப் பிறருக்குக் கொடுப்பது இல்லை; சிநேகிதர்களுக்கு வெகுமானம் கொடுக்கும்போது அவர்களுக்குப் பிரியமுள்ளதாகவே பார்த்துக் கொடுத்துவந்தான்.

W. விமலா,
மூன்றாம் படிவம், 'அ' பிரிவு.

தஞ்சை மாநகர்

தஞ்சை என்றதும் நம் மனக்கண்முன் தோன்றுவது இரண்டு. ஒன்று இராஜராஜ சோழன் பெரும்புகழ் பரப்பும் பெருங்கலைக் கோயில். மற்றொன்று நூல் களஞ்சியமான சரஸ்வதி மகால்.

தென்னிந்தியாவில் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகர்களுள் தஞ்சையும் ஒன்று. 'சோழ வளநாடு சோறுடைத்து' எனப் பெருமை பெற்றதும் 'வான் பொய்ப்பினும்தான் பொய்யா வளமுடைக் காவிரி' நதியும், அதன் உபநதிகளும் பாயப்பெற்றதுமான சோழநாட்டின் தலைநகரமே தஞ்சை. இடைக்காலச் சோழனை விஜயாலயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தனது அரசை ஸ்தாபித்தான். மராட்டிய மன்னரிடமிருந்து 1799ஆம் ஆண்டு வெல்லெஸ்லி பிரபு தஞ்சையை ஆங்கிலேய ஆட்சியில் சேர்க்கும்வரை தஞ்சையே தலைநகராயிருந்துவந்தது.

தஞ்சை மாநகர் அகன்ற வீதிகளும், அநேக மாளிகைகளும் நிரம்பப்பெற்றதும், சிற்பம், ஓவியம், இசை முதலிய கலைகளின் உறைவிடமானதுமான ஓர் அழகிய நகர். தஞ்சையின் புகழுக்கு முக்கியத்துவம் அளிப்பது பெருங்கலைக் கோயிலாகும். தேவாரத் திருமுறைகளைச் செல்லின் வாயினின்றும் மீட்டு என்றும் நின்று நிலவும் அழியாப் புகழ்பெற்ற இராஜராஜ சோழனால் இக்கோயில் கட்டப்பட்டது. தென்னிந்திய சிவன் கோயில்களுள் இது மிகப் பெரியது. பிரம்மாண்டமான கோபுரத்தையும், அதன் உச்சியில் அமர்ந்திருக்கும் பொற் கலசத்தையும், அக் கோபுரத்திலுள்ள சிற்பக் கலைகளையும் காணும்போதே ஒரு மனநிறைவும், சந்தோஷமும் நமக்குத் தோன்றும். கோபுரம் 216 அடி உயரமுள்ளது. காவிரிப் பெருக்கின் வண்டல்மண் நிறைந்த ஊரில் சுமார் 80 டன் நிறையுள்ள ஒற்றைக்கல் அக்கோபுரத்தின் உச்சியின் தளமாகவும், கலச பீடமாகவும் அமைந்துள்ள காட்சி அதனைக் கட்டிவைத்த மன்னனின் பெருமைக்கு நிலைபெற்ற சின்னமாக விளங்குகிறது. இக்கோபுரம் ஏழு விமானங்களால் ஆனது. இக்கோபுரம் 'நிழல் சாயாக் கோபுரம்' எனப்பெயர் பெற்றுள்ளது. இக்கோபுரத்தின் அடிப்பீடத்திலிருந்து அதன்

உச்சி, நான்கு பக்கங்களிலிருந்தும் ஓரேயளவாகக் குறுகி நடுமையத்தில் உள்ளது. இதனால் உச்சிக்காலத்தில் விழும் கோபுரத்தின் நிழல் அதன் பீடத்திலேயே விழுவதால் நமக்குத் தெரிவதில்லை. கோபுரத்தில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள சிவலிங்கமும், நந்தியும் மிகமிகப் பெரியவை. நந்தி சுமார் 12 அடி உயரமுள்ளது. சிவலிங்கத்திற்கு அபிஷேகம், அலங்காரம் முதலியன செய்வது ஏணியின் உதவியால்தான். கோயிலில் பெரிய பிராகாரமும், அதில் அநேக கல் மண்டபங்களும் உள்ளன. விழாக் காலங்களில் இதில் நாட்டியம், இன்னிசை கதா காலக்ஷேபம் முதலியன நடைபெறும். கோயில் பிராகாரத்தில் விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் கோயில்கள் உள்ளன. கோயிலின் சுற்றுச் சுவரின் உட்புறங்களில் சோழர்காலத்து ஓவியங்கள் ஒளிர்கின்றன. இக்கோயிலில் சோழவரசர்கள், நாயக்க மராட்டிய மன்னர்கள் ஆகியவர்களுடைய கல்வெட்டுகள் பல இருக்கின்றன. இவைகளில் பெரும்பாலன ராஜராஜ சோழன் காலத்தனவாகும். இக் கல்வெட்டுகள் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படுகின்றன. இக்கோயில் இராஜராஜேசுவரம், தக்கணமேரு, பிரகதீஸ்வரர் ஆலயம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இக்கோயில் சிற்பம், சித்திரக் கலைகளுக்கு உறைவிடம்போல் திகழுகிறது. வருடம்தோறும் இங்குச் சிறப்பாகத் திருவிழா நடைபெறும்.

திருவிழாவின்போது தஞ்சையிலும், அயலூர்களிலும் உள்ள ஒவ்வொரு சிவாலயத்திலிருந்தும் கடவுளின் திருவுருவம் அலங்கரிக்கப்பட்டுத் தஞ்சையின் நான்கு பெரிய வீதிகளிலும் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஒரு வீதியில் இரவு பதினொன்று மணிக்கும், அதற்கடுத்த வீதியில் இரவு இரண்டு மணிக்கும் அதற்கடுத்த வீதியில் சூரியோதயத்திலும், அதற்கடுத்த வீதியில் காலை பத்துமணிக்கும் வலம் வரும். மேளக் கச்சேரி, பாண்டுவாத்தியம் முதலியன இவ் விழாவில் இடம்பெறும். விழா அம்சத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது தஞ்சை முத்துப் பல்லக்கும், பொய்க்காற்குதிரையும் ஆகும். 'எங்கள் ஊர்த் திருவிழாவுக்குத் தஞ்சை முத்துப்பல்லக்கும், பொய்க்காற்குதிரையும் ஏற்பாடு செய்துள்ளோம்' எனப் பெருமையாகக் கூறுவர் வேற்றூரார். அத்தனை மகத்துவம் அவற்றிற்கு.

தஞ்சையின் பெருமைக்கு மெருகளிப்பது 'சரஸ்வதிமகால்' என்ற புத்தகசாலையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஏட்டுச் சுவடிகளும், வரலாற்று நூல்களும் பல மொழிகளிலும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூல் நிலையம் மராட்டிய மன்னனான சரபோஜி மஹாராஜாவால் ஏற்படுத்தப்பட்டது. சரபோஜியின் உருவச்சிலை ஒன்று சரஸ்வதி மகாலுக்கு எதிரே இன்றும் காட்சியளிக்கிறது. இந்நூல் நிலையத்தை தற்போது அரசாங்கத்தார் மிக்கச் சிரத்தையுடன் பாதுகாத்து வருகின்றனர். இவ்வாண்டு ஏப்ரல்மாதம் இங்கு நடைபெற்ற கலைக்காட்சியில் கலைத் தெய்வத்தின் உருவச்சிலையை நமது பிரதம மந்திரி ராஜாஜி திறந்து வைத்தார்.

தஞ்சை மன்னர்கள் வாழ்ந்துவந்த அரண்மனை மிக அழகானதும், உயர்ந்ததும் ஆகும். இதில் ஏழுமாடிகள் உள்ளன. ஏழாவது மாடியிலிருந்து பார்த்தால் திருச்சிமலைக் கோட்டையைக் காணமுடியும். தஞ்சைமன்னர் இங்ஙனம் மலைக்கோட்டையைத் தரிசித்த பின்னரே உணவு அருந்துவராம். இவ்வரண்மனையில் பல ரகசிய சுரங்கவழிகள் உள்ளனவாம். இவ்வரண்மனை தற்போது நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதில் தற்போது சில அலுவலகங்கள் நடைபெறுகின்றன.

தஞ்சையிலுள்ள மாரியம்மன் கோயில் தெய்வீக சக்திவாய்ந்ததாகும். மேலும் ராஜகோபாலஸ்வாமிகோயில், வெங்கடேசுவரப் பெருமாள் கோயில், கொங்கணேசுவரர் கோயில், காமாட்சி அம்மன் கோயில் முதலியன சிறந்த கோயில்களாகும். தஞ்சையில் சிவகங்கை என்ற ஓர் நீர்நிலை உள்ளது. இதிலுள்ள நீர் மிகவும் பரிசுத்தமானது. காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் ஆறுகளில் ஒன்றான வடவாறு இவ்வூரின் வழியே பாய்கிறது. இந்நகரில் உள்ள பெரியகடைத்தெரு 'ஐயங் கடை' யாகும். பொன், வெள்ளி, வைரக்கடைகளும், பித்தளை வெண்கலப்பாத்திரக்கடைகளும், ஜவுளிக்கடைகளும், மருந்துக்கடைகளும், இதர சாமான் விற்கும் கடைகளும், பூக்கடைகளும் தனித்தனியே தெருக்களின் இருமருங்கிலும் காட்சியளிக்கின்றன. தஞ்சைக் 'கதம்பம்' வாசனைக்குப் பேர்போனது. நகரின் நடுவே

ப்ரும்மாண்டமான மணிக்கூண்டு உள்ள ஒரு பூங்கா உள்ளது. இதை அடுத்துக் கண் வைத் தியசாலை ஒன்று உள்ளது. ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்தனியே பள்ளிகளும், அநேக முனிசிபல் பள்ளிகளும் உள்ளன.

தமிழ்ச்சங்கமுள்ள கரந்தையும், தியாகப் பிரம்ம உற்சவம் சிறப்பாக நடைபெறும் திருவையாறும், சுதேச சமஸ்தானமான புதுக் கோட்டையும் தஞ்சையை அடுத்துள்ள முக்கிய ஊர்கள்.

இத்தகைய புகழ்படைத்த, வளம்செறிந்த, கலைகள் நிறைந்த தஞ்சையை நாம் அவசியம் கண்டுகளித்தல் வேண்டும்.

வேதவல்லி,
ஆறும் படிவம், 'ஆ' பிரிவு.

நிந்தைத் துதி

பரமசிவன், இமயமலையின் மீது படுத்து உறங்குகின்றார். மஹாவிஷ்ணு பாற்கடலில் படுத்து உறங்குகின்றார். இதன் காரணத்தை அறிய விரும்பிய ஒருவனுக்கு, புதிய மணமகன் ஒருவன் பின்வருமாறு பதிலளித்தான் :—

ஸாரமற்ற இந்த உலகத்தில் மாமனார் வீடு ஒன்றுதான் ஸாரம் நிரம்பியதாக இருக்கின்றது. ஆகையினால் தான் பார்வதியின் பிறந்தகமாகிய இமயமலையை பரமசிவன் நாடினார். லக்ஷ்மியைத் தோன்றுவித்த பார் கடலை விஷ்ணுவானவர் நாடினார் என்றான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருக் குறும்புப்பயல், இது சரியான காரணமல்ல, சிவனும், விஷ்ணுவும் தங்கள் வீட்டை விட்டு மலைக்கும், சமுத்திரத்திற்கும் சென்றது வீட்டில் மூட்டைப்பூச்சியின் உபத்திரவம் பொறுக்கமுடியாததனால் தான் என்றான்.

* * * * * * *

பார்வதிக்கு மற்றொரு பெயர் அன்னபூரணி. இந்த அன்னபூரணியை பரமசிவன் ஏன் மணந்து கொண்டான் என்று ஒரு கேள்வி பிறந்தது. இதற்குக் கவி ஒருவர் பின்வருமாறு பதிலளிக்கின்றார் :—

தனக்கு இருப்பது 5 முகங்கள். தன்னுடைய பிள்ளைகளில் ஒருவனுக்கு யானை முகம். மற்றொருவனுக்கோ ஆறு முகங்கள். ஆகவே பதினொருமுகங்களுக்கும் யானைக்கும் திகம்பரன் அதாவது அணிவதற்கு ஓர் ஆடைக்கும் வழியில்லாத பரமசிவன், எவ்வாறு உணவளிப்பான்? அதனால் தான் வீட்டில் அன்னத்தைப் பூரணமாக அளிக்கவல்ல அன்னபூரணியை மணந்தான். அவள் இல்லாமல் பரமசிவன் எவ்விதம் வாழமுடியும்?

* * * * * *

பூரி, ஜகந்நாதராலயத்தில் உள்ள விக்ரகம் கேவலம் ஒரு மரக்கட்டை. இதைக்கண்ட ஒரு புலவருக்கு ஏன் இந்த மஹாவிஷ்ணுவானவர் ஸ்மரணையற்ற ஒரு மரக்கட்டையாக விளங்க வேண்டும் என்ற ஒரு சந்தேகம் பிறந்தது. சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்தபின், பின் வரும் காரணத்தைக் கண்டுபிடித்துக் கூறினார் :—

பூதேவி, ஸ்ரீதேவி, என்ற இருவர்களையும் மனைவியாகப் பெற்றார். இவர்களில் பூதேவியானவள் இயற்கை அழகில் மோகித்தவளாய் நிற்கின்றாள். ஸ்ரீதேவியோ மிகுந்த சஞ்சல ஸ்வபாவம் கொண்டவளாக இருக்கின்றாள்; ஒரு இடத்திலும் நிலைத்து நிற்பதில்லை. அவருடைய பிள்ளைகளில் ஒருவனாகிய மன்மதன் உலகங்களையெல்லாம் ஜயிக்கின்றவனாய், கட்டுக் கடங்காதவனாய் இருக்கின்றான். இவர்களைப் பற்றிய கவலை ஒருபுறமிருக்க படுக்கையோ பாம்பு, படுக்குமிடமோ சமுத்திரம், ஏறிச் செல்லும் வாகனமும் அந்தப் பாம்பைக் கொல்லும் கருடன். இவ்வாறு உள்ள குடும்ப நிலைமைகளையெல்லாம் யோசித்துப் பார்த்துப் பார்த்து ஸ்மரணையற்ற மரக்கட்டை போல் ஆகிவிட்டனரோ இந்த முராரி! என்று வருணிக்கிறார்.

V. K. ஜானகி,
மூன்றும் படிவம், 'உ' பிரிவு.

உத்தமர்

மக்கள் உலகில் பிறந்துவிட்டால் மட்டும் போதாது; நல்லொழுக்கம் உடையவர்களாகவும் நடந்துகொள்ளவேண்டும். ஒழுக்கமே உயர்வைத் தரவல்லது. இதனை உயிரைக் காட்டிலும் சிறந்ததாக மதித்துக் கைக்கொள்ள வேண்டும். நமக்குத் துணையாக இருப்பதும் ஒழுக்கமே ஆகும். உயர்குடிப் பிறப்பினாலேயே மட்டும் ஒருவன் சிறந்தவனாக ஆக இயலாது. ஒழுக்கமே உயர்குடிப் பிறப்பாகும். உயர்குலத்தில் பிறந்தவன் ஒழுக்கம் தவறி நடப்பின், அவன் இழிந்தவனாகக் கருதப்படுவான். ஒழுக்கம் கெட்டவன் உயர்வை அடைய இயலாது. ஒழுக்கம் கெடுவதினால் இழிவே உண்டாகும். எய்தாப் பழி ஏற்படும். நன்மை வளர்ப்பதற்கு நல்லொழுக்கம் விதை போன்றதாகும்; மக்கள் இந்த ஒழுக்கத்திலிருந்து தவறாது நல்வழியில் நடக்க வேண்டும்.

நன்னடக்கை என்றாலும், ஒழுக்கம் என்றாலும் ஒன்றுதான். ஒழுக்கமுறைகளைப் பல்வேறு முறைகளில் பெறலாம், முதலாவது "கடவுள் ஒருவர் உண்டு. அவர் நாம் செய்யும் நன்மை, தீமைகளைக் கவனித்து வருகிறார்" என்று அறிந்து பாவ, புண்ணியங்களுக்குப் பயந்து நடக்கவேண்டும்; காலை, மாலை கடவுளைத் தொழ மறத்தல் கூடாது. எக்காரணம் கொண்டும் பொய்பேசுதல் கூடாது. "சரீர அழுக்கை நீரினால் சுத்தப்படுத்திக்கொள்ளலாம்; மன அழுக்கைப் பொய் பேசாமையாகிய குணத்தால் சுத்தப்படுத்திக்கொள்ளலாம்" என்பது பெரியோர் துணிபாதலின் மெய்ம்மையே பேசவேண்டும். ஒருவர் செய்த நன்றியை எக்காரணத்தினாலும் மறத்தல் கூடாது. இதையொட்டியே வள்ளுவர்,

> "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
> அன்றே மறப்பது நன்று."

என்றார். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது நம்நாட்டுப் பழமொழி. இந்நன்றியை மறத்தலினால் ஏற்படும் பாவத்தைப் போக்குவதற்குப் பிராயச்சித்தமே இல்லை என்று கூறப்படுவதினால் செய்ந்நன்றியை மறத்தல் ஆகாது.

பிறர் செல்வத்தை அபகரித்தல் கூடாது. பிறர் பொருளை வேப்பங்காயைப்போல் வெறுக்க வேண்டும். பிறரைக் கண்ட இடத்தில் இனிமையாகவும் காணாத இடத்தில் அவரைப் பற்றிப் பழிப்பவராயும் நடந்து கொள்ளக் கூடாது. அயலார், நண்பர், பகைவர் ஆகிய முத்திறத்தாரிடத்தும் நியாயத்தினின்றும் தவறி நடக்கக்கூடாது. பிறர் நம்மைத் திட்டினாலும், நாம் அவரைத் திட்டலாகாது. பொறுமையோடு இருக்கவேண்டும். பிறருக்குத் தீமை செய்ய எண்ணக்கூடாது. பிறருக்கு வரும் தீங்கை நீக்க முந்தவேண்டும். நல்ல நட்பை மேற்கொள்ளவேண்டும். தீய நட்பை ஒருவி நிற்கவேண்டும். தாய், தந்தையார், பெரியோர் முதலியவர்களிடம் வெகு மரியாதையுடன் நடந்து கொள்ளவேண்டும். அவர்களின் வார்த்தையைத் தட்டி நடக்கக்கூடாது. பெரியோர்கள் கூடிய சபையில் அடிக்கடி சிரித்தலும், ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளுதலும், வெளியே எழுந்து போதலும் கூடாது. பிறர் இரகசியம் பேசுகையில் அதனை ஒற்றிக் கேட்டல் ஆகாது. வீதியில் போகிறவர்களைக் கைதட்டிக் கூப்பிடலாகாது. அப்படி அவர்களோடு பேசவேண்டி இருந்தால் அருகே விரைந்து சென்று பேசவேண்டும்.

அங்க ஹீனர், வியாதியாளர், படியாதவர், குருபிகள், தரித்திரர்கள் முதலியவரைக் இகழ்ந்து பேசிப் பரிகசித்தலாகாது. பெரியோர்கள் நித்திரை செய்யும்போது அவசியம் இருந்தாலன்றி அனாவசியமாக அவர்களை எழுப்பலாகாது. கல்வியில் கருத்தைச் செலுத்திக் கற்றல் வேண்டும். உலக நடையை அறிந்து அதற்குத் தகுந்தபடி நடத்தல் வேண்டும். இதையறிந்தே,

> "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்"

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அறிவை நாளுக்குநாள் பெருக்கிக்கொள்ள வேண்டும். இவை போன்ற செயல்களே நல்லொழுக்கத்திற்குக் கருவிகளாம். இங்ஙனம் ஒழுக்கத்தினின்று தவறாமல் நடப்பவர்கள் நல்ல குடிப் பிறப்பை அடைவார்கள். அவர்கள் வாழ்வு உலகத்தில் நீடித்திருக்கும். அவர்களுக்குச் செல்வமும், அழகும், செல்வாக்கும், கல்வியும், பெருகும்; இம்மையில் புகழும், மறுமையில் நற்கதியும் ஏற்படும் என்பது நிச்சயம். இத்தகைய நல்லொழுக்கங்களே ஒருவரை உத்தமராக்கும் குணங்களாம்.

ரதிதேவி,
ஐந்தாம் படிவம், 'உ' பிரிவு.

ரயில் விபத்து

வானம் இருண்டு கொண்டு வந்தது. நல்ல மழை கொட்டப்போகிற தென்பதற்கு அறிகுறியாக ஆகாயத்தில் கருமேகக்கூட்டங்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தன. தன் டியூட்டிக்குச் செல்லுவதற்காகக் கிளம்பிக்கொண்டிருந்தான் முருகேசன்.

"வானம் இப்புட்டு இருட்டிக்கிட்டு வர்ரது...நல்ல மழை கொட்டப்போவுது... இந்தச்சமயத்திலே நீங்க இன்னிக்குப் போவாட்டி என்ன ?'... என்று கேட்டுக் கொண்டே வந்தாள் கண்ணம்மா—முருகேசனின் மனைவி.

" கண்ணம்மா !... இன்னிக்குப் போவாட்டா என்ன ஆகும் தெரியுமா ?... என் வேலையே போயிடும்... இந்த மாதிரி மழை நாளிலேதானே முக்கியமாக நான் அங்கே இருந்து வேலை செய்யணும் !... இந்தச் சமயத்திலே நான் வீட்டிலே நிக்கமுடியுமா ?..."

" ஆமாம் !... வீட்டிலே நிக்க வேணும்'... நல்லா போங்க... நல்லமழை கொட்டட்டும்... நாளைக்குக் காலையிலே கூட வீட்டுக்கு வரமுடியாம போவட்டும்; உங்களுக்கென்ன ?... நீங்க நிம்மதியாத்தான் இருப்பீங்க... நான்தானே வீட்டுலே கவலைப்பட்டுக்கினு இருக்கப்போறேன்..." புடவை முந்தானையால் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

" இதோ பாரு கண்ணம்மா ! அசட்டாட்டமா அழுவறியே... இந்த மாசக்கடைசியிலே எங்களுக் கெல்லாம் போனஸ் கொடுக்கப் போறுங்க... ரயில்வே அதிகாரிங்க... இந்தச் சமயத்திலே நான் என் வேலையைச்சரியா செய்யல்லேன்னு அவங்களுக்கு என்மேலே என்ன எண்ணம் விழும்...நீயே யோசிச்சுப்பாரு... நான் எப்படியாவது காலையிலே வந்துடுவேன்... நீ கவலைப்படாம இரு..." என்று சொல்லித்தன் மனைவியைத் தேற்றி ஒருவாறு சமாதானப்படுத்திவிட்டு தன் வேலைக்குக் கிளம்பினுன் முருகேசன். பாதிவழிகூட சென்றிருக்கமாட்டான் அவன். அதற்குள் சிறிதாக இருந்த தூற்றல் படபடவென்று கனத்தது. மழை கொட்ட ஆரம்பித்தது. ஓட்டமும் நடையுமாக வேகமாகச் செல்ல ஆரம்பித்தான் அவன்.

* * * * * *

தண்டவாளங்களின் திருப்பங்களில் இரவு வேளைகளில் ரயில் வண்டிகள் வரும் போது, அவற்றிற்குத் தண்டவாளங்களின் திருப்பத்தை ஒரு சிகப்பு விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு காட்டித் தெரியச்செய்வதற்கான வேலைக்கு ரயில்வே அதிகாரிகளால் நியமிக்கப்பட்டிருந்தான் முருகேசன். ரயில் தண்டவாளம் வளையுமிடத்திற்குச் சற்றுத் தூரத்தில் ஒரு குடிசையும் அவனுக்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. இரவு முழுவதும் அங்கே உட்கார்ந்திருந்து, வண்டிகள் வரும்போது ஓடிப்போய் சிகப்பு விளக்கு வெளிச்சத்தைக்காட்டி ரயில்வண்டிக்குப் பாதையின் வளைவைக் காட்டவேண்டியது முருகேசனின் அன்றாட வேலை. அவனுக்கு வேலை கொடுக்கப் பட்டிருந்த ஊருக்குப்பக்கத்திலிருந்த ஒரு கிராமத்தில் அவனுக்காக ஒரு சிறு ஓட்டு வீட்டையும் கொடுத்திருந்தனர் ரயில்வே அதிகாரிகள். தினமும் காலையில் வீட்டிற்கு வந்துவிட்டு மாலை இருட்டுவதற்குள் டியூட்டிக்கு வந்து விடுவான் முருகேசன். பொழுது விடிந்ததும் திரும்பவும் தன் வீட்டிற்குச் சென்றுவிடுவான்.

2

முதல் நாள் ஆரம்பித்த மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தான் முருகேசன். எங்கும் ஒரே ஜலப்பிரவாகமாயிருந்தது. அந்தக் கொட்டு மழையில் சற்று தூரத்தில் ஒரு மாட்டு வண்டி மட்டும வந்து கொண்டிருந்தது. மெள்ள மெள்ள அருகே வந்த அந்த வண்டி முருகேசனைக்கண்டதும் சட்டென்று நின்றது. வண்டியிலிருந்து கீழே குதித்தான் வண்டிக்காரன்.

" ஐயா !... உனக்குப் புண்ணியம் உண்டு. இன்னிக்கு ஒரு இரவுமட்டும் நீ இருக்கற இடத்திலே இருக்க எனக்குக் கொஞ்சம் இடம் கொடேன். நாளைக்குக் காலையிலே எழுந்ததும் போயிடறேன்......" என்று முருகேசனிடம் மன்றாடினான் அவன்.

" அட போய்யா !... இந்தச் சின்ன குடிசையிலே நான் ஒருத்தன் இருக்கறதே பெரிய காரியமாயிருக்கு...அதுலே நீ வேறே வந்துட்டயாக்கும்... வேறே எங்காயாவது போயிக்கோப்பா..." என்று கண்டிப்பாகக்கூறினான் முருகேசன்.

" ஐயா ! ஐயா !... கொஞ்சம் தயவு பண்ணுய்யா !... நான் உனக்கு இடைஞ்சலில்லாம ஒரு மூலையிலே ஒண்டிக்கினு இருக்கேன்..." என்று காலில் விழாக்குறையாகக் கெஞ்சினான் வண்டிக்காரன்.

" சரி போனால் போறது... உள்ளே வா..." என்று கூறி அவனை உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான் முருகேசன்.

பக்கத்து ஊர் சந்தைக்குத் தான் ஏதோ வியாபார விஷயமாக வந்ததாகவும், திடீரென்று நல்ல மழை கொட்டி எங்கும் ஜலப்பிரவாகமாகி விடவே இன்று

மட்டும் தான் இங்கே தங்கிப் போக வந்திருப்பதாக வும் கூறினன் வண்டிக்காரன். பின்பு சிறிது நேரம் இருவரும் ஏதேதோ விஷயங்களைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தனர்.

இரவு மணி எட்டு. வானமே இடிந்து விழுந்து விடுமோ என்று பயப்படும் படியாகப் பயங்கரமாகக் கொட்ட ஆரம்பித்தது மழை. எங்கும் கும்மிருட்டு. கண்ணைப்பறிக்கும் மின்னல். அண்டமே அதிரும் படியான இடிமுழக்கம். நடு நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர் முருகேசனும், வண்டிக் காரனும்.

இரவுமணி டன்னிரண்டு. மெள்ள கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்தான் முருகேசன். 'பளிச்' சென்று ஒரு மின்வெட்டு கண்ணைப் பறித்தது. அந்த வெளிச்சத்தில் சற்று தூரத்தில் அவன் கண்களுக்குத்தென்பட்டது அந்தக் காட்சி. ரயில் தண்டவாளங்களின் ஒரு பகுதி ஜலப்பிரவா கத்தினுல் அடித்துக் கொண்டு போகப்பட்டிருந்தது. சந்தேகம் தெளிய மெள்ள அருகே சென்று பார்த் தான் அவன். ஆம்! சந்தேகமே இல்லை. தண்ட வாளம் பெயர்ந்து கிடந்தது உண்மை தான். என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பித் தவித்துக் கொண்டே குடிசைக்குள் வந்தான் அவன். வண்டிக் காரனிடமும் விஷயத்தைச் சொன்னுன்.

திடீரென்று இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கேட்டது அந்த ஓசை. தூரத்தில் 'ஜிகு' 'ஜிகு' வென்று ரயில்வண்டி வரும் சப்தம்; ஒவ் வொரு நாள் இரவும் அந்த நேரத்திற்கு வழக்கமாக வரும் எக்ஸ்பிரஸ் வண்டிதான் அது. கனவேக மாகக் காற்றைக்கிழித்துக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தது அது. பரபரவென்று எழுந்தான் முருகேசன். சிவப்பு விளக்கையும், தீப்பெட்டியை யும் எடுத்துக்கொண்டு வெளியே ஓடினுன். அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது எக்ஸ்பிரஸ். சிவப்பு விளக்கைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே நின்றுன் முருகேசன். 'தட' 'தட' வென்ற சப்தத் துடன் ஓடிவந்து கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் நிற்கா மல் தண்டவாளம் பெயர்ந்திருந்த இடத்தைத் தாண்டி ஓடிவந்தது. அடுத்தகணமே 'தடால்' என்று பயங்கரமான சப்தத்துடன் கவிழ்ந்து விட்டது. சிவப்பு விளக்கைத் தூக்கிப்பிடித்தவாறு நின்று கொண்டிருந்த முருகேசன் பயத்தாலும், திகைப்பாலும் கல்லாய்ச்சமைந்து நின்று கொண்டிருந்தான்.

3

ரயில் விபத்து நடந்த மறுநாள். பகல்வேளை தன் மனைவி கண்ணம்மாவுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தான் முருகேசன்.

"ஆமாம்! நேத்து திடீர்னு ரயில் கவிழ்ந்திடுச் சாமே... ரொம்ப சேதம் ஏற்பட்டிருக்குமில்லே..."

"ஆமாம் கண்ணம்மா!...நெறயப் பேர் செத்திருப் பாங்க... இந்தப்பாழும் மழையினுலே வந்த கூத்து தான் இதெல்லாம்..."

"நான் கூட நெனச்சேன்... இப்படி நல்ல மழை கொட்டுதே... ரயில் வண்டி யெல்லாம் ஆபத்து ஒண்ணுமில்லாம வாணுமேன்னு... ஆமாம்... நீ அப்போ அங்கேதான் இருந்தே... ரயிலை நிறுத்தி யிருக்கக்கூடாதோ?..."

"நான் என்ன செய்யறது கண்ணம்மா! நான் சிவப்பு விளக்கை நல்லா தூக்கித்தான் புடிச்சேன்."

கண்ணம்மாவும் முருகேசனும் பேசிக் கொண் டிருக்கும் போதே 'தட' 'தட' வென்று வாசற் கதவைத்தட்டும் சப்தம் கேட்டது. ஓடிப்போய் கதவைத்திறந்தாள் கண்ணம்மா. ஐந்தாறு போலீஸ் ஜவான்கள் உள்ளே நுழைந்தனர். அவர்களுடைய வருகைக்குக்காரணம் புரியாமல் முருகேசன் திக்பிரமையடைந்து நின்று கொண்டிருந்தான். அவனுடைய கையில் அவர்கள் விலங்கை மாட்டினர்.

"எதுக்காக என்கையில் விலங்குமாட்டுறீங்க?... நான் என்ன தப்பு செஞ்சேன்?..." என்று தட்டுத் தடுமாறிக் கொண்டே கேட்டான் அவன்.

"போலீஸ்டேஷனுக்கு வாப்பா!... எல்லாம் தெரியும்..." என்று சொல்லிக்கொண்டே முருகேசனை இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினர். ஆச்சரியம், பயம், திகைப்பு முதலிய உணர்ச்சிகளால் ஒருங்கே தாக்கப்பட்ட கண்ணம்மா வீட்டு வாசலில் வாயடைத்து நின்றுள் வேகமாகக்கிளம்பிச் சென்ற போலீஸ் ஜீப்பைப் பார்த்துக் கொண்டே.

4

ரயில் விபத்து நடந்து ஒரு மாதமாகி விட்டது. எஞ்சின் டிரைவர், முருகேசன் இருவரில் யார் குற்றவாளி என்று கண்டு பிடிக்கக் கீழ்க் கோர்ட்டில் விசாரணை நடத்தப்பட்டு முடிவு சொல்ல முடியா மல் ஹைகோர்ட்டிற்குக் கேஸ் கொண்டு போகப் பட்டது.

முருகேசன் தன் பக்கம் வாதாடுவதற்காக ஒரு வக்கீலை ஏற்படுத்தினுன்.

அன்று கோர்ட்டில் விசாரணை நடத்தப் போகும் தினம். திரளான ஜனங்கள் வந்து கூடியிருந்தனர். இன்ஸ்பெக்டர், ஸப்இன்ஸ்பெக்டர், ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் முதலியோர் அவரவர்க்குரிய இடங் களில் அமர்ந்திருந்தனர். கான்ஸ்டபிள்கள் ஒரு புறமாய் நின்று கொண்டிருந்தனர். எக்ஸ்பிரஸ் விபத்துக்குக்காரணமாக இருந்தவர்களான எஞ்சின்

டிரைவரும், முருகேசனும் கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தனர். முருகேசன் நீதிபதியால் விசாரணை செய்யப்பட்டான். அவர் அவனை அநேகக் கேள்விகள்கேட்க ஆரம்பித்தார். அவனும் அவற்றிற்கு விடையளித்துக் கொண்டே வந்தான்.

"முதல் நாள் மாலை முதல் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது உனக்குத் தெரியுமா? தெரியாதா?..."

"தெரியும்..."

"அப்போது நீ எங்கிருந்தாய்?..."

"ரயில்வே அதிகாரிகள் லயனுக்குப்பக்கத்திலே நான் வேலைசெய்யறதுக்குன்னு கொடுத்திருந்த இடத்தில்..."

"தண்டவாளம் பெயர்ந்திருந்ததை நீ பார்த்தாயா இல்லையா?..."

"பார்த்தேன்..."

"தூரத்தில் எக்ஸ்பிரஸ் வந்தது உனக்குத் தெரியுமா? தெரியாதா?..."

"தெரியும்..."

"உடனே நீ என்ன செய்ய வேண்டும்?..."

"சிவப்பு விளக்கைக்காட்ட வேண்டும்..."

"நீ அதைச்செய்தாயா?... இல்லையா?..."

"செய்தேனுங்க... சிவப்பு விளக்கைக் காட்டினேனுங்க..."

"சரி!... உனக்கு யார் சாட்சி..."

"இதோ! இந்த... வண்டிக்காரன்..."

வண்டிக்காரன் எழுந்து நின்றான்.

"ஆமாம்!... முருகேசன் விளக்கைக்காட்டினது உனக்குத்தெரியுமா?..."

"தெரியுங்க... வண்டிவருதுன்னு அவர் விளக்கையும், தீப்பெட்டியையும் தூக்கிக்கிட்டு ஓடினாருங்க..."

அடுத்தாற்போல் டிரைவர் விசாரணை செய்யப்பட்டான்.

"தண்டவாளம் பெயர்ந்திருக்கிறதென்று முருகேசன் காட்டிய சிவப்பு விளக்கை நீ பார்த்தாயா?"

"இல்லீங்க... முருகேசன் சிவப்பு விளக்கைக் காட்டவே இல்லீங்க. காட்டியிருந்தால் நிச்சயமாக நான் நிறுத்தியிருப்பேன்..."

முருகேசனின் பக்கம் வாதாடுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த வக்கீல் எழுந்து நின்றார்.

"வழக்கம் போலவே எக்ஸ்பிரஸ் அன்று வேகமாகத்தான் வந்திருக்கும்... முருகேசன் விளக்கைக் காட்டியிருப்பான்... டிரைவரும் அதைப்பார்த்திருப்பான்... அவன் உடனே ரயிலை நிறுத்த வேண்டுமென்றுதான் எண்ணியிருப்பான்... ஆனால் ரொம்ப வேகமாக வந்து கொண்டிருந்த வண்டியைத் திடீரென்று பிரேக்போட்டு நிறுத்த அவனால் முடியாமல் போயிருக்கலாம். அவனுடைய கண்ட்ரோலுக்கு மிஞ்சிவிடவே ரயில் விழுந்திருக்கும்... இதில் முருகேசன் பக்கம் தவறே கிடையாது..." என்று வாதித்துவிட்டு உட்கார்ந்தார்.

"தக்க ருசு, சாட்சியங்கள், முதலியன கிடைக்காமல், இந்தக் கேஸில் யார்குற்றவாளி என்று கண்டு பிடிக்கமுடியாததால், கேஸைத்தள்ளுபடி செய்கிறோம்..." என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார் நீதிபதி.

டிரைவரும், முருகேசனும் விடுதலைசெய்யப்பட்டனர்.

வீட்டிற்கு வந்து சேர்ந்தான் முருகேசன் வந்ததும் வராததுமாக அவன் குலுங்கக் குலுங்க சிரிக்க ஆரம்பித்தான். கண்ணம்மா விஷயம் புரியாமல் நின்றுகொண்டிருந்தாள். பின்பு முருகேசனே பேச ஆரம்பித்தான்.

"... அந்தக்கோர்ட்டிலே அத்தனை வக்கீலுகளும், போலீஸ் அதிகாரிகளும், நிறையப் படிச்சவங்களும் இருந்தாங்களே!... ஒத்தருக்காவது என்னை இந்த விஷயத்தைக்கேட்கத் தெரிஞ்சுதா? சிவப்பு விளக்கைக் காட்டினயா, காட்டினயான்னு... நானும் காட்டினேன் காட்டினேன்னு பதில் சொன்னேன்... சிவப்பு விளக்குலே வெளிச்சம் இருந்ததா?—அது எரிஞ்சிண்டிருந்ததான்னு அங்கே ஒத்தருக்காவது கேட்கதெரிஞ்சுதா?... மழையினாலே நனைஞ்சு தீக்குச்சி எரியலே, நான் என்ன செய்வேன்? வெறும் விளக்கைமட்டும் காட்டினேன். அது எரிஞ்சுதான்னு கேட்டிருந்தா இல்லேன்னு பதில் சொல்லியிருப்பேன்..." என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்க ஆரம்பித்தான்.

"ஆமாம்!... நீங்க செஞ்சது தப்பில்லையா?... அப்படிச் செய்யலாமா?" என்று கேட்டாள் கண்ணம்மா.

"ஆமாம்... கண்ணம்மா... நானும் அப்படித்தான் நினைச்சேன் முதல்லே. அப்புறம்... ரெண்டு பேருக்குமே தண்டனை கிடையாதுன்னு சொல்லி விடவே நான் கடைசிவரைக்கும் பேசாம இருந்துட்டேன். ஒரு வேளை டிரைவருக்குத் தண்டனை கிடைச்சிருந்தா என் மனச்சாட்சி என்னைக் குத்தியிருக்கும்... நானும் 'விளக்கு எரியலேன்னு' சொல்லியிருந்திருப்பேன்" என்றான் முருகேசன்.

K. R. சாருமதி,
பழைய மாணவி,

राजा श्रीहर्षः

आसीत् पुरा पुष्पभूतिवंश्यः, महापाशुपतः, रक्षिता सतां, निगृहीता दुर्मार्गप्रवर्तिनां, महाराजाधिराजो गुणैरहीनः प्रभाकरवर्धनो नाम। हूणैः प्रशिथिलतां नीतां भारतभुवं असावेव महापुरुषः प्रकृतिस्थामातनोत्। अस्य द्वौ पुत्रौ एका च पुत्री समजायन्त। तेषु ज्येष्ठः राज्यवर्धनः, कनिष्ठः हर्षवर्धनः, ततोऽपि कनीयसी राज्यश्रीः॥

सर्वभक्षकस्य कालस्य महिम्ना उपरतयोः पित्रोः, ज्येष्ठे च कालधर्ममुपगते, कनीयान् प्रभाकरवर्धनस्य पुत्रो हर्ष एव महतीं राज्यधुरामावहति स्म। कान्यकुब्जं प्रधाननगरमधिवसन्नसौ हर्षवर्धनः प्रजानां हर्षवर्धनेन यथार्थनामा समजायत। राज्यं च बहुविस्तृतमकरोत्॥

अस्यैव सदः समलंचकार कविकुलतिलकायितो महाकविः भट्टबाणः। हर्षवर्धन एव "रत्नावली, प्रियदर्शिका, नागानन्द" मिति च नाटकत्रयमारचयामासेति बहुजनवादः। परंतु "ग्रन्थानारचयितुं अलब्धावकाशोऽसौ, स्वयं लब्धवर्णोऽपि सन्, धावकनाम्नः कस्माच्चन कवेः तदीयान् ग्रन्थान् बहुमूल्यप्रदानेन स्वायत्तीकृत्य स्वनाम्ना प्रकाशयामास" इति च किंवदन्ती काचन श्रूयते॥ सर्वथाः--

"उपेयुषामपि दिवं सन्निबन्धविधायिनाम्।
आस्त एव निरातङ्कं कान्तं काव्यमयं वपुः॥"

अस्य च राज्यं प्राच्यां कामरूपं, प्रतीच्यां पञ्चनदं, उत्तरतः हिमालयं, दक्षिणतो नर्मदां च अभिव्याप्य स्थितम्। स्वयं बौद्धमतावलम्बी सन्नपि नान्यस्मिन् द्वेषमाबबन्ध। कोशस्थं सर्वमपि धनं पण्डितसादकरोत्। तदैव मगधेषु नळान्दा द्राविडे काञ्ची च विख्यातविद्यास्थाने अभूताम्। प्रतिपञ्चवर्षं पण्डितसभामकारयत्। सर्वमतस्थाश्च तत्र संमिलिता आसन्॥

अस्यैव पालनावसरे "ह्यून्सान्" नाम चीनयात्रिक आगतः। तस्य बुद्धमतग्रन्थानां परिशीलनमेव कर्म। स त्रयोदश वर्षाणि तत्र तत्र भ्रमन् राज्ञो द्वितीयं हृदयमासीत्। स्वदृष्टं सर्वमपि पुस्तकरूपेणालिखच्च। स च हर्षराज्यभारमेवं स्तौति। "जनाश्च धनिनः स्वधर्मं नैव परित्यजन्ति। हर्षः सर्वमपि राज्यकार्यं स्वयमेवावलोकयति। सापराधेषु तीक्ष्णदण्डो भवति" इति। एवं सर्वमतानिरीक्षकः सर्वशास्त्रार्थपारङ्गतः सकलविद्वज्जनचकोरचन्द्रायितश्च स राजर्षिः रामराज्यमिव स्वराज्यमकरोदिति ज्ञायते॥

K. JANAKI,
V Form, 'B'.

॥ भीष्मकथा ॥

पुरा हास्तिनपुरे शन्तनुर्नाम राजाऽभवत्। केनापि निमित्तेन तस्य गङ्गादेवी जाया समजायत। तस्यां देवव्रतो नाम सूनुः जातः। एकदा शन्तनुः मृगयार्थं यमुनातीरं जगाम। अथ श्रान्तः स राजा तरुच्छायामवाप। तदा अधिकं सौगन्ध्यं कुतश्चित् समाघ्राय तत्प्रभवं जिज्ञासुः निर्ययौ। तत्र कामपि दाशकन्यां दृष्ट्वा तां सत्यवतीनाम्नीं ज्ञात्वा तस्याः रूपेण मोहितः तां चकमे।

दाशकन्यया सत्यवत्यैव सह दाशराजान्तिकं प्राप्य तां भार्यार्थं अयाचत। सोऽपि "देव भाग्येनैव भवति भवादृशो जामाता। किन्तु भवान् अस्यां जातायैव कुमाराय राज्यं यच्छसि यदि तदाहं अनुजानामि अस्याः पाणिं गृहीतुम्" इति अभाणीत्। तदाकर्ण्य दुःखितः स राजा स्वनगरं प्रत्यागच्छत्। दैन्याक्रान्तहृदयो राजा कालं यापयति स्म।

एकदा देवव्रतः दैन्यवन्तं पितरं विलोक्य एवं ययाचे "तात! किन्निमित्तं भवान् शोकसागरमग्नः? तदहं ज्ञातुमिच्छामि। विदित्वा प्रतिकुर्याम्" इति। राजा तूष्णीमासीत्। अन्ते सूतस्य वचनेन दाशकन्यासक्तं राजानं अजानात्।

तदैव दाशसमीपं प्रययौ। पितुः कृते तां दाशकन्यां अयाचत च। सोऽपि अस्यां जातः एव कुमारः राज्ये अभिषेक्तव्यः इति समयं याचते स्म। देवव्रतश्च तत्तथैवास्तु। अद्य प्रभृति यावज्जीवं ब्रह्मचारी भविष्यामि। इयं कन्या दीयतां मत्पित्रे इति अयाचत।

दाशराजेनानुज्ञातः देवव्रतोऽपि शीघ्रमेव रथमारुह्य तां हस्तिनां प्रापयत्। विज्ञापयामास च पितरं "पितः! समानीता हृदयङ्गमा दाशकन्या" इति।

तदा "अनेन दुष्करं कर्म कृतं, तेन अयं भीष्मः" इति गगनचारिणी वाणी समभूत्।

तदाप्रभृति सः भीष्मः इत्येव समाहितोऽभूत्। शन्तनुरपि तस्मै स्वच्छन्दमरणं वरं प्रददौ। पितुः छन्दानुवर्तनमेव पुत्रधर्मः॥

B. V. LALITHA,
V Form, 'B'.

भगवान् वाल्मीकिः

"स्वकृतिं गापयामास कविप्रथमपद्धतिम्" इति कविकुलललामभूतस्य कालिदासस्य मुखात् निःसरन्तीं सूक्तिं अनुसृत्य, वेदेभ्यः अनन्तरं छन्दोबद्धा सरस्वती प्रथमं वाल्मीकिमुखादेव निर्गलितेत्यवगम्यते। कविकुलशेखरीभूतः धाराधिराजो भोजराजोऽपि "मधुमयफणितीनां मार्गदर्शी महर्षिः" इति भगवन्तं वाल्मीकिं अभिष्टौति। तथा च प्रथमं लोके आदिकविः असावेव महात्मा, ततश्च आदिकाव्यं श्रीमद्रामायणमेव।

कोऽसौ महात्मा, किंप्रभवः, किमस्य पूर्वं कर्म, कथमिदमादिकाव्यं आरचितं अनेन इत्येवमादीनि वस्तूनि विचारयामः।

आसीत् पुरा प्रचेता नाम कश्चन ब्राह्मणः। तस्य ऋक्षो नाम तनयः जज्ञे। स च शास्त्राणि अनभ्यस्यन्, शीलमपालयन्, सज्जनाचरितं पन्थानं अननुसरन्, स्वेच्छाचारी दस्युभिः सङ्गममवाप्य स्वयमपि स्तेनीभवन् स्तेये कर्मणि परं नैपुण्यं अवाप्तः, तेन वर्तयन् अवर्तत।

एवं गच्छति काले महारण्ये क्वचित् केचन मुनयः तीर्थयात्रायै गच्छन्तः ऋक्षस्यास्य दर्शनपथं अवतीर्णाः। अयं च तान् अनुद्रुत्य निरुन्धन् 'सर्वमपि अत्र निक्षिप्य गच्छथ' इति तान् निरभर्त्सयत। ते च तेजस्विनमपि क्रूरकर्माणं एनमभिवीक्ष्य दयाविष्टमनसः "ब्राह्मणोऽपि सन् किमर्थं कुत्सितं कर्म करोषि" इति अपृच्छन्। स तु "कुटुम्बनिर्वहणार्थमेव कुत्सितं कर्म करोमि" इति प्रत्यब्रूत। ते पुनश्च एनं "त्वया संपादिते वित्ते यथा ते कुटुम्बिनः भागिनः तथा तव पापकर्मण्यपि ते भागिनः किं"? इति जानीहि तावत्। वयमत्रैव तिष्ठामः, इत्यब्रुवन्। ऋक्षः गत्वा यदा स्वकुटुम्बिनः इमं विषयमधिकृत्य अपृच्छत्, तदा ते एनं अभिवीक्ष्य निर्दयं "त्वदार्जिते वित्ते एव अस्माकं भागः, न पुनस्ते पापे कर्मणि"। इति प्रत्यवदन्। श्रुत्वैतत् सुतरां निर्विण्णो ऋक्षः प्रत्यागत्य महर्षिषु सर्वं यथावृत्तं न्यवेदयत्। अनन्तरं मुनयः अस्मिन् अतिमहतीं करुणां आवहन्तः एनं उपवेश्य तारकं "रामनाम" उपादिशन्। "राम" इति अक्षरद्वयात्मकमपि तारकं मन्त्रं सुष्ठु गदितुं अशक्तमेनं अभिवीक्ष्य तमेव मन्त्रं "मरा" इति अधरोत्तरं उपदिश्य, तेषां प्रत्यागमनावधि तेन तत्रैव स्थित्वा स एव मन्त्रो जप्यः नान्यत् कर्म करणीयं इति समयं कृत्वा अगच्छन्।

ऋक्षश्च एकाग्रमनाः कालमनाकलयन्, अचिन्तयन् अशनापिपासे, तमेव मन्त्रं जजाप। एवं गच्छति काले तस्योपरि वल्मीकः समुदभूत्। तदप्यजानन् सः एकाग्रेण चेतसा तारकं जपन् अतिष्ठत्।

अतिमहता च कालेन प्रत्यागत्य ऋक्षं मार्गयन्तः मुनयः यदा तं न अपश्यन्, तदा कुतश्चित् वल्मीकात् सुधामधुरं तारकनाम शृण्वन्तः अत्रैवासौ वर्तते इति निश्चित्य अस्य दृढां भक्तिं दृढसंकल्पं च प्रशंसन्तः "वाल्मीके! जपं परिसमाप्य, उत्तिष्ठ। यस्मात्त्वं इदानीं वल्मीकादुत्थितः ततो वाल्मीकिरित्येव इतः परं ते लोके प्रथा भविष्यति"। इति तं अनुगृह्य यथागतं जग्मुः।

तारकमन्त्रस्य उच्चारणेपि असमर्थः पूर्वं य आसीत् ऋक्षः स एव पश्चात् जगत्प्रसिद्धस्य कविमार्गप्रदर्शकस्य महाकविकुलप्रशंसितस्य महाप्रबन्धस्य रामायणाख्यसूक्तिरत्नस्य प्रणेता भगवान् वाल्मीकिः इत्यहो रामभक्तेः प्रभावः।

वाल्मीकिगिरिसंभूता रामसागरगामिनी।
पुनातु भुवनं पुण्या रामायणमहानदी॥

S. S. VIJAYALAKSHMI,
V Form, 'B'.

हमारी राष्ट्रभाषा हिन्दी

जो भाषा एक बडे देश की शिष्ट भाषा हो और जिन मे राज्य वा कारोबार तथा साहित्यकार के साहित्य रचना हो वही राष्ट्र-भाषा मानी जाती है। भारत एक बडा देश है। इस में प्रत्येक प्रान्त की भाषा भिन्न है। हर एक प्रान्त में कई बोलियाँ हैं। इन प्रान्तीय भाषाओं और बोलियों का अस्तित्व तो रहेगा ही तो भी देश भर के लिए एक सर्वमान्य सर्व प्रचलित एक राष्ट्र-भाषा रहेगी वहीं अन्तर प्रान्तीय सम्बन्धों के निर्वाह का माध्यम होगी।

भारत में राष्ट्र-भाषा की आवश्यकता:—हमारे हिन्दुस्तान पर जब अंग्रेज लोग शासन करते थे तो देश में सम्पूर्ण कार्य क्रम अंग्रेजी में होता था। वही अन्तर्प्रान्तीय सम्बन्धों का माध्यम थी। इसलिए स्कूलों में अंग्रेजी की शिक्षा दी जाने लगी। लेकिन अंग्रेजी पढ़े-लिखे लोगों की सख्या बहुत कम है। एक प्रान्त के आदमी दूसरे प्रान्त के आदमी की भाषा को समझ न पाते। इसी कारण से आपस में प्रेम भी नहीं बढता। मद्रास के लोगों के लिए पंजाब के लोग अजनकी पाते है जैसे योरोपीय हो। अब देश को एकता के सूत्र में बांधने के लिए एक देशी राष्ट्र-भाषा को अपनाना चाहिए।

सभी भाषाऐं राष्ट्र-भाषा का पद नहीं पा सकतीं। उसके लिए कई सामान्य गुणों की आवश्यकता होती है। (१) देश में प्रचलित होना चाहिए। (२) उसे सीखने व बोलने में कठिनाई न हो। (३) प्राचीन भाषा होना चाहिए (४) उस भाषा का सम्बन्ध देश की संस्कृति तथा सभ्यता से होना चाहिए। (५) उसकी लिपि सुन्दर तथा वैज्ञानिक होना चाहिए।

हिन्दी एक विस्तृत भाषा है। सारे उत्तर भारत में यह भाषा बोली तथा समझी जाती है। संयुक्त प्रान्त राजपुताना, मध्य प्रान्त, विहार आदि की शिष्ट भाषा है। सम्युक्त प्रान्त होमानो इसका घर है। संस्कृत से ओत प्रोत होने के कारण इस में बंगला, मराठी, गुजराती आदि आर्य भाषा ओं की समानता पातें है। भारत में प्राय प्रधान नगरों में हिन्दी भाषा भाषी जनता की संख्य बहुत है। इस विशाल देश में एक कोने से दूसरे कोने तक इसका ही अधिकार है। इस दृष्टि से हिन्दी की समता कोई भाषा नहीं कर सकती।

हिन्दी भाषा की जैसी सरल भाषा और कोई न होगी इसे सीखने में समय ही कम लगता है। अगर विदेशी भी यहाँ आवे थोडे समय में काम चलाऊ भाषा सीख लेता है। एक मद्रासी जितनी आसानी से हिन्दी सीख लेता है उतनी आसानी से हिन्दी भाषा भाषी, मलयालम, तेलुगु, तमिल, कन्नड आदि नहीं सीख सकता। राष्ट्र-बाषा प्राचीन भाषा ही बन सकती है। कोई नवीन भाषा राष्ट्र-भाषा नहीं बन सकती। जो भाषा जाति की उत्थान-पतन देख चुकी है और जिस भाषा में जाति की आशा, आकांक्षा तथा भावनाऐं है वही राष्ट्र-भाषा हो सकती है। भाषा को कोई इतिहास न होतो वह देश को प्रेरणा नहीं दे सकती। हिन्दी तो बहुत प्राचीन भाषा है। इसका आरंभ दसवीं सदी मे ही हो गया है। इसका साहित्य आज प्रगति पथ पर असर है। यह जनता की भाषा होने के कारण सदैव विरोध होने रहने पर भी इसकी गती रुकी नहीं है। चन्द विध्यपति, सूर, जायसी, बिहारी, भूषण तुलसी प्रेमचन्द और आजकल के प्रसिद्ध कवि मैथली शरण गुप्त आदिने इसके भाण्डार को रत्नप्रदान किए है।

हिन्दी ने संस्कृत ग्रन्थों की परंपरा का अनुसरण किया है। हिन्दी के बडे ग्रन्थ प्रथ्वी राज रासो पद्मावत, सूर सागर रामचरित मानस वगैरह में हिन्दी सभ्यता की झलक हैं। भारतीय धर्म, भारतीय कला, भारतीय दर्शन इत्यादि का पूरा प्रतिबिम्ब है। हमारे साहित्य पर हमारी रहन-शहन धार्मिक, सामाजिक, राजनीतिक आदर्शों की छाप है।

हिन्दी भाषा की लिपि देवनागरी है। इस में एक लिपि के लिए कई चिन्ह नहीं है। और उर्दु की तरह रेखाओं की लिपि भी नहीं है। और लिखने में भी शीघ्रता होती है। इस लिए लिपि की दृष्टि सें भी हिन्दी राष्ट्र-भाषा बन सकती है।

अतएक हमारे देश के लिए हिन्दी ही राष्ट्र भाषा बनने लायक है।

S. Meenakshi,
VI Form, 'C'.

Keep fit
Keeping fit is an essential pre-requisite to healthy living. The game of basket-ball contributes a great deal to promote health. As the oldest manufacturers of Sports Goods and the Founders of Sports Goods Industry in India, the benefit of several years of our experience in turning out faultless materials is at the disposal of the discerning Sportsman, who rates the high quality in choosing the products made by
Uberoi
LIMITED
- BRANCHES THROUGHOUT INDIA -
FOUNDERS OF THE SPORTS GOODS INDUSTRY IN INDIA
22, Mount Road, MADRAS - 2.

PRESIDENT
VEGETABLE
HAIR OIL
GROWS
LOVELY
HAIR.
CHOICE OF
LOVELY WOMEN
RATHOD TRADING CO. MADRAS. I.

Metro Sports

WE HAVE

No unnecessary overhead expenses to make our prices fabulous. You can therefore safely rely upon the quality of our products for full value and complete satisfaction. It will be a great pleasure to us to serve you.

METRO SPORTS

Makers of High Class Sports Goods.

3-30, Mount Road, MADRAS - 2.

For the

TEACHING OF SCIENCE

IN

SCHOOLS - COLLEGES.

The Andhra Scientific Co., Ltd., are proud to have served the educational needs of the province for over 25 years. Their long and varied experience in planning and equipping up-to-date laboratories for physics, Chemistry, Biology, etc. have placed them in an unique position in the Indian Scientific Industry.

They have earned a reputation as manufacturers and stockists of a wide range of Scientific Apparatus, Instruments, Laboratory Chemicals etc. for Schools and Colleges. Enquiries are solicited for catalogue containing detailed specifications of demonstration apparatus for teaching general science in Forms I—VI. Apparatus and Equipment for Advanced Scientific Course.

Please write to:

THE ANDHRA SCIENTIFIC COMPANY LIMITED.

4, BLACKER'S ROAD, MOUNT ROAD, MADRAS-2.

Head Office & Works : MASULIPATAM

Branches : BOMBAY, HYDERABAD, CALCUTTA & VIZAGAPATAM.

Agents : CUTTACK, DELHI & COLOMBO.

PLEASE CONSULT

MODERN ARCHITECTS & ENGINEERS

447, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS-5.

FOR DESIGNS OF

RESIDENTIAL
PUBLIC
INDUSTRIAL
COMMERCIAL &
COMMUNITY } BUILDINGS

DRAWINGS OF

CORPORATION
MUNICIPAL } PLANS FOR SANCTION

LAY-OUTS OF

PRIVATE AND
CO-OPERATIVE } HOUSING SCHEMES

ESTIMATES OF

COST
QUANTITIES
CEMENT &
STEEL, ETC. } MATERIALS REQUIRED

SUPERVISION OR
CONTRACTS OF
CONSTRUCTIONS

Post Box No. 2.

TELE { Grams: "SYPHON"
Phone: 80751 (Extn. 23)

LABORATORY EQUIPMENT

For details, please write to:

THE CENTRAL SCIENTIFIC SUPPLIES CO. LTD.,

2, AGARAM ROAD, TAMBARAM.

Suppliers to Schools, Colleges, Research Laboratories, Polytechnic Institutions, Hospitals etc. etc.

Branches:

BANGALORE TRIVANDRUM MADRAS

Telegrams : "ADVANCE" Telephone : 86396

SCIENTIFIC ADVANCE COMPANY

87, APPARSAWMI KOIL STREET,

MYLAPORE, MADRAS-4

Post Box 616

Specialists in

Physical, Chemical and

Biological Apparatus and

Pure Chemicals and

Suppliers to the

NATIONAL HIGH SCHOOL FOR GIRLS & BOYS, TRIPLICANE.

Other Schools, Colleges, Universities,

Industrial and Research Laboratories

Throughout South India.

Printed by C. Krishnamurthi at the Ramakrishna Printing Works, 19 B, Woods Road, Madras-2.
and Published by Sri N. K. Tirumalachariar at the National High School (Girls) Triplicane.
Editor S. SAROJINI.